கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(25.03.2018 - 25 பங்குனி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 08, கதிர் - 180, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018


# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

# இயேசுவின் அடக்கம் புதிய விடியலின் தொடக்கம்

## இயேசு உயிர்த்தெழுந்தார் அல்லேலூயா




## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் உயிர்ப்பு பெருவிழா செய்தி – 2018

மீண்டுமொருமுறை திருவழிபாட்டு ஆண்டின் உச்சக்கட்டமான உயிர்ப்பைக் கொண்டாடி நசரேத்தூர் இயேசுவை உயிர்த்த ஆண்டவரும், மீட்பரும் எனப் பறைசாற்றுகின்றோம். அதன்படி தூதர்களின் வார்த்தைகள் எம் காதுகளில் மீண்டும் ஒலிக்கட்டும், “உயிரோடு இருப்பவரை இறந்தவர் மத்தியில் தேடுவான் ஏன்? அவர் இங்கு இல்லை, அவர் உயிர்த்து விட்டார்” (லூக் 24:5) கிறிஸ்துநாதரின் உயிர்ப்பில் அவர் சாவை வென்று எமக்கு புதிய நம்பிக்கையை அளித்தமைக்காக நாம் அகமகிழ்வோம். கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவானது நாம் பாவத்திற்கும் சுயநலத்திற்கும் மரித்து கிறிஸ்துவில் ஒரு புதிய வாழ்வை தொடங்க எமக்கு அழைப்புவிடுகிறது.

இயேசுவின் மீதான எமது விசுவாசம் எம் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்ட விலைமதிக்க முடியாத கொடையே என்றால் மிகையாகாது. இயேசு கிறிஸ்துவின் மீதான எமது விசுவாசத்திற்காக கடவுளுக்கு நன்றி செலுத்தும் காலமே உயிர்ப்பின் காலமாகும். கடவுள் தம் ஒரே பேறான மகன் மீதான விசுவாசத்தை எமக்கு அளித்துள்ளார் எனும்போது அது மாபெரும் கொடையேயாகும். ஆகவே நாம் அவ் விசுவாசத்தை எமது தலைமுறையினருக்கு பரிசாகத் பெற்றுத்தருவதில் பங்களிப்பவர்களாகவும், நன்றி செலுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும். இவ்வாறாக, இயேசுவில் விசுவாசங் கொண்டுள்ளோம் எனும் இவ்வாசீரை எண்ணி மகிழ்ந்து புகழ்பாட வேண்டியதும் எமது கடமையாகும். மேலும் இவ்வாசீரை எம் நாளாந்த வாழ்வில் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வது எமது பொறுப்பாகவும் அமைகின்றது.....

02

மேதகு ஆயர்
J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS, தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

மேதகு ஆயர் டி. வலன்ஸ் மென்டிஸ்
பிரதம செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

## கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயரின் உயிர்ப்பு பெருவிழா செய்தி



இவ்வாண்டு நாம் ஆண்டவரின் உயிர்ப்பு விழாவைக் கொண்டாடுவது நல்லாயன் ஆண்டோடு இணைந்து எனக் கூற விரும்புகின்றேன். சிதறிப்போன ஆடுகளைப் போல் ஆண்டவருடைய மரணத்தோடு சீடர்களும் சிதறிப் போனார்கள் என்பதை அறிவோம். ஆனாலும் நல்லாயன் என்பவர் கடவுளின் இதயத்திற்கேற்ற மேய்ப்பவர்கள். ஆண்டவரோடு நெருக்கமானவர்கள்....

02

போராட்டங்கள் மடிவதில்லை
வாழ்வுரிமைகள் புதைவதில்லை
விடியல்கள் தவறுவதில்லை
இரவின் அலங்கோலத்தை அம்பலப்படுத்த
விடியலாக பரமன் இயேசு
உயிர்த்தெழுந்தார்.

செத்துப்போன இலட்சியங்களை
முளைக்கச் செய்ய
எட்டிப்பிடிக்க முடியாத ஏக்கங்களை
எட்டிப்பிடிக்க
சாதியற்ற சமூகமும், வேதமற்ற உறவும்,
சண்டையற்ற சமத்துவமும்,
உயிர்த்தெழ வேண்டுமென்று பரமன்
இயேசு உயிர்த்தெழுந்தார்.

இலட்சிய வாதிகளைக் கொன்று
புரட்சியாளர்களைப் பொசுக்கி
உரிமைகளுக்கு கல்லறை
கட்டிவிடமுடியாது என்பதை எண்பிக்க
விதைகள் முளைக்க மண்ணை
முத்தமிடும் மழைத் துளியாய்
இயேசு உயிர்த்தெழுந்தார்.

உண்மை உறங்கவில்லை
வாழ்வு வதங்கவில்லை
நம்பிக்கை நசுங்கவில்லை
அமைதி அழிந்துவிடவில்லை
என்று சொல்லி நம்பிக்கையின்
நட்சத்திரமாய், உதய தாரகையாய்,
புதிய விடியலாய்,
எம் மலர்க்கு “ஞான ஒளியாய்”
இயேசு உயிர்த்தெழுந்தார்.

அருட்சகோ. R. ஜோசப் ஜெயகாந்தன்

## திருத்தைலம் ஆசீர்வதித்தல் திருப்பலி

இம்மாதம் 26.03.2018 அன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு சகல புனிதர்கள் ஆலயத்தில் கர்தினால் தலைமையில் நடைபெறும்.

## யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் தொழில் நுட்ப மையம் திறப்பு விழா 19.03.2018



15

கடந்த கால யுத்தங்களை மறந்து, அனைத்தையும் பின்நோக்கி எறிந்து விட்டு, நம்பிக்கையுடன் முன்நோக்கி நகர்வோம்.

**ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே. இன்று அக்களிப்போம் அகமகிழ்வோம்.**

# இறையன்னைக்கு, எம் அன்னையைப் போல் அன்பு காட்டவும்!

## தேவத்தையில் இடம்பெற்ற 71 வது சிறுவர் தினத்தின்போது கர்தினால் அவர்கள், பிள்ளைகளிடத்தில் கேட்டுக்கொண்டார்.

உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழ்

### 01 இலங்கை கத்தோலிக்க...

உயிர்ப்பின் மகிழ்ச்சிக் காலமானது இயேசுவின் மீதான அறிவை ஆழப்படுத்தவும், உயிர்த்த மீட்பர் எம்மத்தியில் இருக்கிறார் என்ற உணர்வைப் புதுப்பிக்கவும் அழைப்பு விடுக்கிறது. உயிர்த்த மீட்பர் மீதான எமது விசுவாசம் எமது நாளாந்த வாழ்க்கையில் நாம் முகங்கொடுக்கும் கஷ்ட துன்பங்களின் மற்றும் பிரச்சினைகளின் துணிவுடனும், மன உறுதியுடனும் செயற்படவும், அவரும் எம்மோடு பயணிக்கிறார் (லூக் 24:13-32) என்ற நம்பிக்கையும் அளிக்கிறது. உயிர்த்த ஆண்டவரின் இவ்வுடனிருப்பை உயிர்ப்பு எமக்கு பறைசாற்றுகிறது. மேலும் அவர் எமது மகிழ்ச்சியிலும், துன்பத்திலும் பங்கெடுக்கிறார் என்பதால் இவ்வுயிர்ப்பின் மகிழ்ச்சிக் காலம் எமது வாழ்வின் உண்மையான அர்த்தத்தையும் அளிக்கிறது. உயிர்த்த ஆண்டவர் தம் சீடர்களுக்குத் தோன்றி அவர்களுக்கு அமைதியை கொடையாகக் கொடுத்தார். நாமும் அக்கொடையை கேட்டு நிற்போம். நம் நாட்டு தலைவர்கள் சாதி, மத பேதங்களை கடந்து எல்லோரும் ஒன்றுபட்டுவாழ நெறிமுறைகளை கடைபிடிக்க வழிவகுக்கவேண்டும். பௌதீக ரீதியான வளர்ச்சியை சில நிலைகளில் நாம் பெற்றுள்ள போதிலும் எம் தாய்நாட்டில் பணம் படைத்தவர் மற்றும் ஏழைகளுக்கிடையிலான இடைவெளி மிகைப்படுத்தப்பட்டுள்ளதையும் மறக்க முடியாது. அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களின் விலைகளில் பாரிய உயர்வினால் ஏழைகளின் நாளாந்த வாழ்க்கை கடினமானதாகவும், கசப்பானதாகவும் மாறியுள்ளதையும் மறுக்க முடியாது. எமது கிறிஸ்தவ சீடத்துவம் துன்புறுவோரில் இயேசுவின் முகத்தைக் கண்டு அக்கறை காட்டவும் பணி புரியவும் எம்மை அழைப்பதை நாம் மறந்துவிடலாகாது. எமது உயிர்ப்பின் மகிழ்ச்சி கிறிஸ்தவ சீடத்துவத்தின் கடமையை ஆழமாக எமக்கு உணர்த்த வேண்டும். எம்மைச் சூழவுள்ளோரின் தேவைகளை அகற்ற நாம் பாடுபட வேண்டும். விசேடவிதமாக எமது சிறுவர்கள் மது போதைவஸ்துகளுக்கும், கலாச்சார சீரழிவுகளுக்கும் வெகுவாக உட்படும் இவ்வேளையில் அவர்களை காக்க நடவடிக்கை எடுப்பது எமது பொறுப்பாகும். மேலும் எமது சாட்சிய வாழ்வின் மூலமாக கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தின் அழகை ஏனையோரும் கண்டுணர்வார்களாக உயிர்த்த ஆண்டவரின் சாட்சிகளாகவும் அமைதியின் தூதர்களாகவும் செயற்பட முன்வருவோம்.

**எல்லோருக்கும் எமது உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்களும், உயிர்த்த ஆண்டவரின் அமைதியும் மகிழ்ச்சியும் உரித்தாகுக.**





"இறையன்னை கத்தோலிக்கரான எமது வாழ்க்கையில் ஒரு பகுதியாக திகழ்கின்றார். இறையன்னைக்கு, உலகில் வாழும் எம் அன்னைக்கு அன்பு காட்டுவதுபோல் அவருக்கும் அன்பு காட்ட நாம் முயற்சிக்க வேண்டும்". எனவே, தினந்தோறும் செபம் செய்தல், இறையன்னையை எப்போதும் நினைப்பதற்கு அவரது புகைப்படமொன்றை அருகில் வைத்திருத்தல் போன்ற சிறு செயற்பாடுகளினால் எம் இறை அன்னைக்கு எமது அன்பை வெளிப்படுத்த முடியும். "இயேசுகிறிஸ்து அன்று சிலுவையில் உயிர்விடுவதற்கு முன் தேவதாயை எமது இறையன்னையாக எமக்கு கொடுத்தார்". கொழும்பு உயர்மறைமாவட்ட கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் தேவத்தை இலங்கை அன்னை பெசிலிக்கா திருத்தலத்தில் நடைபெற்ற 71வது சிறுவர் தினத்தின்போது, புனித லூர்து அன்னை தேவாலயத்தில் நடைபெற்ற செப வழிபாடுகளின் இறுதியில் கூடியிருந்த சிறுவர்களுக்கு இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்தார். கொழும்பு மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. லெஸ்டர் நோனிஸ் அடிகளார், தமிழ் பிரிவு பொறுப்பாளர் அருட்பணி. மனோகுமாரன் அடிகளார், ஆங்கில பிரிவு பொறுப்பாளர் அருட்பணி. இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் அடிகளார் உள்ளிட்ட செயற்பாட்டு குழு அங்கத்தவர்கள் இச்சிறுவர் தினத்தை ஒழுங்கு செய்தனர்.

**தகவல்: T.சுனில் பர்னாந்து, ரொஷான் பிரதீப்**

### 01 கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயரின்...

ஆதலால் தான் தன்னுடைய மந்தைகளை ஒருநாளும் சிதறிப் போக விடுவதில்லை. நல்லாயனாம் நம் ஆண்டவர் நம் இன்பத்திலும் துன்பத்திலும் ஒருநாளும் நம்மை விட்டுப் பிரிவதில்லை. மாறாக, ஆயனைப் போல் வழிநடத்திக் கொண்டு செல்பவராக இருக்கின்றார். பலவீனமானவர்களுக்கும் ஏழைகளுக்கும் ஒரு விசேட வாக்குறுதிகளை வழங்கி ஒரு ஆயனுடைய விசேட தன்மையை அதாவது தலைமைத்துவப் பண்பை அளிக்கின்றார். இன்றைய சமூக தலைமைத்துவத்திற்கு திருமுழுக்கு வழியாக நாம் பெற்றுக் கொண்ட அழைப்பினூடாக மேற்கூறப்பட்ட சிந்தனையை அகற்ற முடியாது. ஆனாலும் இன்றைய சமூதாயத்தில் பொருளாதாரமானது ஒரு ஏழையை, பலவீனமானவர்களின் நிலையை மென்மேலும் கீழ்நிலைக்கு இட்டுச் செல்வதாகவே உள்ளது. இவ்வாறான நிலையில் உள்ள மக்கள் அநேகமானவர்கள் நம் மத்தியில் வாழ்கிறார்கள். எமது பாஸ்காவின் எதிர்பார்ப்பானது எம்முடைய கிறிஸ்தவ அழைப்பிற்கிணங்க இவர்களுக்கு ஒரு எதிர்பார்ப்பைக் கொடுப்பதாக இருக்க வேண்டும். ஆண்டவருடைய இறப்பிற்குப் பின்னர் மனமுடைந்த சீடர்கள் அன்று இயேசுவைக் கண்டவுடன் அவர்களின் வாழ்க்கைக்கு ஒரு புதிய எதிர்பார்ப்பைக் கொடுத்தது போல நல்லாயனுடைய நல்வழி காரணமாக யாவருக்கும் ஒரு புதிய வாழ்வை கொடுக்க இது ஒரு நல்ல பாஸ்காவாக அமைய நான் பிரார்த்திக்கின்றேன். அனைவருக்கும் இயேசுவின் உயிர்ப்பு நல்வாழ்த்துக்கள்.

இறையாசீருடன்

**அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**பேராயர் - கொழும்பு உயர் மறைமாவட்டம்**


## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினால் வெளியிடப்பட்ட செய்தி

இலங்கை நாட்டில் கிளர்ந்துள்ள இந்நிலைக் குறித்து, நாம் தெளிந்த அறிவுடனும், எதிர்காலத்தை முன்னுணர்ந்து செயற்பட வேண்டும். அதேபோல், இறந்தகாலத்தில் ஏற்பட்ட சம்பவங்களை கருத்திற் கொண்டு, மனிதபிமானம் நிறைந்தவர்களாயும், புத்தித் தெளிவுள்ளவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

பல்வேறுபட்ட இனங்கள் மற்றும் மதத்தவர்கள் பரந்து வாழும் எம் நாட்டில், ஒற்றுமையாக வாழவேண்டும் என வெளிநாட்டவர்கள் எமக்கு சொல்லித்தர தேவையில்லை. அவை எமது மதங்களில் மதிப்பீடுகளிலும், கொள்கைகளிலும் வெளிக்காட்டப்படும் படிப்பினைகளாகும். எனவே, நாட்டின் நிகழ்கால நிலைக்குறித்து கிளர்ச்சிகளை செய்வதற்கென்றே தாகத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கு மேலும் கிளர்ச்சித், தீயைப் பற்றியெரியச் செய்ய வாய்ப்புக்களை நாம் உருவாக்கிக் கொடுக்க கூடாது என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் நாட்டுக்கும் மற்றும் மதத்திற்கும் கேட்டை, அவமானத்தை வருவிப்பதோடு, அவற்றிற்கு செய்யும் துரோகமாகவும் அமைகின்றன.

எம் நாட்டின் மதத்தலைவர்கள், அரசியல் தலைவர்களிடம், எல்லா விதமான அமைப்புக்களிலிருந்து கேட்டுக் கொள்வது, மிகவும் பொறுமையுடனும், பொறுப்புடனும் செயற்பட்டு பயணிக்க வேண்டிய காலம் என்பதை புரிந்துக் கொண்டு செயற்பட வேண்டும் என்பதே அதற்காக அனைவரினதும் ஒத்துழைப்பையும், ஆன்மீக ரீதியிலான செபத்தையும் இறையாசீரையும் வேண்டி நிற்கின்றோம்.

| | |
|---|---|
| மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS, தலைவர் | மேதகு ஆயர் டி. வலன்ஸ் மெண்டிஸ் பிரதம செயலாளர் |
| இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை | இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை |




புனித லோரன்ஸ் ஆலயம் வெள்ளவத்தையில், பங்குத்தந்தை அருட்தந்தை மனோகுமாரன் அடிகளார் பங்குனி 30ம் திகதி திறந்தவெளி பொதுச் சிலுவைப்பாதையை நடாத்துவதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளார். இச்சிலுவைப்பாதை பங்கு மக்களுக்கு பெரிய ஆசிர்வாதமாகவும், சிறப்புமிகு சலுகையாகவும் இருக்கிறது. மக்கள் தங்கள் இல்லங்களுக்கு அருகாமையில் இயேசுவின் திருப்பாடுகளைச் தரிசிக்கப் போகின்றார்கள். பெரிய வெள்ளி இத்திறந்தவெளி சிலுவைப்பாதையானது காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இப்பவனியானது, மயூராபிளேஸ் புனித அந்தோனியார் தேவாலய முன்றலில் ஆரம்பமாகி, ஹவ்லக் வீதி, சுவிசுத்தாராமவீதி, பீற்றசன் ஒழுங்கை, ஹம்டன் ஒழுங்கை, மனிங்பிளேஸ், வழியாக காலி வீதிக்கு வந்து புனித லோரன்ஸ் தேவாலயத்தை அடையும். அங்கு பாடுகளின் 14வது நிலை இடம்பெறும். தவக்காலத்தில் பச்சாத்தாப செபங்களிலும், ஒறுத்தல்களிலும் ஈடுபட விரும்பும் பங்குமக்கள், பக்திச்சபைகளுடன் வட்டார ரீதியாக இணைந்து ஒவ்வொரு திருப்பாடுகளின் நிலைகளிலும், தரித்து உரிய செபங்களையும், பாடல்களையும் ஒலிபெருக்கியின் உதவியுடன் நிகழ்த்துவார்கள். இவை மூன்று மொழிகளிலும் இடம்பெறும்.

**தகவல் : எஸ்.பி. டேவிட்**

## கொழும்பு, புனித யோசேவ்வாஸ் மன்றத்தினால் நடாத்தப்பட்ட 22வது பெரிய சிலுவைப்பாதை





**தகவல் : எமில் பர்னாந்து**
**மன்றத் தலைவர்**

கொழும்பு புனித யோசேவ்வாஸ் மன்றம் 22வது தடவையாக ஒழுங்கு செய்திருந்த பெரிய சிலுவைப்பாதை இம்மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு புனித வியாகுல மாதா ஆலய முற்றத்தில் ஆரம்பமாகி, புனித அந்தோனியார், புனித வேளாங்கண்ணி ஆலயங்கள் வழியாக சென்று இறுதியாக கொட்டாஞ்சேனை பேராலயத்தைச் சென்றடைந்தது. 5கிலோ மீற்றர் தூர வழி சிலுவைப்பாதையில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து சிறப்பித்தனர். வீதிகளில் குறிப்பிட்ட இடங்களில் சிலுவைப்பாதை நிலைகள் தலவாக்கலை பங்குத்தந்தை அருட்பணி. குணா அடிகாளின் சிந்தனைகளுடன் தியானிக்கப்பட்டது. இறுதியில் திருப்பலியானது மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க
அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
25 பங்குனி, 2018 ஞாயிற்றுக்கிழமை.

# உயிர்த்த ஆண்டவர் பக்கம் நம்மை திருப்பி, அவருக்கு சாட்சி பகர்வோம்.

தவக்காலத்தை முடித்துக்கொண்டு பரிசுத்த வாரத்தில் கால்பதிக்கும் நாம், ஆண்டவருடைய திருப்பாடுகளில் பங்குகொண்டு, நடக்கவிருக்கும் வழிபாடுகளின் முக்கியத்துவம் அறிந்து அத்தோடு நம்மை இணைக்கும் வாரம் இது. மீட்பு மறை உண்மையில் மிகவும் முக்கியமானதுதான் இறப்பும் உயிர்ப்பும். நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து தாம் படவிருந்த துன்பங்கள்பற்றியும் உயிர்ப்பும் பற்றியும் மூன்றுமுறை முன்னறிவித்ததை நற்செய்தி கூறுகிறது. துன்பமின்றி உயிர்ப்பில்லை. பெரிய வெள்ளி இன்றி உயிர்ப்பு ஞாயிறும் இல்லை. தவக்காலத்தின் இறுதிக்காலமான பரிசுத்த வாரத்தில் பயணிக்க இருக்கின்றோம். இயேசு தனது வாழ்நாளில் பல்வேறு விதமான பயணங்களை மேற்கொண்டார். முதலாவதாக இம்மண்ணில் மனிதனாக அவதரிக்க விண்ணிலிருந்து மண்ணை நோக்கிப் பயணித்தார். சிறுகுழந்தையாக இருந்தபோது ஏரோது அரசனுக்குப் பயந்து பெற்றோருடன் எகிப்து நோக்கிப் பயணித்தார். பணிவாழ்விற்குள் தன்னை தயார்படுத்த பாலைவனத்தை நோக்கிப் பயணித்தார். இவ்வுலகில் இறையரசைப் பரப்பிட மக்களை நோக்கிப் பயணித்தார். இறுதியாக தாம் இவ்வுலகில் மனிதனாக அவதரித்ததன் பொருளை உலகிற்கு உணர்த்திட எருசலேம் நோக்கிப் பயணித்தார். இதுதான் மக்களுக்கான மீட்புப் பயணமாக அமைந்தது. இயேசு செய்த அனைத்து பயணங்களும் ஒவ்வொரு வரலாறாகும்.

பயணம் செய்யும் திருச்சபையில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நாங்கள் எருசலேம் போக விரும்புகின்றோம் கொல்கொத்தா போக விரும்புகின்றோம் என்று ஒருபோதும் எம்மால் கூறமுடியாது. ஆனால் எமது அன்றாட வாழ்வில் சந்திக்கும் சுமைகள், துன்பங்கள், நோய்கள், வேதனைகள், நெருக்கடிகள் அத்தனையையும் ஏற்றுக்கொண்டு இயேசுவில் நம்பிக்கை கொண்டவர்களாய் வாழ்ந்திடும்போது நாமும் கொல்கொத்தா பயணிகளே. “கிறிஸ்து இயேசுவிடம் நம்பிக்கை கொள்வதற்கு மட்டுமல்ல அவருக்காகத் துன்பங்களையும் ஏற்பதற்கும் நீங்கள் அருள் பெற்றுள்ளீர்கள்” (பிலி.1:29). இந்த பரிசுத்த வாரத்தை எமக்கான நல்லதொரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி முழுமையாக எம்மை இறைவனுக்கு கொடுப்போம்.

உயிர்ப்பு ஞாயிறு கிறிஸ்துவின் உயிர்ப்பை கொண்டாடுகின்றோம். கிறிஸ்து உயிர்த்துவிட்டார். இதுவே நற்செய்தியின் உச்சக்கட்ட உண்மை என்பதே நற்செய்தி. நற்செய்தியான இவ்வுண்மையே கிறிஸ்தவ நம்பிக்கையின் ஆணிவேர் மற்றும் எமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அடித்தளமும் எதிர்நோக்கும் இதுவாகும். இயேசு உயிர்க்கவில்லை என்றால் திருச்சபையின் அறிவிப்புப் பணி முழுவதுமே பொருளற்றதாகிவிடும். காரணம் கிறிஸ்துவின் உயிர்ப்பே நமது நம்பிக்கை வாழ்வின் தொடக்கம். உயிர்ப்பில் இருந்தே கிறிஸ்தவர்களின் புதிய பயணம் தொடங்குகின்றது.

இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவ வாழ்வில் கொண்டாட்டங்களில் எல்லாம் முதன்மையானது. இயேசுவின் உயிர்ப்பு நமக்கு விடுக்கும் செய்தி இயேசு அன்பான கடவுள் அன்பே மனுவுரு எடுத்தார். மானிடரின் பாவங்களுக்காக தன்னுயிரைக் கொடுத்தார். தந்தையாகிய கடவுள் அவரை மூன்றாம் நாள் உயிர்த்தெழச் செய்தார். எல்லாவற்றுக்கும் மேலாளராக அவரை நிலைபெறச் செய்தார். ஆகவே கிறிஸ்தவ வாழ்வுக்கு அன்பே மூலதனம். உயிர்ப்பு தரும் மகிழ்ச்சியில் உயிர்த்த ஆண்டவர் பக்கம் நம்மை திருப்பி புதுவாழ்வும், புதிய ஒளியும் பெற்று உயிர்ப்பின் மக்களாக இயேசுவுக்கு சாட்சி பகர்வோம்.

நாம் இம்மாதம் 25ம் திகதி கபிரியேல் வானதூதர் மரியன்னைக்கு மங்கள வார்த்தை கூறியதை நினைவுகூர்கின்றோம். **“அருள் மிகப் பெற்றவரே வாழ்க”** வானதூதர் வழியாக மரியன்னைக்கு சொல்லப்பட்ட முதல் வார்த்தை இதுதான். மரியாவின் சிறப்புமிக்க செயற்பாடுகள் அனைத்திற்கும் மூலக்காரணம் கடவுளின் அன்பும் பரிவிரக்கமும் என்பதை இவ்வாழ்த்து எடுத்துக் கூறுகின்றது. இறைமகனுக்கு தாயாகும் பேற்றினைப் மரியா பெற்றது தனது தகுதி மற்றும் உரிமையினாலோ அல்ல. மாறாக இறைவனின் பேரன்பினால் ஆகும். நமது வாழ்விலும்கூட நாம் சந்திக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளும் ஏதோ ஒரு விதத்தில் இறைவனின் அன்பையும் ஆற்றலையும் சுமந்து வருகின்றது என்பதை நாம் உணர வேண்டும். இறைவனின் உடனிருப்பு எப்போதும் எம்மோடு கூடவே இருக்கின்றது என்பதை நாம் முழுமையாக நம்புவோம்.

**அனைவருக்கும் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்.**

**இறையாசீருடன் ஆசிரியர்**

# பரிசுத்த வாரம்

03

உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழ்

**கடவுள் நமது விருப்பத்திற்கும், எதிர்பார்ப்பிற்கும் மாறாக செயல்படுகிறார் என்று எப்போது நாம் நினைக்கின்றோமோ அப்போதே அந்தக் கடவுளை மறுக்கவும் மறக்கவும், இகழவும் இழக்கவும், எதிர்க்கவும் ஏசவும் துணிந்து விடுகிறோம். ஏன்... அந்தக் கடவுள் மனிதப்பிறவி எடுத்து இந்த உலகிற்கு வந்தால் அவரைச் சிலுவையில் அறைந்து கொலை செய்யவும் தயங்கமாட்டோம்.**




## குருத்து ஞாயிறு

குருத்து ஞாயிறு பரிசுத்த வாரத்தின் தொடக்கம். இயேசுவின் பாடுகளைப் பற்றி தியானிப்பதால் இதனைப் பாடுகளின் ஞாயிறு என்றும் அழைப்பார்கள். இயேசுவின் பாடுகளைப் பற்றியும் அதற்குக் காரணமான நமது பாவங்களைப் பற்றியும் சிந்தித்து அதற்கானப் பரிகாரம் செய்யவும், இரக்கச் செயல்களிலும் ஒறுத்தல் முயற்சிகளிலும் ஈடுபட்டு இறை உறவையும் மனித உறவையும் வலுப்படுத்தும் அருளின் காலமான தவக்காலத்தின் உச்சக்கட்டம் தான் இந்த பரிசுத்த வாரம். இயேசு தான் பாடுபடுவதற்கு முன்னால் கடைசி முறையாக ஜெருசலேம் நகரில் நுழைந்த போது அவரது சீடர்களும் மக்களும் அவரை ஆர்ப்பரிப்போடு குருத்தோலைகளை கையில் ஏந்தி வரவேற்ற நிகழ்ச்சியை நினைவு கூர்வதுதான் இந்த குருத்து ஞாயிறாகும்.

## வரலாற்றுப் பின்னணி

இந்தக் கொண்டாட்டம் ஏறக்குறைய 6ம் நூற்றாண்டிலிருந்தே திருச்சபையால் கொண்டாடப்பட்டு வருகிறது. வெற்றி வாகையோடு திரும்புகின்ற அரசர்களை மக்கள் குருத்தோலைகளை ஏந்தி ஆர்ப்பரிப்போடு வரவேற்பது யூதமக்களின் வழக்கம். உதாரணமாக இயேசுவிற்கு முன்னால் ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பு யூத மக்கபேயுஸ் அரசர் சிரிய நாட்டைத் தோற்கடித்துவிட்டுத் திரும்பும் போது மக்கள் அவரை வரவேற்றதை 1மக்கபேயர் 13:51ல் காணலாம்.

## புனித வாரம் தொடங்குகின்றது.

குருத்து ஞாயிறு தொடங்கி அந்த வாரம் முழுவதும் இயேசுவின் வாழ்வில் மிகவும் முக்கியமான நாட்களாக அவர் இந்த உலகிற்கு வந்ததன் நோக்கம் நிறைவேறும் இறுதி நாட்களாக அமைகின்றன. அவர் சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்த நாள் சித்திரை 7. கி.பி 30ம் ஆண்டு என்று வரலாற்று நிபுனர்கள் கருதுகின்றனர்.ஜெருசலேமில் நுழைந்த அன்று ஜெருசலேம் ஆலயத்தில் மக்களுக்குப் போதித்துவிட்டு இரவு பெத்தானியா திரும்பி ஓய்வு எடுக்கிறார்.

**திங்கள் :** மறுநாள் திங்கள் தனது அப்போஸ்தலர்களோடு மீண்டும் தேவாலயம் செல்கின்றார். போகின்ற வழியில் காய்க்காத அத்திமரத்தைப் பார்த்துச் சாபமிடுகிறார். அன்றும் மக்களுக்குப் போதித்த பிறகு பெத்தானியா திரும்புகிறார்.


**செவ்வாய்:–** மறுநாள் செவ்வாய் அன்று ஆலயத்தில் போதிக்கும்போது மதத் தலைவர்கள் இயேசுவோடு விவாதம் செய்கின்றனர். அன்று மாலை பெத்தானியா திரும்பும் முன் ஜெருசலேம் தேவலாயம் விரைவிலேயே அழிக்கப்படும் என்று முன்னறிவிக்கின்றார்.


**புதன் :–** புதன் அன்று பெத்தானியாவில் தங்கி தனது பாடுகளுக்காக தன்னையே தயாரிக்கின்றார். அன்றுதான் இயேசுவைக் காட்டிக் கொடுப்பது பற்றி யூதாஸ் மற்றவர்களோடு இரகசியத் திட்டம் போட்டான்....

15

## உண்மை உறைக்கும்

கமிலஸ்





# குருத்து ஞாயிறு

உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழ்



இன்று நாம் கொண்டாடும், குருத்து ஞாயிறு பாடுகளின் ஞாயிறு. புனித வாரத்திற்கு தொடக்கமாக அமைகிறது. திருச்சபையின் வரலாற்றில், ஒரு வாரமே புனித வாரமாக கொண்டாடப்படுகிறது என்றால் கிறிஸ்துவின் பிறப்பை விட அவரது பாடுகளும், இறப்பும், உயிர்ப்பும், எவ்வாறு முக்கியம் என்பதை ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் அறிந்துணர வேண்டும். கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிநாதமான “கெரிக்மா” என்றழைக்கப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு இவ்வாரத்தில் ஆழமாக நினைவுகூரப்படுகிறது.

கி.பி 5ஆம் நூற்றாண்டில் எருசலேமில் உள்ள கிறிஸ்தவர்கள் அனைவரும் நண்பகல் வேளையில் ‘ஒலிவில்’ என்ற மலையில் கூடிச் செபித்து, பிறகு மாலை வேளையில் கையில் குருத்தோலைகளையும், ஒலிவக் கிளைகளையும் ஏந்தி பவனியாக எருசலேம் ஆலயத்திற்குச் செல்வது வழக்கம். இதையே குருத்து ஞாயிறாக திருச்சபை கொண்டாடி வருகின்றது. கி.பி 8ஆம் நூற்றாண்டிலிருந்து குருத்தோலைகளையும், ஒலிவக்கிளைகளையும் புனிதப்படுத்தும் பழக்கம் தோன்றியது. குருத்தோலையானது செந்நிற மற்றும் நம்பிக்கையின் அடையாளம். ஒலிவக்கிளையானது மருத்துவக் குணம் கொண்டதாகவும் நிறைவின் அடையாளமாகவும் விளங்குகின்றது. இயேசுக் கிறிஸ்து நம் வாழ்வில் வெற்றியைத் தருபவராகவும், நம்பிக்கை அளிப்பவராகவும், வாழ்வின் நிறைவாகவும் இருப்பதால் தொடக்கக்கால கிறிஸ்தவர்கள் வெளி அடையாளமாக குருத்தோலை மற்றும் ஒலிவக் கிளைகளை பவனியில் எடுத்துச் சென்றார்கள். அதையே நாமும் இன்று பின்பற்றுகிறோம். குருத்து ஞாயிறன்று இயேசுவின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வுகளைக் கொண்டாடுகின்றோம். அதற்கு இயேசு செய்த மூன்று பயணங்கள்.

பெத்தலகேமில் ஏரோதுவின் மிரட்டலுக்கும், அதிகாரத்திற்கும், பணிந்து எகிப்துக்கு தப்பி ஓடி இறுதியாக நாசரேத்தூரில் குடியமர்ந்தது வரை கிறிஸ்து மேற்கொண்ட வாழ்க்கைப் பயணம் தனது 12ம் வயதில் எருசலேம் ஆலயத்தில் காணாமல் போனபோது முடிவுக்கு வந்தது. தம் தந்தை சூசையப்பரின் மரணத்திற்குப் பிறகு ஒரு தச்சனாக தொழில் செய்து பலரையும் கவர்ந்து தன் முப்பதாவது வயதில் பாலைவனத்திற்கு மேற்கொண்ட இரண்டாவது பயணம் பணிக்கான திருப்பயணம். இது சீடர்கள், அப்போஸ்தலர்கள் புடைசூழ நடைபெற்ற இறையாட்சிக்கான பயணம். கலிலேயா, யூதேயா, சமாரியா என எப்பக்கமும், விரிவடைந்தது இப்பயணம். எருசலேமிற்குள்ளான பயணம் பலர் வாழ்வு பெறுவதற்காக தம்மையே தந்தையின் திருவுளத்திற்கு கையளிப்பதற்கான மரணப் பயணம். பலிக்கான பயணம். தனியொரு விதையாக வீரியமுடன் மேற்கொள்கின்ற வீரப்பயணம். இது கல்வாரியில்தான் முடிவடையும் என்பதை அவர் அறிந்து மேற்கொள்ளும் புனிதமான பயணம். ஒரு போராளியின் வீரப் பயணம்.

**முதலாவது பயணம் நாட்டிற்கு வெளியே,**

**இரண்டாவது பயணம் நாட்டிற்குள்ளே,**

**மூன்றாவது பயணம் கல்லறைக்குள்ளே.**

- **இன்று மக்களின் கைகளில் குருத்தோலைகள் என்றால் தம் தோளில் சிலுவை தான் என்பதை இயேசு அறிந்திருந்தார்.**
- **பயணத்தில் தரைகளில் துணி என்றால் பாடுகளின் போது தமக்கு நிர்வாணம் என்பதை இயேசு அறிந்திருந்தார்.**
- **இன்று ஓசான்னா என்றால் நாளை முள்முடியும், கசையடியும் என்பதையும் இயேசு அறிந்திருந்தார்.**

ஆனாலும் மானுடத்தை மீட்க தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற, அனைவருக்கும் நிறை வாழ்வினை வழங்க, பாடுகளின் பாதையை ஓர் இலட்சியப் போராளியைப் போன்று மேற்கொள்ளவே இந்த பயணம். இந்த பாதையில் நமது வாழ்விற்கான சுவடுகள் பதிந்திருக்கின்றது என்பதை நாம் மறக்கக் கூடாது.

## குருத்துப் பவனி

எருசலேம் நிகழ்வுகளுக்கு நடுநாயகராம் இயேசுவை வரவேற்க கூட்டம் கூடியது. எகிப்தில் முதன்முறை நிகழ்ந்த “பாஸ்கா அனுபவம்” ஒவ்வொரு ஆண்டும், “நினைவாகவே” கொண்டாடப்பட்டது. அந்த நினைவு பாஸ்கா பலி எருசலேமில் நிறைவேற இருந்தது. “கிறிஸ்துவே உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறி. ஆகையால் விழாக் கொண்டாடுவோம்” (1கொரி. 5:7). எனவே பாஸ்கா திருவிழாவிற்கு வந்த பெரும் கூட்டம் இயேசு எருசலேமிற்கு வருகிறார் எனக் கேள்வியுற்று விழா கொண்டாட அவரை எதிர் கொண்டுபோகிறது (யோவா. 12:12-13). இயேசுவின் இறப்பு, உயிர்ப்பு எனும் மறை-நிகழ்ச்சிகள் முழுமைபெற இதில் இணைந்தவர்கள் எல்லாரும் அடையாளம் ஏந்தி அறிக்கையிட்டு தாவீதின் மகனுக்கு ஓசான்னா, என்று குருத்தோலைகளை அடையாளமாக ஏந்தி வரவேற்றார்கள். இயேசுவின் எருசலேம் நுழைவு உலக-மனைத்தும், மகிழ வேண்டிய தருணம் என்பதை குருத்துக்கள் நினைவூட்டுகின்றன.



## கழுதைமேல் பவனி

பாலஸ்தீன நாட்டில் கழுதைக்கு சிறப்பான முக்கியத்துவம் உண்டு. போர்க்காலங்களில் குதிரைகளை பயன்படுத்திய அரசர்கள் போர் முடிந்து அமைதியான நாட்களிலே கழுதை மீது பவனி வந்தார்கள். கழுதை அமைதி, சாந்தம், சமாதானத்தின் சின்னம்.

இயேசு சாந்தத்தின் உருவாக, அமைதியின் அரசராக, சமாதானத்தின் தூதுவராக துன்புறும் ஊழியனாக தம்மையே தாழ்த்தி அரச பவனி வருகிறார்.

தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற மனிதனாக உருவெடுத்த இயேசு தன்னை ஆண்டவரின் ஊழியனாக தம் சொல்லாலும், செயலாலும் எண்பித்துக் காட்டினார். பணிவிடை பெறுவதற்கன்று பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்காக தம் உயிரையும் அளிக்க வந்த இயேசு, இதோ சமாதானத்தின் தூதுவராக எளிமையும், சாந்தமும், நிறைந்த அரசராக கழுதையின் மீது அமர்ந்து எருசலேம் நுழைகிறார்.





## குருத்து

குருத்தோலை வெற்றியின் அடையாளம். ஆதிக் கிறிஸ்தவர்கள் கல்லறைகளில் குருத்தோ-லைகளை வைத்தனர். எதற்காக? கிறிஸ்து சாவின் மீது வெற்றிக் கொண்டு உயிர்த்ததுபோல, இவர்களும் உயிர்க்கப் படவேண்டும் என்பதினை அடையாளப்-படுத்தத்தான். குருத்தோலை உயர்ந்து நிற்பதுபோல, நம் இதயங்களும், எண்ணங்களும், உயரவேண்டும் என்பதை வெளிப்படு-த்தத்தான் குருத்தோலை பவனி.

## எருசலேம் பவனி

பவனி என்றால் மக்கள் குதுகலமாகக் கூடி சாலைகளிலே திரண்டு செல்ல அரசனோ அல்லது விழா நாயகனோ பவனியின் இறுதியில் ஆரவாரமாக ஆடம்பரமாக அழைத்து வரப்படுவார். ஆனால் இந்த பவனி ஒரு வித்தியாசமான பவனி. தாவீதின் மகன் எனப் போற்றப்பட்ட இயேசு பவனியின் முன் வழிநடக்க உலகம் அனைத்தையும், தனக்குப் பின்னால் இழுத்துக் கொண்டும், இயங்கிக் கொண்டும் எருசலேம் நோக்கி விரைகிறார்.





## ஒலிவக் கிளைகள்

நோவா காலத்து வெள்ளப்பெருக்கு, பூமியின் முகத்தைப் புதுப்பித்து, புதுப்படைப்பாக அனைத்தையும் உருமாற்றியது. இனி அழிவு இல்லை என்ற நம்பிக்கையை கொண்டுவந்த புறா, ஒலிவ மரத்தின் கிளையொன்றை அலகில் கவ்விக் கொண்டு வந்தது (தொநூ. 8:11). அழுகைக்கும் அழிவிற்கும் உட்பட்டிருந்த படைப்பு, இனி விடுதலைக்கு கடந்து செல்ல இதோ இயேசுவின் தலைமையில் புறப்பட்டுவிட்டது என்ற நம்பிக்கை முழக்கமிடும் பவனி இது. ஒலிவ மரம், தேவர்களும், மனிதர்களும் பயன்படுத்தும் செழுமையான மரம். இறையரசின் செழுமை, கொழுமை, வளமை, முழுமையை முன்னறிவிக்கிறது. உயிர்ப்புக்கு இன்று தொடக்கவிழா.



# ஆண்டவரின் இரவு உணவு விழா

**கிறிஸ்தவ வாழ்விலே இந்நாள் ஒரு சிறப்பான நாள். கிறிஸ்தவ வழிபாட்டு ஆண்டிலே இன்று உன்னதமான நாள். இறைமகன் இயேசு இவ்வுலக வாழ்விலே நடந்த இறுதி நிகழ்ச்சிகளின் ஆரம்ப நாளினை நினைவுகூறும் நன்னாள் இந்நாள். நம் ஒவ்வொருவரையும், கிறிஸ்தவர்களாக வாழ, வாழ்ந்து சான்று பகர, அன்பினை நிலைநாட்ட இறைமகன் இயேசுவின் வாழ்க்கைச் சுவடுகளிலே நடந்திட, வாழ்ந்திட அன்னையாம் திருச்சபை நம் அனைவரையும் அன்புடன் அழைக்கும் நாள்.**



## புனித வியாழன்

**இன்றைய நாளில் நாம் மூன்று முக்கிய ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிகழ்ச்சிகளை நினைவுகூறுகின்றோம்.**

**ஆண்டவர் தம் மக்கள் மீது கொண்டிருக்கும் அன்பை வெளிப்படுத்தும், பாஸ்கா விழா.**

**அந்த அன்பை அடையாள முறையில் நிரந்தரமாக வெளிக் கண்களுக்கும் புலப்படும் வகையில் ஆண்டவர் இயேசு கொண்டாடிய நற்கருணை விழா.**

**இறை பிரசன்னத்தை, நற்கருணையை உலகிலே தொடர்ந்து நிலைத்து நிற்க இறைப்பணியாளர்களை ஏற்படுத்திய குருத்துவ விழா.**


இம்மூன்று விழாக்களையும் ஒரே திருவழிபாட்டில் (புனித வியாழன்) நினைவுக் கூறி கொண்டாடுகின்றோம்.

புனித வியாழன் நற்கருணை பிறந்த நாள், எல்லோரும் உயிர் பெறும்படி வந்தேன். அதை மிகுதியாகப் பெறும்பொருட்டே வந்தேன் என்று கூறிய இயேசு தன் உடலையும், இரத்தத்தையும் நமக்காக சிந்தக் கொடுத்து தம் வாழ்வையே பலியாகக் கொடுத்தது இந்த இரவிலே தான். இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்று சொல்லி இறைப்பணியாளர்களை ஏற்படுத்தியதும், இந்த இரவில் தான். எனவே இன்று குருத்துவமும் பிறந்த நாள்.

பணிவாழ்க்கை பரிசேய வாழ்க்கையல்ல என்று இயேசு உலகிற்கு எண்பித்த இந்த நாள். தலைவன் ஆணவக்காரனல்ல, மாறாக பணியாளன் என்பதனைச் சீடர்களின் பாதங்களைக் கழுவி, மாதிரி காட்டுகின்றார். பணி குருத்துவம், மக்களுக்குப் பணியாற்றும் கருவி பொதுக்குருத்துவத்தில் பங்கேற்கும் யாரும் இயேசுவின் பணியாளர்களே.

நற்கருணையில் இயேசு தம்மையே நமக்கு உணவாகத் தருகிறார். இயேசுவை நற்கருணையில் சந்திக்கும் நாம் நடைமுறையில், நாளாந்த வாழ்க்கையில், நற்கருணையாக மாற வேண்டாமா? ஆலயத்தில் இயேசுவை உணவாக உண்கின்ற நாம் பிறருக்காக நாம் எதைக் கொடுக்கின்றோம். இயேசுவைப் போல நாமும் பிட்கப்பட வேண்டும். இயேசுவை உணவாக உட்கொள்ளும் நாம் புதிய உத்வேகம் பெற்று மறுகிறிஸ்தவர்களாக மக்கள் மத்தியில் உருவெடுக்க வேண்டும் இச்சிந்தனைகளே இன்றைய வழிபாடுகள் நமக்கு எடுத்தியம்புகின்றன.

# வாழ்க்கையின் வெற்றியின் இரகசியத்தை கற்றுத்தரும் வழியே




வாழ்க்கை என்பது ஒரு வாய்ப்பு அதை சரியான முறையில் அமைத்துக் கொள்வது மனிதர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். வாழ்வு என்பது ஒரு புதிர், பல சவால்களைக் கடந்து, கடமையை நிறைவேற்ற பயணிக்கின்ற ஒரு பாதை எனவும் வரையறுத்துக் கொள்ள முடியும். மனிதர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் ஒரு சமூக அமைப்பில் இருப்பதால், பல காரணங்களுக்காக சிலரையும், சில காரணங்களுக்காக பலரையும் சார்ந்து வாழும் நிலையை பார்க்க முடியும். நாங்கள் பெற்றுக் கொண்ட வாழ்வை எமது விருப்பப்படி வாழ எமக்கு பூரண சுதந்திரம் உண்டு. அதே வேளையில் பிறருடைய விருப்பத்திற்கு கட்டுப்பட்டு அவர்களுக்காக வாழும் மனிதர்களும் உண்டு. மேலாக இறைவனின் விருப்பத்திற்கும் அவரது திட்டத்திற்கும் கட்டுப்பட்டு வாழும் வாழ்வு உன்னதமானது. இறைவனின் விருப்பப்படி வாழ முற்படும் போது இயேசுவின் சிலுவையின் வழி வாழ்வை அமைத்துக் கொள்வதே உண்மை வாழ்வாகும்.

“என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” (மத் 16:24) என்கிறார் இறைமகன் இயேசு. கிறிஸ்வர்களின் வாழ்க்கைப் பயணத்தில் சிலுவை என்ற வெற்றியின் சின்னம் நடப்பட்டிருக்கும். துன்பம் என்ற பாதையில் நடக்கும் மனித உள்ளம், துயரம் என்ற சோர்வால் வாடும் போதும், கவலையால் உடல் நடுக்கமுற்று தள்ளாடும் போதும், உறவினர்கள் நண்பர்களால் மறக்கப்பட்டு கைவிடப்படும் போதும், தோல்வியை சந்தித்து வேதனையின் விளிம்பில் நிற்கும் போதும், உள்ளத்திற்கு ஆறுதலும் அரவணைப்பும் கொடுக்கும் நிழல்தான் சிலுவை. விரக்தியடைந்த மனதிற்கு வீசும் தென்றலாக, சிக்கல்கள் நிறைந்த மனிதனுக்கு வாழ்வைக் காட்டும் நிழலாக காட்சி தருவதே சிலுவை. சிலுவையில் உயர்த்தப்பட்ட இறைமகனை உற்று நோக்கினால் மனுக்குலம் முழுவதும் மீட்படைவர் என்ற நம்பிக்கையின் மூலம் சிலுவை புதுவாழ்வின் அடையாளமாயிற்று.

யூத மக்களுடைய வரலாற்றில் அவமானத்தின் சின்னமாக கருதப்பட்ட சிலுவை, மரண தண்டனைகளை நிறைவேற்றுவதற்கு வழிகோலிய சிலுவை, இறைமகனின் மரணத்திற்கு கருவியாக அமைந்த சிலுவை, எவ்வாறு கிறிஸ்தவர்களின் வாழ்வில் புனிதச் சின்னமாக மாறியது? சிலுவையில் இறந்த இறைமகன் இயேசு உயிர்த்தெழுந்ததினால் சிலுவை வெற்றியின் சின்னமாக மாறியது. சிலுவைப் பயணத்தின் வழியாக இயேசு இறைமகன் என்ற உண்மை நிரூபிக்கப்படுகிறது. புனித பவுல் கூறுவது போல “சிலுவையைப் பற்றிய செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால் மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை” (1கொரி 1:18). சிலுவை என்பது இணைபிரியா நண்பன், கடவுளின் ஊழியன் நடக்கும் பாதையில் பூத்துக் குலுங்கும் செடி, சிலுவையில்தான் எமது ஆன்மாவிற்கு தேவையான சக்தியும், ஒளியும் இருக்கிறது என்கிறார் முத்திப்பேறுபெற்ற அன்னை ஆன்மேரி.

வாழ்க்கையிலே பல்வேறுபட்ட துன்பங்களாலும், துயரங்களாலும்,....

15

அருட் தந்தை. றமேஸ் அ.ம.தி











## புனித வெள்ளி

# சாவு புது வாழ்வே

**“மரணம் என்பது இல்லவே இல்லை!
கண்ணில் தெரிவது இடை முறிவே
அழியும் சுவாசம் உடைய இவ்வாழ்க்கை
மரித்தவர் உலகின் புறநகரே
அவ்வுலகின் வாயிலைத் தான் நாம் இங்கு
மரணம் என்று சொல்லுகின்றோம்.”**

பிறப்பு கண்ட ஒவ்வொரு உயிருக்கும், மரணம் உண்டு என்பது எதார்த்தமே. இருப்பினும் சாவை மனித மனங்கள் பல நேரங்களில் ஏற்க மறுக்கின்றன.

இந்நிலையில் சாவிற்குப் பின் புதுவாழ்வு உண்டு என்று நம்புபவர்களுக்கும், இவ்வுலக வாழ்வின் செயற்பாடுகளே, சாவிற்கு புது அர்த்தம் கொடுக்கும் என்ற நம்பிக்கையோடு செயற்படுபவர்களுக்கும் சாவு முடிவல்ல. மாறாக புது வாழ்வின் விடியலே. இம்மாபெரும் படிப்பினையைக் கற்றுத் தருவதுதான் இயேசுவின் இறப்பு.

## மூன்று வகை மனிதர்களும் முகவரியும்

இன்று சாவு மனிதரிடத்திலே மூன்று விதமான விலாசங்களைப் பெற்றிருக்கின்றது. எப்படியோ பிறந்துவிட்டோம். எனவே வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம் என்று வாழ்வை நகர்த்துபவர்கள் முதல் வகை. இவ்வகை மனிதர்கள் சாவைக்கண்டு அஞ்சாதவர்கள்.

இப்படித்தான் பிறந்தோம், இப்படித்தான் வாழ்ந்தோம் மரணம் வரும்போது சந்திப்போம் என்று வாழ்பவர்கள் இரண்டாம் வகை. அதனால் ஆயத்த நிலை என்றும் முகவரியைப் பெற்றுக் கொள்வார்கள்.

இதற்காகத்தான் பிறந்தோம், இதற்காகத்தான் வாழ்கிறோம், இதற்காக சாவையும் சந்திப்போம் என்று கொள்கைப் பிடிப்போடு வாழ்ந்து பயணம் செய்பவர்கள் தியாக நிலை என்னும் விலாசத்தை உடைமையாக்கிக் கொண்டவர்கள்.

இயேசு இந்த மூன்றாம் வகை முகவரியைத்தான் உடைமையாக்கிக் கொள்கிறார். எனவே தான் யூதருக்கும், கிரேக்கருக்கும் மடமையாக இருந்த சிலுவை கிறிஸ்தவருக்கு கடவுளின் வல்லமையாக மாறியது (1கொரி 1:24) ஆகவே கிறிஸ்துவின் சிலுவைச் சாவு ஒரு புது விடியலே.

## சாவு என்பது அழிவல்ல மீட்பின் அருங்குறி

உடலை உதறித்தள்ளுவதே வாழ்வின் இறுதி நிலை என்கிறார் காளிதாசன். இயேசுவின் சாவு தியாக சாவு. அவரது இறப்பை துக்கம் கொண்ட மனநிலையோடு, இழப்பு என்ற சோகத்தோடும் கொண்டாடுவதில் அர்த்தம் இல்லை. ஏனென்றால் தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை என்றுரைத்த இயேசு, அந்த அன்பின் அடையாளமாக மனித மீட்பின் அருங்குறியாக சிலுவை சாவையே முன் வந்து ஏற்றுக் கொள்கிறார். கடவுளையும், மனிதனையும் இணைக்கும் பாலமாக இயேசு மாறிவிட்டார். ஆகவே இயேசுவின் சாவு அழிவல்ல மாறாக மீட்பின் அறிங்குறியே.

மானிடமகன் தன்னைப் பற்றி மறைநூலில் எழுதியுள்ளவாறே போகிறார். ஆனால் ஐயோ அவரைக் காட்டிக் கொடுக்கிறவனுக்கு கேடு. அம்மனிதன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலமாய் இருந்திருக்கும் (மாற் 14:21) என யூதாசின் சூழ்ச்சியை வெளிப்படையாகச் சொல்லுகிறார் இயேசு.

தந்தையே உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும், ஆனால் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழ்ட்டும் (லூக் 22-42) சோதனை வேளையில் ஒலிவ மலையில் இப்படி வேண்டுகின்றார்.

ஜெஸ்மனித் தோட்டத்தில் எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது (மத் 26:28) என்று தனது துயரத்தை வெளிப்படுத்துகிறார்.

தன்னோடு இருப்பவர்களே தன்னை விட்டு விட்டு போய்விடுவார்கள் என்ற கவலையை இன்றிரவு நீங்கள் அனைவரும் என்னைவிட்டு ஓடிப்போவீர்கள் (மத் 26:31) என்பதன் மூலம் காட்டுகிறார்.

இங்கே இயேசு ஒரு துன்புறும் ஊழியனாக, மெசியாவாக கொலைக்களத்திற்கு இழுத்துச் செல்லப்படும் கத்தாத செம்மறி போன்றே கல்வாரியில் காட்சியளிக்கின்றார்.

தம்மைக் கைது செய்ய வந்தவர்கள் முன் தானே முன் சென்று யாரைத் தேடுகிறீர்கள் என்றார். நாசரேத்து இயேசுவைத் தேடுகின்றோம் என்ற அவர்களுக்கு மறுமொழி கூறிய போது நான் தான் என்று துணிச்சலோடு சொல்லுகின்றார்.

மேலும் சீமோன் பேதுரு தனது வாளால் தலைமைக் குருவின் பணியாளரைத் தாக்கி அவரது வலக்காதை வெட்டியபோது பேதுருவிடம் வாளை உறையில் போடு தந்தை எனக்கு அளித்த துன்பக் கிண்ணத்திலிருந்து நான் குடிக்காமல் இருப்பேனா? என்றார்.

இதிலிருந்து இயேசு கூறுவது யாதெனில் எனது ஆடுகள் வாழ்வு பெறும் பொருட்டு வந்தேன். எனவே என் உயிரை யாரும் என்னிடமிருந்து பறித்துக் கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கின்றேன் என்று தனது இலட்சியத்தை உறுதி செய்தார். இலட்சிய விதைகள் என்றும் மடிவதில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். ஆகவே சாவு இழப்பல்ல, புதுவாழ்வின் பிறப்பே என்பதை எண்பித்து விட்டார்.

இயேசு சிலுவையில் எல்லாம் நிறைவேறிற்று என்று கூறிய வார்த்தை வெற்றியின் பெருமூச்சின் வெளிப்பாடே. இவ்வார்த்தையின் மூலம் மானிட குலத்தை மீட்கும் இலட்சியம் முடிந்தது என்ற அமைதியில் இயேசு தனது உயிரைத் தருகின்றார்.

ஆகவே, இயேசுவின் சாவு மீட்பின் அருங்குறியாக, புதுவாழ்வின் பிறப்பாக, வெற்றியின் பரிசாக அமைந்துள்ளது. கடவுள் தனக்கென்று ஒரு இலட்சியம் கொண்டார். அந்த இலட்சியத்தை இயேசு தம் உயிரைக் கொடுத்து வெற்றி பெறச் செய்தார். அவரே தம் குற்றங்களுக்காக காயப்பட்டார். நம் தீச் செயல்களால் அவர் நொறுக்கப்பட்டார் என எசாயா இறைவாக்கினர் கூறுகின்றார். ஆகவே இயேசுவின் இறப்புச் சொல்லும் பாடம்.

q இலட்சியப் பார்வை கொண்டு அலட்சியப் பயணங்களை எதிர்த்துச் செயல்படும் போது சாவும் புதுவாழ்வே

q எத்தனை இடர்பாடுகள் நேரிடினும், துவண்டு போகாமல் துணிந்து செல்லும் போது நமது சாவும் புதுவாழ்வே

q எத்தகையச் சோதனைகளையும், கடவுளின் கட்டுப்பாட்டை மீற முடியாது என்ற நம்பிக்கையில் பயணம் தொடரும் போது நமது சாவும் புதுவாழ்வே

q பொதுநலனுக்காக தியாகங்களை முன்னெடுக்கும் போது ஏற்படும் சாவும் புதுவாழ்வே

குடும்பம், சமூகம், அரசியல், பொருளாதாரம் என அனைத்து துறைகளிலும், நீதி, அன்பு, சமாதானம் மற்றும் சகோதரத்துவம் தழைத்தோங்க பாடுபடும்போது ஏற்படும் தோல்விகளும், வலிகளும், மரணங்களும் புதுவாழ்விற்கான விழுதுகளே.



## பாடுபட்ட q சுரூபம்

**நீ தன்னலத்தால் தற்பெருமை கொள்ளும்போது
எனது சிரம் கூரிய முட்களால் அழுத்தப்படுகின்றது.**


**நீ உடல் இச்சையால் பாவம் செய்யும்போது எனது
உடல் கசையால் காயப்படுகின்றது.**

**நீ சிற்றின்பத்தில் உழலும்போது எனது இரத்தம்
வியர்வையாய் வெளிவருகிறது.**

**நீ பாவக்குழியில் மூழ்கும்போது எனது தோள்களில்
சுமையான சிலுவை சுமத்தப்படுகிறது.**

**q நீ தீயவைகளை நாடி ஓடும்போதும் q
செய்யப்படும்போதும் எனது கை கால்கள்
ஆணிகளால் துளைக்கப்படுகிறது.**

**நீ உலக இன்பங்களை மட்டுமே நேசிக்கின்றாய்...
எனது இதயம் உனது தூய இதயத்தை மட்டுமே
நேசிக்கின்றது.**





**இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது**

# இறைவார்த்தை வழிபாடு

**கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும் [1கொரி 15:14]**

## குருத்து ஞாயிறு (25.03.2018)

**பேதுரு**

**வாசக விளக்கம்:** ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு தினமான இன்று ஒன்றுகூடி வந்திருக்கும் இறை நெஞ்சங்களே! புனித காலத்தின் நுழைவாயில் குருத்து ஞாயிறு. ஒரு கொள்கை வீரனின் இலட்சியப் பயணம் எருசலேம் நகர் நோக்கி நகர்கின்றது. கிறிஸ்து பெருமான் தம் பாஸ்கா மறைபொருளை நிறைவேற்ற எருசலேமிற்கு வருகை தந்ததைத் திருச்சபை இன்று கொண்டாடுகின்றது. ஓ காப்பாற்றுமே என்று பொருளுணர்த்தும் ஓசான்னா என்ற பாடலைப் பாடி குருத்தோலையைக் கையேந்தி பவனியில் பங்கு பெறுகின்றோம். எமது வாழ்வில் வரும் ஒவ்வொரு துன்பமும் ஒரு சிலுவையே அதை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளும்போது அது நமக்கும் மீட்பைக் கொடுக்கிறது. இயேசு பிறந்தது முதல் இறக்கும் வரை துன்பத்தை எதிர்கொண்டார். ஆனால் அதை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார். நாம் துன்பத்தைக் கண்டு துவண்டு விடுகின்றோம். தூர விலகி ஓட நினைக்கின்றோம். ஆனால் துன்பம் இல்லையென்றால் இன்பமில்லை. எனவே நாமும் இந்த இயேசுவின் வெற்றிப் பயணத்தில் பங்கெடுப்போம். எமது துன்பங்களை சுமந்து கொண்டு அவரைப் பின் செல்வோம். இயேசுவை மட்டும் சிந்தித்தவர்களாக பரிசுத்த வாரத்தில் கால்பதிப்போம்.

**முதல் வாசகம் : எசா 50:4-7**

நிந்தனை செய்வோருக்கு என் முகத்தை மறைக்க-வில்லை. இழிநிலையை நான் அடைவதில்லை என்று அறிவேன்.

**பதிலுரைப் பாடல் :**

என் இறைவா என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்

**இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 2:6-11**

கிறிஸ்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் கிறிஸ்துவை உயர்த்தினார்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.

**நற்செய்தி வாசகம் : மாற் 14:1-15:47**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

தாவீதின் மகனுக்கு ஓசான்னா என்று ஆர்ப்பரித்துப் பாடிய நாம் குருத்தோலைகளை கையிலேந்தி இயேசுவின் ஜெருசலேம் பயணத்தை நினைவுகூர்ந்த நாம் புனித வாரத்தில் நுழைகின்றோம் என்ற நினைவோடு குருத்தோலைகள் உயர்வது போல் எமது உள்ளங்களை இறையை நோக்கி உயர்த்திடத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டின் தலைவர்களும் மக்களும் தன்னலப் போர்வைகளை அகற்றி சமத்துவம், சகோதரத்துவம் மலரப் பாடுபடவும் மக்களின் வாழ்க்கையின் வடிவங்கள் மாற்றமடைய பாடுபடவும் எழுச்சி நாயகனாம் இயேசுவைப் போல சிந்திக்கவும் செயல்படவும் வேண்டிய மனநிலையை தந்தருள வேண்டுமென்று...

துன்பம் மனிதனை அளவிடும் அளவுகோல் என்பதை உணரவும், பிறர் துன்பத்தில் குளிர்காய்-வதைவிட்டு விட்டு பிறர் துன்பத்தில் முழுமையாகப் பங்குகொள்ளவும், கடவுள் மீது விசுவாசம் கொண்டு துன்பங்களுக்கு முகம் கொடுக்கவும், பரிசுத்த வாரத்தைப் பயனுள்ளதாக மாற்றிக் கொள்ளவும் இயேசுவின் பாஸ்கா மறை உண்மையைத் தியானிக்கவும் வரமருள வேண்டுமென்று...

## பாஸ்கா ஞாயிறு (உயிர்ப்பின் பெருவிழா) (01.04.2018)

**வாசக விளக்கம்:** "கதிரவன் உதயமானால் காரிருள் மறையுமன்றோ. சாவிற்கு சாவு மணி அடித்து கல்லறைக்கு கல்லறை எழுப்பி காவலர்கள் கதிகலங்கி நிற்க மரணத்தை வென்ற மாமன்னர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவை மகிழ்ந்து கொண்டாட கூடி வந்திருக்கும் அன்பு நெஞ்சங்களே, இறை உறவுகளே! இன்றைய நற்செய்தியில் மகதலா மரியா முதலில் இயேசுவைக் காண கல்லறைக்கு செல்கின்றாள் அவரைத் தொடர்ந்து சீமோன் பேதுருவும் இயேசு அன்பு கொண்டிருந்த மற்ற சீடரும் கல்லறைக்கு சென்றனர். கல்லறைக்கு உள்ளே சென்று கண்டனர், நம்பினர் என்று நாம் வாசிக்கின்றோம். இன்று இயேசுவின் பிறப்பு, வாழ்வு, பாடுகள், மரணம் என்ற நிகழ்வுகள் யாவும் அர்த்தம் பெறுகின்றன. இன்றைய நாள் நம்மையும் கிறிஸ்துவின் உயிர்ப்பின் சாட்சிகளாக, சீடர்களாக வாழ அழைக்கின்றது. நம்முடைய விசுவாசம் இறப்பின் விசுவாசமாக உள்ளதா? அல்லது உயிர்ப்பின் விசுவாசமாக உள்ளதா? நமக்கு இருக்க வேண்டியது உயிர்ப்பின் விசுவாசமே. ஏனெனில் நாம் உயிர்த்த ஆண்டவரின் மக்கள். எனவே நாமும் உயிர்ப்பின் பாடலான அல்லேலூயா பாடி ஆண்டவரை வாழ்த்துவோம் வாருங்கள்.

**முதல் வாசகம் : தி.ப 10:34,37-43**

இறந்த இயேசு உயிர்த்தெழுந்த பின்பு அவரோடு உண்டு, குடித்த நாங்களே இதற்குச் சாட்சிகள்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே. இன்று அக்களிப்போம் அகமகிழ்வோம்.

**இரண்டாம் வாசகம் : கொலோ 3:1-4**

மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள் அங்கு கிறிஸ்து அமர்ந்திருக்கிறார்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா நம் பாஸ்கா ஆடாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறார். ஆகையால் நாம் ஆண்டவரின் பாஸ்காவைக் கொண்டாடுவோமாக. அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 20:1-9**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

துன்பத்தின் மறுபக்கம் உயிர்ப்பு, உயிர்ப்பின் மறுபக்கம் மகிமை. மகிமையின் மறுபக்கம் விண்ணகப் பேரானந்தம் எனக் கூறி தன் மக்களை வழிநடத்தும் திருச்சபைக்கும் தலைவரான திருத்தந்தை மற்றும் ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் உமது ஆசீரை அளித்தருள வேண்டுமென்று....

உயிர்த்த இயேசு தினமும் நற்கருணை வடிவில் நமக்கு தனது உடனிருப்பைத் தருகின்றார் என்பதை நாம் உணரவும், உயிர்த்த இயேசுவை எம் அயலானில் கண்டு கொள்ளவும், திருத்தூதர்களைப் போல் உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாக நாம் வாழவும் உயிர்ப்பு விழாவை எமது விசுவாசத்தின் வெளிப்பாடாகக் கொண்டாடவும் வேண்டிய வரத்தை தந்தருள வேண்டுமென்று...

"கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம்" என்ற பவுல் அடியாரின் வார்த்தையை ஏற்று நாம் வாழவும், நாமும் நமது பாவங்களுக்கு மரித்து தூய வாழ்விற்கு உரியவர்களாக உயிர்த்தெழவும் இன்றைய பெருவிழாவின் மகிழ்ச்சியை ஏழை எளியவருடன் பகிர்ந்து கொள்ளவும் வரமருள வேண்டுமென்று.....

# உயிர்ப்பின் மறைபொருளும், கிறிஸ்தவ வாழ்வும்



கத்தோலிக்க திருச்சபையின் விசுவாச மறைபொ-ருளானது "கிறிஸ்து மரித்தார், கிறிஸ்து உயிர்த்தார், கிறிஸ்து மீண்டும் வருவார்" என்பதாகும் கிறிஸ்தவ வாழ்வு கிறிஸ்துவின் உயிர்ப்பின் மறைபொ-ருளில் முழுமை பெறுகிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பு வரலாற்றில் நடந்த ஒரு நிகழ்வு. இதன் வழியாக கிறிஸ்தவ வாழ்வும் முழுமைபெற்று ஒரு நாள் கிறிஸ்துவோடு உயிர்த்தெழுவோம் என்ற நிலையான நம்பிக்கையை தருகின்றது. காரணம் கிறிஸ்தவ வாழ்வுக்கு கிறிஸ்துவின் உயிர்ப்பு மறைபொருளாக விளங்குகின்றது. கிறிஸ்தவ வாழ்வு முழுவதுமே அவருடைய பாஸ்கா மறைபொருளில் நிறைபெற்றுள்ளது. மனித வாழ்வின் நிலையான தன்மையை உறுதி செய்ய இறைமகன் தன் நிலைபாராது இவ்வுலகம் வந்து தன்னுடைய பாடுகள், மரணம், உயிர்ப்பு என்ற பாஸ்கா மறைபொருள் வழியாக மனிதனுக்கும், கடவுளுக்குமிடையே இருந்த பாவம் என்ற பாலத்தை உடைத்து ஒரு நிலையான இடைநிலையாளராக செயற்பட்டு மனித வாழ்வின் புனிதத்தை உயர்த்தினார். "கிறிஸ்து உயிர்க்க-வில்லை என்றால் நமது விசுவாசம் வீணே" என்று புனித பவுல் கூறுகின்றார். எனவே கிறிஸ்துவின் உயிர்ப்பில் பங்கு கொள்ளும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் "வாழ்வு மாறுபடுகின்ற-தேயன்றி அது எடுக்கப்ப-டுவதில்லை". எனவே இறப்பு என்பது ஒரு நிகழ்வு அல்ல, மாறாக நிலைவாழ்விற்கான முதல்படி. அந்த நிலையை எமக்கு பெற்றுக்கொடுத்தார் நம் பிரான் இயேசு. இறந்தோருள் தலைப்-போறான உயிர்த்தெழுந்த கிறிஸ்து நம்மையும் ஒரு நாள் உயிர்த்தெழச் செய்வார் என்ற நம்பிக்-கையை தருகிறார். "விதை விதைக்கப்படுவது முளைத்து பலன் கொடுக்கவே". அதுபோல விதைக்கப்படும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒருநாள் முளைத்து பலன் கொடுப்பான். இதுவே கிறிஸ்தவ இறப்பு எமக்கு தரும் பாடம். எனவே தான் இறப்பை கண்டு அஞ்சவேண்டி-யதில்லை. இறப்பு என்ற ஒன்று இருந்தால் தான் கிறிஸ்துவை போல நாமும் உயிர்ப்போம். இல்லையேல் எமது கிறிஸ்தவ வாழ்வு அர்த்தமற்றதாக மாறிவிடும். எனவே தான் கிறிஸ்துவின் உயிர்ப்பு என்பது கிறிஸ்தவ வாழ்வின் கொடுமுடியாக திகழ்கின்றது. தவக்-காலத்தை ஆரம்பித்து, 40 நாட்கள் கிறிஸ்துவின் பாடுகளை தியானித்து இன்று அவருடைய உயிர்ப்பில் பங்கு கொள்கின்றோம் என்றால் அது ஒரு வாழ்வின் நிகழ்வு. இத்தகைய தலைப்பேறான கிறிஸ்து-வின் உயிர்ப்பு எம் ஒவ்வொருவருக்கும் விடுக்கும் அழைப்பு "கல்லறையினின்று உயிர்ப்பு" இது கிறிஸ்து-வின் இரண்டாம் வருகையின் போது நிகழும் என்ற நம்பிக்கையில் வாழும்படி அழைக்கின்றது.கிறிஸ்தவ இறப்பிற்கு அர்த்தம் கொடுத்தார் கிறிஸ்து. அவரது இறப்பபின்போது இரண்டாக கிழிந்த திரைச்சீலை கடவுளு-க்கும் எமக்குமிடையே இருந்த முறிவை தகர்த்தெறிந்தது. கடவுளிடம் நேரடியாக மனிதன் சென்றடைய அவருடைய மகனின் பாடுகளில் பங்கு கொண்டு அவருடைய உயிர்ப்பின் வழியாக மீட்பு பெற அழைப்பு கொடுக்கின்றார். எனவே கிறிஸ்துவின் உயிர்ப்பின் விழாவை கொண்டாடும் நாங்கள் விழாவின் அர்த்தம் புரிய வேண்டும். கிறிஸ்தவ வாழ்வின் பெறுமதியான நிகழ்வும் உயிர்ப்பே. நாம் உயிர்ப்போம். கிறிஸ்துவின் நம்பிக்கையில் அவருடைய உயிர்ப்பில் இணைந்து கொள்வோம். எவ்வாறு அவர் இறந்து, அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தாரோ அதுபோல இவ்வுலகில் வாழும் கிறிஸ்தவர்-களாகிய நாமும் இறந்து உயிர்ப்போம். அவருடைய மகிமையில் பங்கு கொள்ளவே. அவருடைய இறையரசின் மக்களாக மாறுவோம். இதுவே இன்றைய உயிர்ப்பின் விழா எமக்கு தரும் செய்தியாக இருக்கின்றது.

**உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துவின் அமைதி உரித்தாகுக.**


**கிறிஸ்துவின் அன்பில்**
**அருட்சகோ. டிலோய்டன் பெர்னாண்டோ**
**தேசிய குருமடம்**
**கண்டி**





உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழ்

# பெஷாக்

அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அமதி.



## 1. பாஸ்கா என்பதன் பொருள் என்ன?

'பாஸ்கா' என்ற அரமேயச் சொல்லானது, எபிரேய சொல்லான 'பெஷாக்' மற்றும் கிரேக்க மொழியில் வினைச்சொல்லான 'பாஸ்கின்' (அதவாது துன்புறுகின்ற) என்ற சொல்லிலிருந்தும் தோன்றியது. "எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன். அடிமை வேலைவாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன். ஆம் அவர்களின் துயரங்களை நான் அறிவேன். எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டில் இருந்து பாலும் தேனும் பொழியும், நல்ல பரந்ததோர் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லலும் இறங்கி வந்துள்ளேன்". (வி.ப 3:7-8) என்ற இறைத்தந்தையின் வார்த்தைகளுக்கேற்ப இஸ்ராயேல் மக்களை பார்வோன் பிடியினின்றும் அடிமைத்தனத்தினின்றும் ஆண்டவராகிய கடவுள் விடுவித்தார்.

மேலும் இது 'ஆண்டவரின் பாஸ்கா'. ஏனெனில், நான் இன்றிரவிலேயே எகிப்து நாடெங்கும் கடந்து சென்று, எகிப்து நாட்டில் மனிதர் தொடங்கி விலங்குவரை அனைத்து ஆண்பால் தலைப்பிறப்பையும் சாகடிப்பேன். ....... இரத்தம் நீங்கள் இருக்கும் வீடுகளில் உங்களுக்கு அடையாளமாக இருக்கும். நான் இரத்தத்தைக் கண்டு உங்களைக் கடந்து செல்வேன். (வி.ப 12:11-13) அவர்களுடைய அழுகுரலுக்கு செவிசாய்த்து அவர்களை மீட்ட இறைத்தந்தையின் அரும்பெரும் செயல் உடன்படிக்கையின் மக்களாகிய இஸ்ரயேலுக்கு வரலாற்றில் மறக்கமுடியாத ஓர் இறையனுபவமாகும். இத்தகைய இறைவனின் மாபெரும் மகிமையான மீட்பு செயலை நினைவுகூரும் வண்ணம் இஸ்ரயேல் மக்கள் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடும் உன்னத விழா 'பாஸ்கா' இந்த பாஸ்கா என்ற அரமேயச் சொல்லுக்கு "கடந்து செல்லுதல்" என்று பொருள்படும்.

## 2. பாஸ்கா விழாவின் இன்றைய பொருள் என்ன?

விடுதலைப் பயண நூலில் 12ம் அதிகாரத்தில் காணப்படும் விழாவிற்கென யூத மரபில் குறிக்கப்பட்ட திருச்சடங்குகள் தான் இயேசு தம் சீடரோடு உண்ட பாஸ்கா. அதாவது இயேசு தாம் பாடுபடுவதற்கு முன் உண்ட கடைசி இராவுணவிற்கு ஒரு வழிபாட்டு சூழலாக அமைந்திருந்தது. பழைய ஏற்பாட்டில் எகிப்தில் இருந்து பெற்ற மீட்பைக் குறித்த பாஸ்கா திருச்சடங்கானது பாவத்திலிருந்தும் இறப்பின் பிடியிலிருந்தும் இயேசு கிறிஸ்து தமது பாடுகளாலும் உயிர்ப்பினாலும் பெற்றுத்தந்த முழுமையான மீட்பைக் குறிக்கும் விழாவாக புதிய பொருள் பெற்றது. மேலும் கிறிஸ்துவில் நிறைவேறிய இப்புதிய பாஸ்கா மறைநிகழ்ச்சியே திருவழிபாட்டு ஆண்டின் மையமாகவும் கொண்டாடப்பட்டது. இப்பாஸ்கா விழாவினை தொடக்ககால கிறிஸ்தவர்கள் தங்கள் முதலாவதான விழாவாக கொண்டாடினார்கள்.

இவ்விழாவை தாம் ஆங்கிலத்தில் 'ஈஸ்டர்' (Easter) என்றழைப்போம். ஈஸ்டர் என்ற சொல் கிழக்கிலிருந்து மெசியா வந்தார். அல்லது காலைக் கதிரவன் கிழக்கில் உதிப்பது போல் கிறிஸ்து உயிர்த்தார் என்ற புரிதலால் வந்திருக்கலாம்.

## 3. பாஸ்காவின் முப்பெரும் நாட்கள் யாவை?

**நாள் 1 – புனித வியாழன் மாலை – புனித வெள்ளி மாலை**

**நாள் 2 – புனித வெள்ளி மாலை – புனித சனி மாலை**

**நாள் 3 – புனித சனி மாலை – உயிர்ப்பு ஞாயிறு மாலை**

யூதர்களின் மரபுப்படி ஒரு நாளானது முந்தைய நாள் மாலைப் பொழுதிலிருந்து ஆரம்பமாகின்றது. புனித வியாழன் இராவுணவு திருப்பலியுடன் ஆரம்பமாகும் முப்பெரும் நாட்கள், பாஸ்கா திருவிழிப்பை மையமாகக் கொண்டு உயிர்ப்பு ஞாயிறு மாலைத் திருப்புகழ்மாலையுடன் நிறைவு பெறுகின்றது.

## 4. புனித வியாழன் நாம் ஏதனை நினைவுகூர்ந்து கொண்டாடுகின்றோம்?

தாம் பாடுபடுவதற்கு முன்தின இரவு தன் சீடர்களோடு தம் மரணத்தை அருள் அடையாள முறையில் நிறைவேற்றினார். புனித வியாழன் மாலை வழிபாடானது இயேசுவின் இராவுணவு நற்கருணை ஏற்படுத்தியது மற்றும் பாதம் கழுவும் சடங்கை உள்ளடக்கியது. இது இயேசுவின் சீடத்துவ அன்பைக் குறிக்கின்றது. நான்காம் நூற்றாண்டில் பாதம் கழுவும் சடங்கு திருமுழுக்கோடு இணைந்திருந்தது. பின் துறவற மடங்களில் மாத்திரம் இடம்பெற்றது. 7ம் நூற்றாண்டிலிருந்து புனித வியாழன் அன்று எல்லா ஆலயங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டது. இப்பழக்கம் இன்றும் தொடர்கிறது. கிறிஸ்தவ மரபுப்படி ஆழ்ந்த பொருள் கொண்ட புனித வியாழன் திருப்பலியில் அனைத்து பங்கு மக்களும் பங்கேற்க வேண்டும்.மாலைத் திருப்பலியின் வருகைப் பல்லவி பாஸ்கா மறைபொருளின் இம்முப்பெரும் நாட்களின் மையக் கருத்தையும் தருகிறது. "நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்டமாட்டேன். அதன் வழியாகவே என்னைப் பொறுத்தவரையில், உலகம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. உலகைப் பொறுத்தவரையில் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கின்றேன்" (கலா 6:14) மேற்கூறிய விவிலிய வார்த்தைகளில் பாஸ்கா மறைபொருளின் முழுப்பொருளையும் காணக்கூடியதாக உள்ளது. அதாவது மகிழ்ச்சி, உயிர்ப்பு, மீட்பு ஆகியன சிலுவையின் பாடுகளிலும் கூட எதிரொலிக்கின்றன.

### 4.1 புனித வியாழன் 'உன்னதங்களிலே'க்குப் பின் ஆலய மணிகள் ஒலிப்பதில்லை ஏன்?

புனித வியாழன் அன்று, தவக்காலத்தில் பாடாத உன்னதங்களிலே என்ற வானவர் பாடல் ஆடம்பரமாக பாடப்பட, ஆலய மணிகள் ஒலிக்கப்படுகின்றன. மேலும் மீண்டும் பாஸ்கா ஞாயிறு அப்பாடல் பாடும் வரை எந்தவிதமான மணியோசையோ ஆடம்பர இசைக்கருவிகளோ ஒலிக்கப்படமாட்டாது. இந்த வழக்கம் கி.பி 850 ஆண்டு முதலாகவே பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த தாழ்ச்சியின் அடையாளம் இயேசு இறைசித்தத்திற்கு கீழ்ப்படிந்ததை குறிக்கின்றது. ஆடம்பர இசையை தவிர்க்கும் இதனை காதுகளுக்கு நோன்பு என்று கூறுவார்கள்.

### 4.2 பாதம் கழுவும் சடங்கின் பொருள் என்ன?

இது மிகவும் எளிமையான சடங்கு. யூதச் சமுதாயப் பின்னணியில் இந்நிகழ்வினைப் பார்க்கின்றபோது தன் வீட்டில் இருக்கும் அடிமை தனது எஜமானின் கால்களைக் கழுவுவது வழக்கம். இயேசு வித்தியாசமான அணுகுமுறையைக் கையாளுகின்றார். போதகரும் ஆண்டவருமான இயேசு தனது சீடர்களின் பாதங்களைக் கழுவி, தன் சீடர்களும் அவ்வாறே செய்ய பணிக்கின்றார். இதுவே யோவான் நற்செய்தியின் படி "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற இயேசுவின் கட்டளை "போதகரும் ஆண்டவருமான நான் உங்கள் பாதங்களை கழுவினேன். நீங்களும் ஒருவர் ஒருவருடைய பாதங்களை கழுவுங்கள் என்று பணித்தார். மனத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் வேற்றுமைகளைக் களைந்து நமக்கு அடுத்திருப்போர் அனைவரையும் ஆண்டவரின் அன்பு சாயலாக ஏற்றுவாழ இயேசுவின் பாதம் கழுவும் சடங்கு நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

### 4.3 இன்று காணிக்கை சேர்ப்பதற்கு சிறப்பேதும் உண்டா?

இன்று சேகரிக்கப்படும் காணிக்கைக்கு சிறப்புண்டு. இன்று ஏழைகளுக்காக, பசி, பிணி ஒழிப்புக்காக காணிக்கை எடுக்கப்படுகிறது. நம்மை நிறைவு செய்யும் இறைவன் நம்நிலை தெரிந்தவர். என் பொருட்டு, என் சாயலான சகோதரர்களுக்கு நீங்கள் உதவியபோது எனக்கே செய்தீர்கள் என்றார். இத்தவக்காலத்தில் நாம் நோன்பிருந்தோம். பல தேவைகளை குறைத்தோம், மாமிச தவிர்ப்பை மேற்கொண்டோம். இதனால் நமது






கையிருப்பு வழமையைவிட அதிகமாக இருக்கும். அவைகளை இல்லாதாரோடு பகிரும் போது தான் நமது நோன்பிற்கு பலமிருக்கும். எனவே என் தகுதிக்கேற்ப உதவி செய்வது ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்படும். உதவி தேவைப்படுவோர்க்கு நீங்கள் நேரடியாகவே உதவுவது கூட வரவேற்கத்தக்கது. திருவழிபாட்டு ஆண்டில் இந்த நாளுக்கு மாத்திரமே "அன்பும் நட்பும் எங்குள்ளதோ, அங்கே இறைவன் இருக்கின்றார்" என்ற காணிக்கைப் பாடலைப் பாட பரிந்துரைக்கின்றது.

### 4.4 நற்கருணை பவனி இடம்பெறுவதன் நோக்கம் யாது?

நன்றி மன்றாட்டின் பின் நற்கருணையானது வேறோர் இடத்திற்கு பவனியாக எடுத்துச் செல்லப்படுகிறது. இது இயேசு இராவுணவு மேசையிலிருந்து, கெத்சமனி தோட்டத்திற்கு செபிக்கச் சென்றதை அடையாளப்படுத்துகின்றது. இயேசு தனியாகச் செல்லவில்லை. தன்னோடு விழித்திருந்து செபிக்க மூவரை அழைத்துச் சென்றார். "என்னோடு விழித்திருந்து செபியுங்கள்" என்றார். தனக்கு ஆறுதலாயிருக்க அவர்களை கூட்டிச் சென்றார். நம் இயேசு இன்றும் நம்மை அழைக்கின்றார். தன்னோடு விழித்திருந்து செபிக்க. இயேசுவின் பிரசன்னம் வேதனைத் தீயில் உழல்பவர்களுக்கும், துன்பத்தில் துவண்டு வாழ்பவர்களுக்கும், அடிமைப்படுத்தப்பட்டு அல்லலுறுபவர்களுக்கும், நிம்மதியைத் தொலைத்துவிட்டு நிர்க்கதியாய் நிற்பவர்களுக்கும் ஆறுதல் அளிக்கும் அருமருந்து என்பதை உணர்ந்து அவரோடு சங்கமிப்போம். இப்பவனியின் போது "பாடுவாய் என் நாவே" என்ற பாடல் பாடப்படும்.

பீடம் வெறுமையாக்கப்படும், அலங்காரங்கள் அகற்றப்படும் "மணமகன் பிரிய வேண்டிய காலம் வரும் அப்போது அவர்கள் நோன்பிருப்பார்கள்" (லூக் 5:35), என்ற இறைவார்த்தைக்கேற்ப இறைமக்கள் புனித வியாழன் மாலையிலிருந்து பாஸ்கா திருவழிப்பு வரை 40 மணிநேர நோன்பிருந்ததாக தூய ஐரேனியுஸ் மற்றும் தூய அகுஸ்தீனார் சான்று பகர்கின்றார்கள்.



## 5. புனித வெள்ளியினை ஏன் Good Friday என்கின்றோம்?

இன்று என்ன காரியத்தில் இறங்க விரும்பினாலும் சிலர் நாள், நேரம் பார்ப்பதை பழக்கமாகக் கொண்டுவிட்டோம் இருந்தாலும் ஒருவர் இறந்த நாளை நாம் நல்ல நாளாக கணிப்பதில்லை. ஆனால் இயேசுவின் இறப்பு நாள் இதற்கு விதிவிலக்கு. இயேசு இறந்த நாளை ஆங்கிலத்தில் Good Friday என்போம். இது ஓர் மாவீரரின் இறப்பு நாள். தியாகத்தின் தினம். வீரசாட்சியின் மரணநாள் கொண்டாடப்பட வேண்டிய நாள். இவ்வுலகை தீர்ப்பிடவல்ல, மாறாக வாழ்வு கொடுக்க வந்த வள்ளலாம் இயேசு தன் உயிரை நமக்காக முற்றுமுழுதாக தந்தையிடம் ஒப்படைத்த நாள். சாவுக்கே சாவு மணி அடித்த சாதனைப் படைத்த நாள். உலகம் உய்வதற்காக பலியாகும் என் தசையே என கூறி நம்மை நிலைவாழ்விற்கு அழைத்துச் செல்ல, பாம்பினால் கடிபட்டவர்கள் நலம் பெற, மோசேயால் வெண்கல பாம்பு பாலைவனத்தில் உயர்த்தப்பட்டதுபோல, இறைமகன் இயேசு நம் பாவத்தின் பிடியில் இருந்து விடுபட சிலுவையில் தன்னைத் தந்த நாள் இது. முன்னர் இந்நாள் வழிபாட்டுக்குரிய திருவுடையின் நிறம் கறுப்பு. ஆனால் இன்று சிகப்பு. வீரசாட்சியின் வெற்றியின் அடையாளம்.

### 5.1 புனித வெள்ளியன்று நோன்பு, மாமிச தவிர்ப்பு கடைபிடிக்க வேண்டுமா?

உடன் பதில் ஆம் கடைப்பிடிக்க வேண்டும். இது அன்பினால் உந்தப்பட்ட நோன்பு. இதனை "பாஸ்கா நோன்பு" என்பார்கள். தவக்கால நோன்பைவிட மாறுபட்டது. திருச்சபையின் தொடக்ககாலத்திலேயே புனித வெள்ளி, புனித சனி ஆகிய நாட்களில் நோன்பு இருந்ததற்கான சான்றுகள் உண்டு. உணவு மற்றும் நீர் கூட அருந்தாமல் இருந்தார்கள் என்று ஹப்போலிட்டஸ் எழுதிய "திருத்தூது மரபுகள்" சான்று பகர்கின்றது.

### 5.2 புனித வெள்ளி வழிபாட்டின் கூறுகள் யாவை?

கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் தியானிப்பதற்கு ஏற்றவாறு வழிபாடுகள் மூன்று பகுதிகளைக் கொண்டது. புனித வியாழன் வழிபாட்டின் தொடர்ச்சியாக புனித வெள்ளி வழிபாடு அமைகின்றது.

1) **இறைவார்த்தை வழிபாடும், பொது மன்றாட்டும்**
2) **திருச்சிலுவை ஆராதனை**
3) **திருவிருந்து**

கிறிஸ்து தம்மையே வெறுமையாக்கினார் என்பதை குறிக்க பீடம் பொலிவிழந்து காணப்படுகிறது. பாவத்தினால் மனிதன் இறைவன் முன்னிலையில் வலுவிழந்து போகின்றான் என்பதன் அடையாளமாக குருவானவர் பீடத்திற்கு முன்னால் முகம் குப்புற விழுந்து செபிக்கிறார். இன்றைய தினம் மாத்திரமே திருப்பலி இல்லாமல் நற்கருணை விருந்து இடம்பெறுகின்ற ஒரே நாள். இதற்காக நேற்றைய திருவழிபாட்டில் போதியளவு அப்பம் ஆசீர்வதிக்கப்படுகின்றது.

### 5.3 இன்றைய நாளில் இடம்பெறும் பொதுமன்றாட்டின் சிறப்பு என்ன?

இயேசு ஓர் குறிப்பிட்ட இனத்துக்காக, நாட்டுக்காக, மக்களுக்காக சிலுவையில் மரிக்கவில்லை. மாறாக உலக மக்கள் அனைவர்க்காகவும் சிலுவையில் மரித்தார். அவர் எல்லார்க்கும் சொந்தக்காரர். எனவே திருச்சபை கடவுளை ஏற்றுக்கொள்ளாதவர், துன்புறுவோர், நாட்டை ஆள்வோர், உலக அமைதி, திருமுழுக்கு பெற ஆயத்தநிலையில் இருப்போர் ஆகிய பலதரப்பட்ட மக்களுக்காக செபிக்கின்றது.

### 5.4 சிலுவை மரத்தின் சிறப்பம்சம் யாது?

தொடக்கத்தில் புனித வெள்ளி எவ்வித சிறப்பு வழிபாடும் இல்லை. 4ம் நூற்றாண்டில் சில வழிபாடுகள் வளர்ந்தன. இக்காலத்தில் தான் சிலுவையை வணக்கம் செய்யும் பழக்கம் தொடங்கியது. எந்தெந்த ஆலயங்களில் திருச்சிலுவை திருப்பண்டம் இருந்ததோ அங்கெல்லாம் திருச்சிலுவை ஆராதனை இடம்பெற்றது.

10ம் நூற்றாண்டுகளில் திருவழிபாடு தவிர்ந்த வேறு சில பக்தி முயற்சிகளும் பரவின. (பாஸ்கா நாடகம், சிலுவையை கல்லறையில் வைத்தல்) இவைகளினால் வழிபாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டன. எனினும் 1955இல் வழிபாட்டு மறுசீரமைப்பினால் தற்போது உள்ளபடி வழிபாடுகள் அமைந்துள்ளன.

சிலுவைமரத்தின் மாண்பினை, சிலுவை மரத்தினை முத்தி செய்யும் போது பாடப்படும் பாடல் வரிகளில் சிலவற்றை கூர்ந்து அவதானியுங்கள்.

**"தீமையான கனியைத் தின்று**
**சாவிலே விழுந்த நம்**
**ஆதித் தந்தைக் குற்ற தீங்கை**
**கண்டு நொந்த சிருட்டிகர்**
**மரத்தால் வந்த தீங்கை நீக்க**
**மரத்தை அன்றே குறித்தனர்"**

**மரமே நீயே உலகின் விலையைத்**
**தாங்கத் தகுதியாயினை**
**திருச்செம்மறியின் குருதி உன்மேல்**
**பாய்ந்து, தோய்ந்ததாதலால்**
**புயலில் தவிக்கும் உலகிற்கெல்லாம்**
**புகலிடம் நீ, படகு நீ**

## 6. ஆண்டவருடைய கல்லறைக்கருகில் காவல் காப்பது ஏன்?


புனித சனியன்று திருச்சபை ஆண்டவருடைய கல்லறைக்கருகில் அவருடைய பாடுகளையும் மரணத்தையும் சிந்திக்கின்றது. தொடக்ககாலத் திருச்சபையில் புனித சனியானது இயேசுவைக் கல்லறையில் வைக்கப்பட்ட நாளாக நினைத்து எவ்வித வழிபாடும் இடம்பெறவில்லை. இயேசுவின் இறப்பையும் கல்லறையில் அவருடைய அடக்கத்தையும் மையப்படுத்தி தியானித்தார்கள். நள்ளிரவிற்குப் பிறகுதான் திருமுழுக்கு மற்றும் திருவிருந்து கொண்டாட்டத்தில் அழுகை மகிழ்ச்சியாக மாறியது.

### 6.1 பாஸ்கா திருவிழிப்பின் முக்கிய கூறுகள் எவை?

1) **திரு ஒளிவழிபாடு**
2) **இறைவார்த்தை வழிபாடு**
3) **திருமுழுக்குக் கொண்டாட்டம்**
4) **திருவிருந்து**

### 6.2 திருஒளி வழிபாடு எதற்காக?

4ம் நூற்றாண்டு காலங்களில் ஒவ்வொரு மாலைத் திருப்புகழ்மாலை வழிபாடு திரியை எரியச் செய்யும் சடங்கோடுதான் ஆரம்பமாகும். இதில் கிறிஸ்தவர்கள், அந்த நாளில் கிடைத்த இயற்கை ஒளிக்கு நன்றி கூறினர். ஏனெனில் ஒளி உயிர்களை வாழ்விக்கின்றது. மேலும் மெழுகுவர்த்தி இருளை போக்குகின்றது. ஒளி கொடுக்கின்றது. இவைகளுக்கு மேலாக கிறிஸ்துவே உலகின் உண்மையான ஒளி என்பதை நினைவுகூர்ந்தார்கள். உயிர்ப்பு மெழுகுவர்த்தியானது புதிதாக 15



ஞான ஒளி
GNANA OLI
ඥාන ඔලි
25 பங்குனி, 2018





# இறைமகன் இயேசு ஜெஸ்தமனியில் சிந்திய குருதி

மணம் வீசும் பூக்கள் அடர்ந்த வனமே பூங்காவனம் (அங்கு)
தேனெடுக்க தேனீக்கள் மட்டுமே வந்து போவதில்லை
உடல் உள்ளத்து புழுக்கம், அகற்ற மனிதர்களும் திரளாய்
வந்து போகும் இடமென வழக்கமாகிப் போனது அன்றும் இன்றும்

அப்படியொரு வனம் நம் இறைமகன் இயேசுவின் காலத்தில்
ஜெருசலேம் நகருக்கருகில் அவ்வனம் செழுமையுடன் இருந்ததாம்,
கெஸ்தமனி எனும் இடத்தில் இருந்த அவ்வனத்திற்குள் (அன்று)
சீடர்களோடு இறைமகன் சென்று வந்ததை அறிவோம்.

இறையாட்சி அறிவிப்புக்கு எங்கெங்கோ நடந்து சென்றவர்
இளைப்பாறலுக்கு எங்கும் இருந்தெழுந்ததாய் சொல்லாத விவிலியம்
இறைமகன் அவ்வனத்திற்குள் போய்வந்ததை குறிப்பாய் சொல்ல
சிறப்பொன்று உள்ளதென்பதன் சுருக்கத்தை அறிந்திடுவோமே

பட்டுத் தவிக்கப் போகும் பாடுகளை, துயரங்ளை (முன்பே)
பரமன் மகன் அறிந்து வைத்து பதறிக் கொண்டிருந்தாராம்.
மனதின் பாரங்களைச் சுமந்து மலையிடை வனத்துள் சென்று
மனப் பாரத்தோடு வந்ததை அறிந்தால் அச்சுமை அனைவருக்கும் வருமே.

சீடர்கள் மூவரோடு திடமாயச் சென்ற இயேசு (அங்கே)
மூவரைத் தவிர்த்து தனியே முழந்தாழ் படியிட்டு அமர்ந்து
தனக்கு இனி நேரப்போகும், துயரினை எண்ணிக்கொண்டே
தன் கரம் நீட்டி பெரும் தவிப்புடன் வேண்டலானார்.

இதுவரை குடித்த கிண்ணம் இனிபெனும் சுவைத்தரக் கண்டேன்
இனிமேல் நான் அருந்தும் கிண்ணம் எத்தனை கசப்பைத் தருமோ
எந்தையை ஏறெடுத்தேன் எடுத்திடும் அத்துன்பக் கிண்ணம்,
சிந்தையில் கருணைக்கொண்டு அகற்றிடும், அக்கிண்ணமென்றார்.

திட்டம் வகுத்தவரின் செவிவரை வேண்டல் சென்றும் (துயர்)
பட்டே மரிக்கக் வேணடுமென பட்டென பதிலும் வரவே,
கொட்டியது வியர்வை மனுமகன் நெற்றியின் பரப்பிலிருந்து
கெட்டியான செந்திற இரத்தமாய் வீழ்ந்தது வியர்வை புவியில்.

நீரினால் ஆன வியர்வை நம் நெற்றியில் சுரந்தால்கூட
சட்டென்று துணியெடுத்து சடுதியில் துடைத்திடுவோமே.
குருதியாய் வியர்வை அங்கே கொட்டிய போதும், இயேசு (தந்தை)
இறுதியாய் வகுத்த திட்டம் அதை ஏற்பதே சித்தமென்றிருந்தார்.

கசையடி பட்டுத் தேகம் கல்லையும், முள்ளையும் கடந்து
கல்வாரி மலையும் சாவும் கர்த்தரின் கண்முன் ஓட (அதை)
ஒருத்தரும் அறியா வண்ணம், உறங்கிடும் சீடர் முன் வந்து
தனக்கென செபிப்பதற்கு இயலாத நிலை சொல்லி நொந்தார்.

படிப்படியாய் அவர் படப்போகும் பாடுகளுக்கெல்லாம் (முதல்)
படியான துயரம் இது வென்று அறிந்தே (நமக்கும்)
படிப்பினையாக்க திருச்சபை இதனையே தேர்ந்து (அதையே)
துயரத்தில் மறை உண்மையில் தொடக்கமாய் அமைத்தது.




# சிலுவைக் காட்சி

குன்றின்மீது பார்த்திட்டா
கொடிய சிலுவைக் காட்சி!
நன்றி சொல்லும் நெஞ்சம்
நமதென்பதற்கே சாட்சி (குன்றின்)

காடுமேடு கார் இருளில்
கால் இடற அலைந்தோம்
மேடு பள்ளம் சிதறி ஓடும்,
மந்தையெனக் குலைந்தோம்
தேடுகின்ற மேய்பராக
தேவன் காக்க வந்தார்!

ஈடு இல்லா தேவனுக்கு
இன்னல்கலே தந்தோம்.

எல்லையற்ற இறைவனிங்கு
இயேசுவாக நின்றார்
நல்லதான அன்புவழி
நடந்திடுங்கள் என்றார்!
அல்லல் தரும் பாவ வழி
ஆசையோடு சென்றோம்
தொல்லைத் தந்து துடிக்க வைத்து
தூயவரைக் கொன்றோம். (குன்றின்)



# கல்வாரிப் பாதை

கல்வாரிப் பாதையை
நினைக்கையிலே
பாறையும் கசிந்து
உருகிடுமே
இயேசுவின் பாடுகளின்
பயணத்திலே
கண்ணீரும் வற்றிப்
போகிடுமே!

நன்மையைத் தவிர
ஏதொன்றும் அறியாது
அன்பையே போதித்து
பகைவரை நேசித்து
பேய் பிணி அகற்றி
பசியினைப் போக்கிய
உத்தமர் இயேசுவுக்கு
சிலுவை மரம்

ஏழைகளை நேசித்து
தாழ்ந்தோரை உயர்த்தி
பெண்களின் அடிமைச்
சங்கிலியை உடைத்து
பாவங்கள் மன்னித்து

மறுவாழ்வு தந்த
பரமன் இயேசுவுக்கு
முள்ளால் முடி

அன்பு, நீதி, சமத்துவம்
தழைத்திட
தந்தையின் அரசு
மண்ணிலே செழித்திட
தம்மையே உணவாய்
பானமாய் தந்திட்ட
திருமகன் இயேசுவுக்கு
மரணத் தீர்ப்பு.

மானிடமே இது
மாபெரும் பாதகம்
மாசற்ற மைந்தனின்
இரத்தம் சிந்த நமது
பாவமும், பழியும்
காரணமாய்
அன்பரே எங்களை
மன்னித்தருளும்
எங்களின் பாவங்களைப்
போக்கியருளும்.

# இதோ அவரை வைத்த இடம்



தானங்களில் சிறந்ததும் உயர்ந்ததும் உயிர்த்தானம். இவ்வுலகில் பலர் பல காரணங்களுக்காக உயிரைத் தந்துள்ளனர். தங்கள் மூதாதையருக்குக் கொடுக்கப்பட்ட சட்டங்களை மீறுவதைவிட சாகத் துணிந்த மக்கபேயர்கள் உண்டு (2மக். 7:2). இஸ்ராயேல் கடவுளின் இறையாண்மையைப் பாதுகாக்க உயிரை மாய்த்துக்கொண்ட தீவிரவாதிகளும் உண்டு. நம் தாய் நாட்டின் விடுதலைக்காகவும், பாதுகாப்புக்காகவும், வீரமரணம் எய்திய வீரர்கள் உண்டு. சமுதாயத்தின் மேன்பாட்டுக்காக உயிரிழந்தவர்களும் உண்டு. ஆனால் இயேசுவோ, குறிப்பிட்ட ஒரு சிலருக்காக அல்ல, உலக மக்கள் மீட்பு எனும் விடுதலையும், வாழ்வும் பெறவேண்டி தன்னுயிரை தானாகவே தந்துவிட்டார். தன்னுயிரைத் தந்து மண்ணுயிரை மீட்ட இயேசுவின் கல்லறையை காண போவோமா?

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு, தெடார்புடைய ஒவ்வொரு நிகழ்வும், நம் கவனத்தை ஈர்க்கிறது.

**அவர் பிறந்த மாட்டுத் தொழுவம்**
**அவர் போதிக்க பயன்படுத்திய படகு**
**அவர் ஏறிச் சென்ற கழுதை**
**அவர் தலையில் சூட்டப்பட்ட முள்முடி**
**அவர் தோளில் சுமந்த சிலுவை**

இவ்வாறு அவரோடு தொடர்புடைய ஒவ்வொன்றும், நம்மை பிரமிக்க வைக்கின்றது எனலாம்.

கல்லறையை மூடியிருந்த கல்லைப் புரட்டி அதன் மேல் அமர்ந்திருந்த ஆண்டவரின் தூதர் "அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்" அஞ்சாதீர்கள், இயேசுவின் தலைமாட்டில் ஒருவரும், கால்மாட்டில் இன்னொருவருமாக இரு வானதூதர்கள் உள்ளே அமர்ந்துள்ளனர். இயேசுவின் உடல் கிடத்தப்பட்டிருந்த இடத்தை அவர்கள் காட்டுகின்றனர். குனிந்து கல்லறைக்குள்ளே வாருங்கள் பயப்பட வேண்டாம்.

## தூய்மையான, அமைதியான இடத்திற்கு வாருங்கள். வாருங்கள்! இது மிகவும் தூய்மையான இடம்

நாற்றம் அடிக்குமோ என கல்லறைக்குள் எட்டிப்பார்க்கவும் பயமாக உள்ளதா? உள்ளே நுழைய பயப்பட வேண்டாம். இறந்த உடலிலிருந்து வெளிவரும் நீரும் புழுக்களும், தொற்று நோய்களை விளைவிக்கும் என்றும் பயம் உள்ளதா? ஆனால் பயப்பட வேண்டியதில்லை. காரணம், இயேசு பாதாளத்திலே விடப்படவில்லை. மேலும் அவரது உடல், அழிவுற இறைவன் விடவில்லை. நிக்கோதேம் என்பவர் கொண்டு வந்த வெள்ளைப்போளமும், சந்தனத்தூளும் கலந்த நறுமணப் பொருட்கள் கல்லறையில் நறுமணத்தைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன. எனவே மீண்டும் அழைக்கிறோம் வாருங்கள் இயேசுவின் உடலை வைத்த இடத்தைப் பாருங்கள்.

இயேசுவின் கல்லறைக்குள் உங்களை அழைப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. இந்த இடம் மிகவும் அமைதியான இடம். எங்கே நிம்மதி கிடைக்குமோ அங்கே தனக்கோர் இடம் வேண்டும் என ஏங்குவோர் பலர். பரபரப்பான இவ்வுலகில் போராட்டமிகு இவ்வாழ்வில் சற்றே இளைப்பாற இடம் ஏதும் கிடைக்குமா? என ஏக்கப் பெருமூச்சு விடுவோர் பலர். உடலுக்கு தூய்மையும், மனதுக்கு நிம்மதியையும், ஆன்மாவுக்கு அமைதியையும் அளிக்கும் ஒரே இடம் தான் கல்லறை. என்னிடம் வாருங்கள் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என அழைக்கிறது இயேசுவின் கல்லறை. எனவே வாருங்கள் அவர் உடலை வைத்த இடத்தைப் பாருங்கள்.

## இயேசுவின் கல்லறை விலையுயர்ந்த கல்லறை

இது எவர் வேண்டுமானாலும் அடக்கம் செய்ய பயன்படுத்தப்படும் கல்லறை அல்ல. பொதுக் கல்லறையும் அல்ல. அரிமத்தியா ஊரைச் சார்ந்த யோசேப்பு எனும் செல்வந்தர் தனக்கென பாறையில் குடைந்து வைத்திருந்த விலை அதிகமான கல்லறை. ஏழையாகவே பிறந்து ஏழையாகவே வாழ்ந்த கிறிஸ்துவுக்கு இந்த அளவு விலையுயர்ந்த கல்லறை. அவர் பளபளக்கும் பட்டுத் துணிகளை உடுத்தி வாழ்ந்த மாளிகை மனிதர் அல்ல. மேலிருந்து கீழ்வரை தையலில்லாமல் நெய்யப்பட்ட அங்கியையே அணிந்திருந்தார். தலை சாய்க்கவும் இடமில்லை என்கிற அளவுக்கு ஏழ்மையில் வாழ்ந்தவர். பின் ஏன் அவருக்கு விலை உயர்ந்த கல்லறை?

இயேசு பாடுகள் படும் வரை மகிமைப் படுத்தப்படவில்லை. தந்தை தனக்கிட்ட பணியை செய்து முடிக்கும் வரை இயேசுவின் உடல் எச்சிலாலும், வசைச் சொற்களாலும், மிகுந்த அமமானத்திற்கு உள்ளாக்கப்பட்டது. அவரது உடல் புழுதியில் புரட்டியெடுக்கப்பட்டது. இரத்தக் காயங்களால் உருக்குலைக்கப்பட்டது. மனிதரால் இகழப்பட்டு துன்புறும் மனிதராய், துயரத்தில் ஆழ்ந்தவராய், அருவருக்கத்தக்கவராய்க் காணப்பட்டார். உடல் அளவில் இயேசு பட்ட அவமானங்கள் எல்லாம் அவர் தம் மீட்புப் பணியை முடிக்கும் வரையில் தான் இறைவன் அனுமதித்தார். இதற்குமேல் இயேசுவின் உடலை அவமானத்துள்ளாக்க இறைவன் அனுமதிக்கவில்லை. இந்த உடல் மிகவும், கௌரவமான முறையில் அடக்கம் செய்யப்பட வேண்டும், மூன்று நாட்கள் மட்டுமே அந்த உடலை கல்லறையில் வைக்க வேண்டியிருப்பதால், மதிப்பு மிகு விலையுயர்ந்த கல்லறையை இறைவன் தேர்ந்து கொண்டார். அவரது அடக்கச் சடங்கில் செல்வந்தர் யோசேப்பும், தலைமைச்சங்க உறுப்பினர்கள், நிக்கோதேம் பங்கேற்றனர். அவரை அடக்கம் செய்ய வெள்ளைப் போளமும், சந்தனத் தூள்களும் கலந்த ஏறக்குறைய முப்பது கிலோகிராம் எடையுடைய நறுமணப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. அளவில்லாமல் அவமானப்படுத்தப்பட்ட இயேசுவின் உடல் வரலாற்றில் கண்டிராத அளவுக்கு வரையறையின்றி மகிமைப்படுத்தப்பட்டது. அவமானமிக்க பாடுகள் வழியாக தன் மீட்புப் பணியை நிறைவேற்றிய இயேசுவை விலையுயர்ந்த கல்லறையில் அடக்கம் செய்து மகிமைப்படுத்தினார் இறைவன்.


## இரவல் கல்லறை

இயேசுவின் கல்லறை ஒரு புதிய கல்லறை. "அதற்கு முன்பு யாரையும் அதில் அடக்கம் செய்ததில்லை"

நல் மனிதன் யோசேப்பு தனக்கென குடைந்து வைத்திருந்த கல்லறையில் இயேசுவை அடக்கம் செய்தார். அதனால், யோசேப்பில் கல்லறை பாக்கியம் பெற்றது. அன்றுமுதல் அது ஒரு அரசக் கல்லறை என பெயர் பெற்றது. மூன்று நாட்களுக்கு மட்டுமே இது இரவலாகத் தரப்பட்டிருந்தது. ஆனால் அது இயேசுவின் பொன்னுடலைத் தாங்கியிருந்த காரணத்தினால் காலமெல்லாம் புனிதமானதாகப் போற்றப்படுகின்றது.

## மீண்டும் கல்லறையை உற்றுப் பார்ப்போம்

நாம் இயேசுவின் கல்லறையிலிருந்து வெளிவரும் முன்பாக மீண்டும் ஒரு முறை குனிந்து உற்றுப்பார்ப்போம். அதோ அங்கே சில துணிகள் கிடக்கின்றன. இயேசுவின் உடலைச் சுற்றியிருந்த துணிகளும், அவரது தலையை மூடியிருந்த துண்டும் இருக்கின்றன. அத்துண்டு மற்றத் துணிகளோடு இல்லாமல் ஓரிடத்தில் தனியாக சுருட்டி வைக்கப்பட்டிருக்கிறது (யோவான் 20:5-7). இயேசுவின் உடலை அவருடைய சீடர்கள் திருடிச் சென்றுவிட்டதாக தலைமைக் குருக்களும் பரிசேயர்களும் பொய்ப்பிரச்சாரம் செய்து வந்தனர். அது உண்மையென்றால் அவருடைய ஆடைகள் ஓரிடத்தில் அழகாக சுருட்டி வைக்கப்பட்டதிலிருந்தே அவசர அவசரமாக எதுவும் நடக்கவில்லை என்பது தெளிவாகிறது. இயேசுவுக்கு குறிக்கப்பட்ட நேரம் வரை அவர் அக்கல்லறையில் துயில் கொண்டிருந்தார்.





உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழ்

# உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாவோம்



இயேசுவின் உயிர்த்தெழுதல் ஆனது இறைவனின் மீட்புத்திட்டத்தின் உச்ச வெற்றியாக கருத முடியும், அதாவது இறைவன் தம் மக்களைப் பாவ அடிமைத்தனத்திலிருந்து மீட்க சித்தம் கொண்டிருந்தார். இதற்கமைய தனது ஒரே மகன் இயேசுவை அனைத்து மக்களினதும் பாவத்திற்கும் பரிகாரப்பலியாக ஒப்புக் கொடுத்தார். இதனை 1யோவான் 4:9-10 இல் தெளிவாக காண முடியும்.

“நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் கடவுள்மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல, மாறாக அவர் நம்மீது அன்பு கொண்டு தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார்”. ஆகவே இயேசுவின் பிறப்பில் ஆரம்பித்த இறைவனின் மீட்புத்திட்டம் கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பில் முழுமை பெறுகிறது. யூத சாம்ராஜ்யத்தின் சமய சம்பிரதாயங்களையும் சட்ட திட்டங்கள் அனைத்தையும் அப்படியே அச்சொட்டாகக் கடைப்பிடித்த யூதப் பெருந்தலைவர்கள் தமது கருத்துக்களுக்கு எதிராக வாதம் செய்த கலகக்காரனான இயேசுவைக் கொன்று விட்டோம் என்று பெருமிதம் கொண்டார்கள். இயேசு என்ற முடிவில்லாத ஒளியை இந்த உலக இருளின் சக்திகள் விழுங்கிட முயற்சித்தன. உலகின் ஒளி நானே என்றவரை கொலை செய்தது இந்த உலகம். ஆனால் அவர் சாவை வென்றவராய், சாத்தானை முறியடித்தவராய், பாவத்தை ஒழித்தவராய் இயேசு உயிர்த்து விட்டார்.

கிறிஸ்துவின் உயிர்ப்பானது திருச்சபையை உருவாக்குகின்ற மாபெரும் சக்தியாகவும் திருச்சபை எனும் மாவிருட்சம் தளிர் விட, விசுவாசவித்தாகவும் அமைந்தது. கிறிஸ்துவின் உயிர்ப்பு எம் கிறிஸ்தவ விசுவாசத்தின் மறைபொருளாகவும் இறைவனின் மீட்பின் வரலாற்றில் ஒரு புதியதொரு அத்தியாயம் ஆகவும் திகழ்கிறது.

கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பு ஆனது மிகப் பெரிய புதுமை என்று கூறலாம். சிலவேளை நீங்கள் கூறலாம். இயேசுவுக்கு முன் இலாசர் உயிர்த்தெழுந்தாரே என்று. இலாசர் மீண்டும் உயிர் பெற்றது என்பது ஓர் புதுமைதான் ஆனால் இதனை இயேசுவின் உயிர்த்தெழுதலோடு ஒப்பிட முடியாது ஏனென்றால் இயேசுவினால் உயிர்ப்பிக்கப்பட்ட அனைவரும் உயிர் அளிக்கப்பட்டவர்களே. அதாவது இறந்து போன இவர்களது வெற்று உடல்களுக்கு மறுபடியும் இயேசுவினால் உயிர் கொடுக்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் பின்னர் இறந்து போனார்கள். இதையே ஆங்கிலத்தில் RESUSCITATION என்று அழைக்கின்றோம்.

இயேசுவின் உயிர்ப்பினை ஆங்கிலத்தில் RESURRECTION என்று அழைக்கின்றோம். அதாவது இயேசு உயிர்த்து முடிவில்லாத நிலைவாழ்வை உரிமை ஆக்கிக்கொண்டார். அத்தோடு மகிமைக்குரிய உடலை தன்னகத்தே கொண்டிருந்தார். அதனால் தான் பூட்டப்பட்டிருந்த அறைக்குள் கூட அவரால் பிரவேசிக்க முடிந்தது. இதனை யோவான் நற்செய்தி அதிகாரம் 20:19-20 இறை வசனங்களில் காணலாம். ஆகவே இயேசுவின் உயிர்ப்பானது எம் அனைவருக்கும் உயிர்த்தெழுதல் என்ற மறுவாழ்வு உண்டு என்பதை வெளிப்படுத்தும் ஓர் உன்னத நிகழ்வாக அமைகின்றது. இயேசு உயிர்த்தெழாமல் இருந்திருந்தால் அவருடைய போதனைகள், கொள்கைகள் அத்தனையும் பொய்யாகிப் போயிருந்திருக்கும். அத்துடன் கிறிஸ்தவத்திற்கும், கிறிஸ்துவுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கும். ஆனால் அப்படி நடைபெறவில்லை, மாறாக இறைமகன் இயேசுவின் உயிர்ப்பானது திருச்சபை வரலாற்றிலே நீதிக்கும் உண்மைக்கும் சாட்சியாக மாறி கிறிஸ்துவை நம்பிய அனைவருக்கும் பலத்தையும் திடத்தையும் அளித்தது. இதையே புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார். இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார், இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகின்றது. மேலும் இறைமகன் இயேசுவின் உயிர்ப்பு அவருடைய மண்ணுலக வாழ்விற்கு முற்றுப்புள்ளியாகவும், உயிர்த்த இயேசுவை ஆன்ம மீட்பராக கொண்டு வாழும் ஒவ்வொருவரினதும் விசுவாசத்தின் மையமாகவும் விளங்குகின்றது. இதே உயிர்ப்பு தான், பயந்து போயிருந்த இயேசுவின் சீடர்களுக்கு துணிவைக் கொடுத்தது. இதே உயிர்ப்பு தான், எமக்கும் துணிவினை அளித்து இறை இயேசுவின் சாட்சிகளாக வாழ அழைப்பு விடுக்கின்றது.

கிறிஸ்தவர்கள் என்ற ஒரே காரணத்தால் பலர் கொல்லப்பட்டார்கள். மற்றும் பலர் சித்திரவதை செய்யப்பட்டார்கள். ஏன் இன்றும் கொல்லப்படுகிறார்கள், அண்மையில் யேமன் நாட்டில் 4 அருட்சகோதரிகள் கிறிஸ்துவுக்காக தங்களைத் தியாகம் செய்தார்கள். அது மட்டுமா, இன்றும் சிரியா, ஈராக் போன்ற பல்வேறு நாடுகளில் வாழும் கிறிஸ்தவர்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து கொண்டு தான் இருக்கின்றார்கள் ஆனாலும் அவர்கள் கிறிஸ்துவை மறுதலிக்கவில்லை காரணம் அவர்கள் இறைமகன் இயேசுவில் கொண்ட அளவற்ற அன்பும் தளராத விசுவாசமும் ஆகும். சிரிய நாட்டு கிறிஸ்தவ இளைஞன் ஒருவன் தான் கொல்லப்படுவதற்கு முன் கூறியது: நீங்கள் எத்தனை கிறிஸ்தவர்களை வேண்டுமானாலும் சாகடிக்கலாம் ஆனால் எமது கிறிஸ்தவ மதத்தை அழிக்க முடியாது ஏனென்றால் சாவை வென்ற கிறிஸ்துவைத் தலைவராகக் கொண்டிருக்கின்றோம் என்று கூறினான் மகிழ்ச்சியோடு. ஆகவே சாவைவென்று சரித்திரம் படைத்த சர்வ வல்லவராகிய கிறிஸ்துவிலே விசுவாசம் கொண்டவர்களாக கிறிஸ்து காட்டிய வழியில் நடந்து கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ முற்படுவோம்.

**ஆக்கம்**
**சகோ. அ. அன்ரன் ஞானராஜ் றெவல்**
SDB



## “உயிர்த்தெழுந்தாரே, இயேசு ஜெயித்தெழுந்தாரே”

கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை
என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும்,
நீங்கள் கொண்டிருக்கும்
நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்
(1கொரி. 15:14)

விசுவாசத்தின் அடித்தளம் விழாக்களுக்கெல்லாம் சிகரம்
விண்ணும் மண்ணும் இணைந்து சிறக்க வியந்த விழா – வெற்றி
வீரனாய் உயிர்த்த வீரனின் வீரமுழக்கமிடும் விழா,
வியத்தகு முறையில் விடிவெள்ளியாய் உதித்தவரின் விழா.

தேவமைந்தனாய் சாவைவென்று சரித்திரம் படைத்தவரே,
தேடிவந்த தெய்வமாய் திருவருள் புரிந்தவரே,
தெய்வீக வாழ்வை தியாகப் பலியாக்கினவரே,
தெய்வமாய், தேவனாய் வீரக்கோலம் பூண்டவரே.

இறைச்சித்தமதை சிரமேற்று தாழ்மையின் சின்னமானவரே,
இருளகற்றி ஒளியேற்ற பாடுகளை மட்டும் விடுதலையளித்தவரே,
இன்றும் என்றும் எம்மையெல்லாம் இரக்கமுடன் ஆள்பவரே
இதோ உம் மக்கள் நாம் என்றும் எம்மை ஆசீர்வதித்திடுவீரே.

உயிர்ப்பும் உயிருமாய் உலகிற்கு உயிரளித்தவரே,
உள்ளத்தில் சமாதானமும், சாந்தமும், பொழிந்தவரே,
உலகெல்லாம் உம் உயிர்ப்பு விழா முழங்குதய்யா,
உம் திருக்கர ஆசியைப் பொழிந்து புதுவாழ்வு எமக்கு அருளுமைய்யா.

மூவுலக வேந்தனே, முடிவில்லா ஆதிநாதனே,
முத்தமிழ் தேவனே மூவுலகையாளும் இராஜேஸ்வரனே,
மூவொரு இறைவனே முழந்தாட்பணிந்தோம், உம் திருவடி பணிந்தோம்,
முடிவில்லா வாழ்வை எமக்கருள்வாய் எம் பிரான் இயேசுவே.

அருட்சகோதரி. டெலா றோஸ். அ.கா

**மரணத்துக்கு முன் ஒருவர் உரைக்கும் வார்த்தைகள் என்ன என்றறிய நாம் எல்லோரும் ஆவல் கொண்டு அவர் அருகிலேயே நிற்போம். ஏனெனில் அவை உள்ளத்து வேட்கைகளை ஒளிவு மறைவின்றி எடுத்து உணர்த்துபவை. அன்று மலைமீதமர்ந்து மலைபொழிவு ஆற்றிய இயேசு இன்று கல்வாரிக் குன்றின் உச்சியில் நிற்கும் சிலுவையில் தொங்கிக் கொண்டு உலகம் என்றுமே மறக்க முடியாத ஏழு திரு வசனங்களைப் பொழிகின்றார். தாம் தொங்கி நிற்கும் சிலுவை சற்று நேரத்தில் உயரிய பலிப்பீடமாகப் போகிறது. அதற்கு முன் தமது இறுதி உரைக்கேற்ற ஓர் ஒப்பற்ற மேடையாக இயேசு அச்சிலுவையை ஆக்குகிறார்.**




# வாழ்வளிக்கும் அந்த ஏழு வசனங்களைக் கேட்போமா?

## 1. பிதாவே இவர்களை மன்னியும்

பழைய ஏற்பாட்டில் இறைவனது கோபம் பாவிகளைத் தண்டித்தது. புதிய ஏற்பாட்டில் கருணையே உருவான மன்னிப்பின் மாந்தர், நித்தமும் அன்பு செய்யும் வல்லவரான இயேசு "உங்களுக்குத் தீமை செய்பவர்களுக்கு நன்மை செய்யுங்கள்" என்று போதித்தார். தமக்குப் பாதகம் இழைத்த கொடியவர்களுக்காக வானகத் தந்தையை நோக்கி மன்றாடுகின்றார். "பிதாவே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது இன்னதென்று இவர்களுக்குத் தெரியாது". இயேசு ஒரு நீதிமான் என்று அவரைத் துன்புறுத்திய படைவீரர்களுக்குத் தெரியாது. ஆனால் அவரைக் கொல்லத் திட்டமிட்ட மதகுருக்களின் கண்கள் அகம்பாவத்தால் மறைக்கப்பட்டன.

எனவே, அந்த வெறியில் இயேசுவின் தெய்வீகத் தன்மையை உணராது இரத்தப் பழியை மனமாரச் சுமத்தினர். கருணையே உருவான இயேசு குழந்தை செய்த குற்றத்தை மன்னிக்க முயலும் தாய் போன்று அவர்களுக்காக மன்றாடுகிறார். செய்த தவறை உணர்ந்தால் தான் மன்னிப்பவர்கள் மனிதர்கள். ஆனால் தவறை உணராமலும், அதற்காக மனம் வருந்தாமலும், கொலைவெறி பிடித்த குடும்பலை மன்னித்தது இறைமகனுக்கே உரிய குணமாகும்.

நம் மந்தையிலுள்ள ஆடுகள் ஒன்றேனும் மாய்ந்து போக விரும்பாத நல்ல மேய்ப்பர் அல்லவா கிறிஸ்து.

**இயேசுவின் சிலுவையடியில் செல்லுங்கள்**
**சிலுவை பேசுகிறதை கேளுங்கள்,**
**பாவமன்னிப்பு கேளுங்கள்**
**இதயத்தில் கருணையை பெறுங்கள்.**

## 2. இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய்

இயேசுவின் தெய்வீகத் தன்மையைப் பலர் அவரது அற்புதங்கள் மூலம், நேரில் பார்த்திருந்தனர். ஆனால் யாவராலும் நிந்திக்கப்பட்ட அவரை, அந்நிலையிலும், ஓர் அரசராகக் கண்டார் ஒருவர். அவர் தான் இயேசுவோடு கழுமரத்தில் தொங்கிய கள்வன். இயேசுவைப் பற்றி இதுவரை கேள்விப்படாவிட்டாலும், பகைவரையும் மன்னிக்கும், அவரது கருணையால் கவரப்பட்ட அந்தக் கள்வன் இயேசுவை ஒரு நீதிமான் என்று துணிச்சலோடு பகிரங்கமாக அறிக்கை செய்தான். இயேசு மகிமையடைந்து தனது அரசில் நுழையும் போது தன்னை நினைக்குமாறு பணிவுடன் வேண்டினான். பாவிகளுக்கு எப்போதும் பரிவு காட்டிய இயேசு அந்தக் கள்வனது விசுவாசங் கண்டு தமது பேரிரக்கத்தையும், வல்லமையையும் அவர் மேல் பொழிந்து உண்மையாகவே நான் உனக்குச் சொல்லுகின்றேன், இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய்" என அன்புடன் மொழிந்தார்.

நம் வாழ்வில் நேரும் கணக்கற்ற துன்பங்களைக் கண்டு இறைவனது வல்லமையையும், அன்பையும் சந்தேகப்படுகிறோம். ஆனால் திஸ்முஸ் என்ற அக்கள்வன் தன் உயிருள்ள விசுவாசத்தால் விண்ணகத் தந்தையைக் கவர்ந்த கள்வனாக மாறினான். பாவி ஒருவனை நொடிப்பொழிதில் விண்ணக வாழ்வுக்கு உரிமையாக்க இயேசுவுக்கு வல்லமை உண்டு என்பதை மறவாதீர்.

**உமது சிலுவை பாதம் வந்துள்ளேன்**
**ஏழை பாவியாகிய என்மேல் இரங்கும்**
**என் பாவம் கழுவி உம்பாதம் சேரும்.**

## 3. அம்மா இதோ உன் மகன்

இயேசு இரத்த கறையோடு சிலுவையில் தொங்கக் கண்ட தாயின் உள்ளம் எப்படியெல்லாம் வேதனை அடைந்திருக்கும். இறந்தவர் பலருக்கு உயிர்பிச்சை கொடுத்த தன் மகனையே இன்னும் கொஞ்ச நேரத்தில் இழக்க நேரிடும் நிலையில் ஆறுதல் இன்றித் தவித்தாள் வியாகுல அன்னை. தன் அன்னையை அருகில் நின்ற சீடர் யோவானிடம் அடைக்கலமாக ஒப்படைத்தார். இயேசு "அம்மா இதோ உன் மகன்" என்று கூறி தன் அன்னையை அச்சீடரிடம் அன்னையாக மட்டுமல்ல உலக மக்களின் அன்னையாகவும் அளிக்கின்றார்.

இதையெல்லாம் ஏற்றுக்கொண்ட மரியாள் அமைதியாக துயருற்றாள். தனது மகனின் பாடுகளில் தானும் பங்கு கொள்கிறாள். இவ்வாறாக மீட்பரின் தாயானாள் மரியாள். புதிய ஏவாளாக, திருச்சபையின் தாயாக அன்றிலிருந்து விளங்கலானாள். எனினும் தாயான அவளது இதயத்தைத் துயரம் எனும் கூரிய வாள் துளைக்கின்றது. தன் அன்பு மகனைச் சிலுவையில் நின்று இறக்கி ஆறுதல் சொல்ல வழியின்றித் தவிக்கின்றாள். தாயின் நிலைக் கண்ட மகனது வேதனையும், அதிகரிக்க அன்னையின் கண்ணீர் அம்மைந்தனின் செந்நீரோடு கலக்கிறது. தாயும், சேயும் சிந்தும் கண்ணீர் எத்தனையோ ஏழைகள், மாசற்றவர்கள், பிரிவால் வாடுபவர்கள், உறவை பிரிந்தவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் விடும் கண்ணீரைத் துடைக்கும் ஆற்றல்மிக்கது.

**இயேசுவை மகனாய் ஈன்றெடுத்தவளே!**
**இகந்தனில் மாந்தர் தம் அன்னையும் நீயே!**
**நேசமாய் அவரை மகிழ்வினில் பெற்றாய்**
**நெடிய துயரினில் எங்களைப் பெற்றாய்**

## 4. என் பிதாவே என் பிதாவே ஏன் என்னைக் கைவிட்டீர்?

இயேசு மண்ணிலே அவதரித்த போது இரவும், பகல் போலக் காட்சியளித்தது. ஆனால் அவர் மரணத்தோடு போராடிய வேளையில் பகலும், இரவாக மாறி பூமியெங்கும் இருள் படர்ந்தது. அணையாத தீபம் அணைந்து கொண்டிருந்தது. அந்தகாரத்தின் வல்லமை உச்சக்கட்டத்தை அடைந்த அந்த நேரத்தில் உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும், ஒளியூட்டுகின்ற நாதனின் உள்ளமும் இருளாய்க் கவ்வப்பட்டது. தமது தந்தையின் அன்பையும், ஆறுதலையும் இழந்த அவரால் முற்றிலும் கைவிடப்பட்ட அவல நிலையில் இருப்பதுபோல் இயேசு உணர்ந்தார். அதனால் உரத்த குரலில் விண்ணை நோக்கி "என் பிதாவே என் பிதாவே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கதறினார்

கொடிய மிருகங்கள் மத்தியில் சிக்குண்ட ஓர் ஆட்டைப்போல் இயேசு பரிதாபத்திற்குரியவரானார். சோகமே வடிவான அவர் தந்தையினால் கைவிட்டதுபோல பயங்கரமான தனிமை உணர்வை அந்த நேரத்தில் இயேசு அனுபவித்ததார். இதையெல்லாம் இயேசு அனுபவித்தது பாவியாகிய நம்மேல் வைத்த எல்லையற்ற அன்பினால்தான். தாம் நேசித்தவர்களை இயேசு இறுதி எல்லை வரை நேசித்தார்.

**அன்பு தாங்க முடியாத துயரத்தைதையும்**
**தாங்கக்கூடியது**

## 5. தாகமாய் இருக்கிறேன்

இயேசு இவ்வேளையில் மனவேதனையோடு உடல் வேதனையும் தாங்க முடியாதவராய் தம் பிதாவினால் கைவிடப்பட்டதால் தாங்க முடியாத மனவேதனையை அனுபவித்தார் இயேசு. "தாகமாயிருக்கிறேன்" என்ற அவரது வார்த்தைகளே அவர் எவ்வளவு உடல் வேதனை அனுபவித்து இருப்பார் என்று உணர வைக்கிறது. இயேசுவின் உடல் முழுவதும் ஏக காயமாய் இருந்ததால் கொடிய தாகம் அவரை வாட்டியது. எத்தனையோ வாதைகளை அமைதியாக ஏற்றுக் கொண்ட இயேசு தாகமாய் இருக்கின்றேன் என்று வாய்விட்டு உரைத்தது மீட்பராகிய தம்மைப் பற்றி திருநூலில் அன்று எழுதியது நிறைவேறுவதற்காகத்தான்.

ஆழ்கடலையும், ஆறுகளையும் படைத்தவர், மோயீசன் மூலம், வறண்ட பாறையில் இருந்து நீர்ச்சுணை எழச் செய்தவர், என்றுமே தாகம் வராத தண்ணீரை தருவேன் என்று கூறியவர் இப்போது தாகத்தால் துடிக்கிறாரே? எல்லாம் நமக்காகத்தான். முறைகேடான நமது தாகங்களைத் தணிப்பதற்காகத்தான்

மனித நாட்டங்கள், வேட்கைகள் எப்படியெல்லாம் இறைவனது திட்டத்தில் இருந்து திசைமாறி மனிதனை ஆட்டிப்படைக்கின்றன. கொலைவெறி, காமவெறி, பழிவாங்கும்வெறி, பணவெறி, பதவிவெறி, என்று எத்தனை முறையற்ற தாகங்கள். இவற்றில் இருந்ததெல்லாம் நம் ஆன்மாவைக் காக்க இயேசுவுக்குக் கூட ஆன்மா வாடியது இறைவனால் மட்டுமே நமது இதய தாகம் தணியும் என்பதை நாம் மறக்கக்கூடாது.

**உயிருள்ள தண்ணீரை எனக்கு தாரும்**
**இயேசுவே**

## 6. எல்லாம் நிறைவேறிற்று

எத்தனையோ மனிதர்கள், வாழ்வு எனும் சிலுவையில் இருந்து விடுபட வழியில்லையே என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இயேசுவோ, தந்தை தமக்களித்த பாடுகளின் பாத்திரத்தை இறுதித்துளி வரை குடிக்க விரும்பினார்.

இயேசுவைச் சிலுவையில் அறைந்த நம் பாவங்கள், முழு மனத்தோடும், முழு விருப்பத்தோடும் செய்யப்பட்டன. அப்படி இருக்க, அவைகளுக்குப் பிராயச்சித்தம் செய்ய வந்த மனுமகன் தன் சுய நினைவோடு....

15











# சிலுவைப்பாதை

**சிலுவைப்பாதை .... அது பாடுகளின்
முகவரியை எழுதிய வெற்றுப்பேனா முனையல்ல,
மாறாக வரலாற்று சிற்பத்தை செதுக்கிய இயேசு என்னும்
கலைஞனின் கையில் உள்ள மீட்பு உளி.
அது வரலாற்றை வகுத்தெடுத்த சமானியனின்
வீரப் பயணம்
உலக மீட்புக்காக தன்னுயிரை துச்சமெனக் கருதிய
உலக மீட்பரின் மீட்புப் பயணம்.
சாவோடு ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது என்று
எண்ணியவர்களுக்கெல்லாம் தன் சிலுவைச் சாவையே
புதிய சகாப்தத்தை எழுதிய நாசரேத்தூர்
இயேசுவின் இறுதிப் பயணம்.
சிலுவைப் பாதை வெறும் பக்தி முயற்சியல்ல,
மாறாக நம்மைப் பக்குவப்படுத்தும் புதிய பாடம்.
சிலுவைப் பாதை வெறும் வரலாற்று நிகழ்ச்சியல்ல மாறாக
மானிட குலத்தையே புனிதப்படுத்திய செந்நீர் தீர்த்தம்.
கறைப்படிந்த இதயங்களை
தூய்மைப்படுத்தவும் தவறிய வாழ்வை சரிசெய்யவும்,
உடைந்துபோன உறவுகளைப் புதுப்பிக்கவும், அழைக்கும்
வாழ்க்கை வழிதான் இந்தச் சிலுவைப் பாதை எனவே
சிலுவையை சுமக்கும் இயேசுவிடம் நம் வாழ்வில் நாம்
பிறருக்காக சுமைத்தாங்கிகளாக மாறி அன்றாட வாழ்வில்
மாற்றம் கண்டு உருக்கமாக
இச்சிலுவைப் பாதையின் வழி நடப்போம்.**

## முதலாம் நிலை

**இயேசு தீர்ப்பிடப்படுகிறார்**

தீர்ப்பிடாதீர் தீர்ப்புக்கு உள்ளாகுவீர் என்றீர். தீர்ப்பிட்டு தீங்கிழைத்தேன் இறைவா. தீர்ப்பிடாமல் மீட்பளிக்க நான் வந்தேன் என்றீர். இனிமேல் நான் பிறர் குறையை பேசமாட்டேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## இரண்டாம் நிலை

**இயேசு மீது சிலுவை சுமத்தப்படுகிறது**

சிலுவைகளைச் சுமந்து உம்மைப் பின்தொடரச் சொன்னீர். சிலுவைகளை ஏற்கவில்லை இறைவா. எனக்காக என் சிலுவையை சுமந்திட்ட இறைவா, இனி உமக்காக பிறர் சிலுவை சுமப்பேன்.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## மூன்றாம் நிலை

**இயேசு முகம் குப்புற விழுகிறார்**

அகந்தையும், வெறுப்பும் வீழ்ந்துவிடும் என்றீர், அதில் தடுக்கி விழுந்தேன் இறைவா, கீழ்ப்படிந்து மன்னித்து மனிதர் எம்மை மீட்டீர், இனிமேல் அதை வாழ்ந்து எழுந்திடுவேன் இறைவா

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## நான்காம் நிலை

**மரியா தன் அன்பு மகனை சந்திக்கிறார்**

பெற்றோரைப் பராமரித்து அன்புக் காட்டச் சொன்னீர், மதிக்கவில்லை, உதவவில்லை இறைவா, பெற்றோ-ருக்கு பல ஆண்டுகள் கீழ்ப்படிந்து வாழ்ந்தீர். எனவே நானும் உம்மைப்போல கீழ்ப்படிவேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## ஐந்தாம் நிலை

**இயேசுவுக்கு உதவுகிறார் சீமோன்**

பிறர் சுமைகள் சுமந்து உதவ வேண்டும் என்றீர், பிறர் சுமைகள் சுமக்கவில்லை இறைவா, உம்மோடு மகிழ்வுடன் சுமை ஏற்றவர் சீமோன். இனி அவர்போல் உதவிடுவேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## ஆறாம் நிலை

**வெரோணிக்கா இயேசுவின்
முகத்தைத் துடைக்கிறார்.**

துன்புறும் மனிதரின் துயர் துடைக்க அழைத்தீர், தூரம் விலகிச் சென்றேன் இறைவா, உமது முகம் துடைத்திட்ட வெரோணிக்கா போல நானும் இனி பிறர் துயரத்தை துடைத்திடுவேன் இறைவா..

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## ஏழாம் நிலை

**இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்**

இனிமேல் நீர் பாவங்களை செய்யாதீர் என்றீர். மறுபடியும் அதில் விழுந்தேன் இறைவா. என்னை மீட்க இரண்டாவது முறையாக விழுந்தீர், நானும் உம்மைப்போல் புது வாழ்வு வாழ எழுவேன்.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## எட்டாம் நிலை

**எருசலேம் பெண்களுக்கு இயேசு
ஆறுதல் கூறுகிறார்.**

அழுவோருக்கு ஆறுதல் வழங்கு என்று சொன்னீர், பிறர் அழுவதற்குக் காரணமாய் இருந்தேன். எருசலேம் பெண்களின் கண்ணீர் துடைத்தீர் உம் வழியில் நானும் பிறர் கண்ணீர் துடைத்திடுவேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## ஒன்பதாம் நிலை

**மூன்றாம் முறையாக இயேசு கீழே விழுகிறார்**

எத்தனை முறை வீழ்ந்தாலும் எழுந்து விடு என்றீர், சோர்வடைந்து போய்விட்டேன், இறைவா, மூன்றாம் முறை விழுந்தாலும் துணிவு கொண்டு எழுந்தீர், நானும் உம்மைப்போல எழுந்து நடக்க துணிவு கொள்வேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## பத்தாம் நிலை

**இயேசுவின் ஆடையை களைகிறார்கள்**

இறைவனைப் போல் தூயவராய் வாழ வேண்டும் என்றீர், பாவத்திலே வாழ்கிறேனே இறைவா, என் பாவ ஆடையை நீர் கல்வாரியில் களைந்தீர், ஆதலால் தூய வாழ்வை அணிந்துக் கொள்வேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## பதினோராம் நிலை

**இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்**

பழைய இயல்பை சிலுவையில் அறைந்துவிட்டேன் என்றீர், பழைய இயல்பில் வாழ்கிறேன் இறைவா, அறையப்பட்ட உடலின் இச்சை அழித்துவிட்ட-தென்பதால் நான் ஆவிக்குரிய வாழ்வு வாழ்வேன் இறைவா..

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## பன்னிரண்டாம் நிலை

**இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்**

உம் இறப்பில் உம்முடனே பங்கேற்க அழைக்கிறீர். பங்கேற்க மறுத்துவிட்டேன் இறைவா, இறப்பவர்க்கே உயிர்ப்பு உண்டு என்பதை நீர் சொன்னீர். எனவே உயிர்ப்பு வாழ்வை வாழ்ந்திடுவேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## பதின்மூன்றாம் நிலை

**இயேசு அன்னையின் மடியில்**

இறுதி மட்டும் நிலைத்திருந்து மீட்புப் பெற அழைத்தீர் இடையிடையே மறுதலித்தேன் இறைவா பிறந்த போதும், இறந்தபோதும் மடியில் உம்மை சுமந்த மரியாபோல உம்மை சுமப்பேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## பதினான்காம் நிலை

**இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்**

பாவ வாழ்வை பொறுத்தமட்டில் இறந்துவிட்டாய் என்றீர், பாவ வாழ்வை புதைக்கவில்லை இறைவா. எனவே கல்லறையில் எம் பாவம் புதைத்துவிட்டு உமது உயிர்ப்பிலே பங்கேற்பேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**











## 03 பரிசுத்த வாரம்



### பெரிய வியாழன்

மறுநாள் காலை பெரிய வியாழன். பேதுருவையும், யோவானையும் கடைசி இராவுணவு தயாரிப்பதற்காக அனுப்புகிறார். பிற்பகலில் தனது அப்போஸ்தலர்களோடு மாலை 7 மணியளவில் இறுதி இரவு உணவு உண்ணும்போது தான் தனது அப்போஸ்தலர்களின் பாதங்களைக் கழுவுகிறார். யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுப்பதையும், பேதுரு தன்னை மறுதலிக்க இருப்பதையும் முன்னறிவிக்கிறார். நற்கருணையை ஏற்படுத்திய பின் நீண்ட நேரம் அவர்களோடு உரையாடுகின்றார். இரவு 10 மணியளவில் கெத்சமனித் தோட்டத்தில் செபிக்கச் செல்கிறார். 11 மணியளவில் படைவீரர்கள் இயேசுவைக் கைது செய்து முதலில் அன்னாஸ் பிறகு தலைமைக் குரு கைப்பாஸ் இல்லத்திற்கு கூட்டிச் செல்கின்றார்கள். பேதுருவின் மறுதலிப்பு அங்கே நடக்கிறது. தலைமைக் குருவின் காவலர்கள் இயேசுவை துன்புறுத்தி அவமரியாதை செய்கின்றனர்.

### பெரிய வெள்ளி

மறுநாள் பெரிய வெள்ளி காலை 6 மணிக்கு யூதத் தலைமைச் சங்கம் இயேசுவுக்கு தீர்ப்பிடுகின்றது. பிறகு 9 மணியளவில் பிலாத்துவிடம் அழைத்துச் செல்லப்படுகின்றார். அங்கிருந்து ஏரோதுவிடமும் பிறகு பிலாத்துவிடமும் அழைத்துச் செல்லப்பட்டு 11 மணியளவில் தீர்ப்பிடப்படுகிறார். கசையடிகளைத் தொடர்ந்து முள்முடி சூட்டப்படுகின்றார். கல்வாரிக்குச் சிலுவைப்பயணம் தொடங்குகிறது. 12 மணிக்குச் சிலுவையில் அறையப்பட்டு ஏறக்குறைய 3 மணி நேர கொடிய வேதனைக்குப் பிறகு மதியம் 3 மணியளவில் சிலுவையில் மரிக்கின்றார் இயேசு. இயேசுவின் உடலைப் பெற அரிமத்தியாவின் சூசை, பிலாத்துவிடம் அனுமதி கேட்க 5 மணியளவில் சுருக்கமான அடக்கச் சடங்குகள் அவசர அவசரமாய் நடத்தப்படுகின்றன.

### சனி

மறுநாள் சனிக்கிழமை இயேசுவின் உடல் கல்லறையில் இருக்க படைவீரர்கள் காவல் காக்கின்றனர்.

### உயிர்ப்பு ஞாயிறு

மறுநாள் உயிர்ப்பு ஞாயிறன்று காலை 5 மணிக்கு மீதமுள்ள அடக்கச் சடங்குகளை நிறைவேற்ற பெண்கள் கல்லறைக்குப் போக காலி கல்லறையைப் பார்த்து அதிர்ச்சியடைகின்றனர். மரியாள் அப்போஸ்தலர்களிடம் ஓடிச் சென்று செய்தியைச் சொல்ல பேதுருவும், யோவானும் கல்லறைக்குச் செல்கின்றார்கள். இயேசு தோட்டக்காரனைப் போல மகதலேன் மரியாவுக்கு தோன்றுகின்றார். பிறகு மதியம் 3 மணியளவில் எம்மாவுஸ் செல்லும் வழியில் அப்போஸ்தலர்களிடம் வழிப்போக்கராய் இயேசு தோன்றி 5 மணியளவில் அப்பம் பிட்டபோது அவர்கள் அவரை அடையாளம் கண்டு கொண்டு ஜெருசலேமுக்கு விரைந்து சென்று மற்ற அப்போஸ்தலர்களிடம் தெரிவிக்கின்றனர். இரவு 9 மணியளவில் தோமா தவிர மற்ற அப்போஸ்தலர்கள் கூடியிருந்த அறையில் உயிர்த்த இயேசு காட்சியளிக்கின்றார்.

இவ்வளவு நிகழ்வுகளும் நடந்தேறும் இந்தப் பரிசுத்த வாரத்தில்தான்.

## 13 சிலுவை பேசுகிறது

துன்பத்தை இறுதித்துளி வரை சுவைக்க வேண்டாமா? அதற்காக, தமக்களிக்கப்பட்ட கசப்பான காடியைக் குடித்த பின், எல்லாம் நிறைவேறிற்று! என உரைத்தார். அந்த நிமிடத்தில் மீட்பராகிய இயேசுவைக் குறித்து எழுதப்பட்டவை எல்லாம் நிறைவேறின.

இயேசு உரைத்த அந்த வார்த்தைகள், அவர் அடைந்த வெற்றியை உணர்த்தும் வார்த்தைகளேயன்றி, தொலைந்தது துன்பம் என்ற சோகத்தை உணர்த்திய வார்த்தைகள் அல்ல. இயேசுக்கிறிஸ்து ஓர் உயர்ந்த இலட்சியத்திற்காக இவ்வுலகிற்கு வந்தார். அந்நோக்கம் நிறைவேறிவிட்டது என்ற மகிழ்ச்சியில் இவ்வார்த்தைகளை உரைத்தார். பாவத்தை வென்று, மரணத்தைக் கொன்று, நித்திய அழிவிலிருந்து மனிதர்களைக் காத்து, முடிவில்லாத பரிபூரண வாழ்வை நிறைவாய் அவர்களுக்கு அளிப்பதுதான் அந்த இலட்சியம். இயேசு கல்வாரியில் அன்று அடைந்த வெற்றியால், விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே முறிந்த உறவு மீண்டும் சீர்படுத்தப்பட்டது. துன்பம், தீமை, பாவம் இவைகளிடம் இருந்து மனிதர் விடுதலையடைந்து, அமைதியும் அருள் வாழ்வும் பெற முடியும், என்ற நம்பிக்கை மலர்ந்தது. புதிய வானமும் புதிய பூமியும் உருவாயின.

**உன்னைத்தான் நினைக்கையிலே உள்ளமெல்லாம் உருகுதையா**
**தன்னையொரு திருப்பலியாய்த் தந்துவிட்ட நாயகனே!**
**மன்னாதி மன்னவனே! மன்பதையின் மீட்பர் நீயே!**
**தன்னிகரில்லாத் தலைவா! தஞ்சம் இயேசுபரா!**

## 05 வாழ்க்கையின்...

இழப்புக்களாலும், பிரிவுகளாலும் நாள் தோறும் நாமும் சிலுவைகளைத்தானே சுமக்கின்றோம் என நாம் கண்ணீர் விடுவது தொடர்கதையாகவே செல்கிறது. ஏனெனில் எமக்கு துன்பங்களை சுமக்க உடன்பாடில்லை. கஷ்டங்களை அனுபவிக்க விருப்பமில்லை. வாழ்வில் தோல்விகளை ஏற்றுக்கொள்ள சக்தியில்லை, வாழ்வின் உலகியில் சுகங்களை விட்டுக் கொடுக்க மனமில்லை. ஏனெனில் நாம் வாழ்வை சரியாக புரிந்து கொள்வதில்லை. எமது உண்மை நிலை என்ன என்பதனை நாம் சிந்திப்பதிலலை. ஏங்களது உலகியல் வாழ்வைப் பற்றியும் அதன் சுகத்தைப் பற்றியும் மட்டுமே எங்களது எண்ணங்களும் சிந்தனைகளும் குவிந்துள்ளன. எமது துன்பங்களைப் பற்றி பேசும் நாங்கள் எமது இயலாமைகளை ஏற்றுக் கொள்ள மறுப்பது வெளிப்படையுண்மை. அநீதிகளைக் காண்கின்ற போது நாம் மௌனமாகின்றோம். உண்மையை எடுத்துரைக்க எமது நாவு ஒருபோதும் அசைவதில்லை. வாய்ப் பேச்சினால் மட்டுமே நாம் அமைதியை ஏற்படுத்த முனைகிறோம். மற்றவர்களை பேச்சினால் கொல்வதே எமது பொழுதுபோக்கு. இவ்வாறு அர்த்தமற்ற வாழ்வு வாழும் நாம் துன்பங்களை கண்டு அஞ்சி, அவை கடவுளின் தண்டனை என முத்திரையிடுவது கண்கூடு. சிலுவை இல்லாத வாழ்வு ஒரு உண்மை வாழ்வாக இருக்காது என்பதனை கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து இச்சிலுவை வழி எமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

“நானோ நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் சிலுவையை அன்றி வேறு எதைப் பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்ட மாட்டேன்” (கலாத் 6:14) என்று கூறும் புனித பவுலைப் போல நாம் ஒவ்வொருவரும் சிலுவையைக் குறித்து பெருமை பாராட்ட வேண்டும். இயேசுவின் அன்பின் ஆழத்தை அறியவேண்டுமெனில் இருகரங்களையும் விரித்தவராய் காட்சி தரும் திருச்சிலுவையை உற்று நோக்க வேண்டும். உலக வரலாற்றில் பல அழியாத சின்னங்களை நாம் காண்கின்றோம். அவை எல்லாவற்றையும் விட மகவும் மேலான சின்னம் திருச்சிலுவையே ஏனெனில் அதுவே வாழ்க்கையின் வெற்றியின் இரகசியத்தை கற்றுத்தரும் வழியாகும். எனவே மாற்றம் தேடும் மனிதர்களாகிய நாம் நல் மனமாற்றம் அடைய இயேசுவின் சிலுவை வழி செல்வோம். இறைவனுக்கு உகந்த நல்வாழ்வை சுதந்தரிப்போம்.

### 7. உமது கைகளில் என் ஆவியை ஒப்படைகிறேன்”

இயேசு இறந்தார். ஆனால் தாம் பட்ட வேதனைகளால் அல்ல. மாறாக, மரணத்திற்குத் தம்மை தாமே மனமுவந்து கையளித்தார். என் தந்தையே! உமது திருக்கைகளில் எனது ஆவியை ஒப்படைக்கிறேன்! என்று இயேசு உரைத்த இந்த இறுதி வார்த்தைகள், மரணத்தின் போது மற்ற மனிதர்கள் உரைப்பதுபோல அமைதியாக, தணிந்த குரலில் உரைக்கப்படவில்லை. மாறாக, வீர முழுக்கத்தோடு எழுந்தன. அந்தச் சொற்கள். அவை எவ்வளவு வல்லமையுடையவையாய் இருந்தன என்றால், அவைகளைக் கேட்ட படைத்தளபதி, உண்மையிலேயே இவன் தேவகுமாரன்! என்று அஞ்சி வெற்றி கொள்ளவில்லை! சாவுக்குத் தம்மையே உட்படுத்திக் கொண்டார். நமக்காக, அவர் இறந்தால் தானே, நாம் நித்திய வாழ்வுபெற முடியும்? கோதுமை மணி மண்ணில் விழுந்து மக்கினால் தானே தழைத்துப் பலன் தரும்? எனவே, இயேசு இறக்கும்போது உரைத்த இந்தச் சொற்கள், நம்மை என்றும் வாழவைக்கும் சொற்கள். இறைவார்த்தை எத்துணை வல்லமையுடையது? தன் நண்பனுக்காக உயிரைத் தருவதைவிட மேலான அன்புண்டா?

தம் தந்தையின் கைகளிலே தம் ஆவியைக் காணிக்கையாக்கும் இயேசுவின் அன்பும், பணிவும் நம்மை ஆட்கொள்கின்றன. வழியும், உண்மையும், வாழ்வும் நானே என்றுரைத்த நாயகன் மரணத்திலும் நமது மனநிலை எவ்வாறு இருக்கவேண்டும் என்று உணர்த்துகிறார். இறைவனது திருவுளப்படி வாழ்ந்தால், சாவைக் கண்டு நாம் அஞ்சத் தேவையில்லை. ஏனெனில் மரணத்தின் கொடுக்கை எல்லாம் மாய்த்து விட்டார் தேவசுதன். மாறாக, இறைவனது திருவுளப்படி வாழாவிடில் நம் உள்ளத்திலும், சமூகத்திலும் அமைதி நிலவாது, இறையரசும் பூமியில் எழாது. நம்மை அவரது கைகளில் ஒப்புவித்தலே உண்மையிலேயே மகிமை அடைய ஒரே வழி என்ற உண்மையைத்தான் மரிக்கும் இயேசு எடுத்தியம்புகிறார். வானகத் தந்தைக்குப் பணிந்ததால் தான் தம் மகனை இறைத்தந்தை உயர்த்தி இயேசு என்னும் மாட்சிமிகு பெயரை அவருக்குச் சூட்டியுள்ளார்.

**இயேசுவைப் போலே நண்பனும் உண்டோ**
**இணையில்லா அன்பைப் புகழ்ந்திடுவோம்.**

நம் பாவங்களின் பலிப் பொருளாக உயிர் துறந்தார், இறைமகன் இயேசு. ஆனால் வாழ்வின் வேந்தனான அவர், தன் சுயவலிமையால் மீண்டும் உயிர் பெற்று எழுந்தார். எனவே, கல்வாரியில் அன்று நடந்தது வெறும் சோக நாடகமன்று, வெற்றிக்கு நம்மை அழைத்துச் செல்லும் ஒரு வீர நாடகமாகும்!

**கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்**
**[1கொரி 15:14]**


**மணமகன் தேவை**



1984ல் கொழும்பில் பிறந்த றோமன் கத்தோலிக்க மதம், 5’ 4” உயரமுள்ள colombo chetty preferainally qualified english speaking fair மணமகளுக்கு தீய பழக்கங்கள் அற்ற நன்கு படித்த உயர்தொழில் புரியும் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். புகைப்படத்துடன் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். Email : kulendran1945@gmail.com தொலைபேசி 0777949990 (viber / whatsapp)

(N 6136)

**மணமகள் தேவை**



கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட றோமன் கத்தோலிக்க மதம், 1982ல் பிறந்த 5’ 5” உயரமுள்ள (colombo chetty) English Speaking பிரபல வங்கியில் Officer ஆக கடமைபுரியும் மணமகனுக்கு படித்த, சிவந்த, நற்குணமுடைய மணமகள் தேவை முழு விபரங்களுடன் புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். Email : kulendran1945@gmail.com தொலைபேசி 0777949990 (viber / whatsapp)

(N 6137)

## 09 பெஹாக்

புனிதப்படுத்தப்பட்ட தீயிலிருந்து ஒளியேற்றப்படுகிறது. இது கிறிஸ்துவின் சாவின் இருளிலிருந்து உயிர்த்தெழுந்தார், சாவில் இருந்தும் பாவத்தில் இருந்தும் பாஸ்கா மறைபொருளால் வெற்றி அடைகின்றார் என்பது பொருள். இவ்விரவின் மாண்பினை எடுத்துரைப்பது பாஸ்காப் புகழுரை.

### 6.3 இந்த இரவில் 9 இறைவார்த்தை முழக்கங்கள் தேவை தானா?

திருவிழிப்புக்கெல்லாம் அன்னையாகிய இத்திருவிழிப்பில் முதல் (பழைய) ஏற்பாட்டில் இருந்து ஏழும், இரண்டாம் (புதிய) ஏற்பாட்டில் இருந்து இரண்டுமாக மொத்தம் 9 வாசகங்கள் உண்டு. பொதுநன்மைக்காக தேவையேற்படுமிடத்து குறைக்கலாம். இருப்பினும் இறைவாக்கு வாசகம் திருவிழிப்பின் முக்கிய கூறு என்பதை மறந்துவிடல் ஆகாது. திருவிவிலிய வாசகங்கள் அனைத்தும் மீட்பு வரலாற்றில் உள்ள முக்கிய நிகழ்ச்சிகளை மையப்படுத்துகின்றன. எனவே 9 திருவிவிலியப் பகுதிகள் தேவை என்பதை மறக்கக் கூடாது.

### 6.4 ஏன் இந்த நள்ளிரவில் திருமுழுக்கு?

திருச்சபையின் வழிபாட்டு பழக்க வழக்கங்களில், பாஸ்கா ஞாயிறுதான் திருமுழுக்கிற்கு ஏற்ற நேரமாக கருதப்பட்டது. ஏனெனில் இது சாவிலிருந்து வெற்றிகரமாக இயேசு கிறிஸ்து வாழ்வுக்கு வருவதை நினைவுகூருகின்றது. மேலும் திருமுழுக்கும் பாவத்திற்கு இறந்து கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றதைக் குறிப்பதால் பாஸ்கா திருவிழிப்பு அதற்கு ஏற்ற தருணமாகவே கருதப்பட்டது. இரண்டாம் நூற்றாண்டின் கிறிஸ்தவ எழுத்தாளரும் இறையியலாளருமான தெர்த்தூலியன் பின்வருமாறு கூறுவார். “பாஸ்கா விழா நாளே, திருமுழுக்கிற்கு சிறந்த நாளாகும். ஏனென்றால் திருமுழுக்கின் வழியாக இயேசுவின் துன்பத்தில் இணைந்து அவரது மகிமையில் நாம் பங்கு கொள்கின்றோம் என்பதால் அது நிறைவேற்றப்பட்ட நாளே திருமுழுக்கிற்கும் ஏற்ற நாள். இத்துணை மாண்புமிகு பாஸ்காவின் முப்பெரும் நாட்களில் அர்த்தமுடன் பங்கேற்க இச்சிறுமுயற்சி பயன்படும் என நம்புகின்றேன். இலட்சியவாதிகள் தங்கள் வாழ்வில் சாவை சந்தித்தாலும் அவர்கள் புதைக்கப்படுவதில்லை. விதைக்கப்படுகிறார்கள். எனவே அவர்கள் முளைத்தெழுவார்கள் என்பதை மனதில் இருத்துவோம்.

**உங்கள் அனைவர்க்கும் உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்.**

**நன்றி அருள்தரும் ஆண்டு – S. ஜோசப் லயன்ஸ்**

## 01 யாழ் புனித பத்திரிசியார்...

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் தொழில் நுட்ப மையம் இம்மாதம் 19ந் திகதி திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் தனது உரையில் பின்வருமாறு கூறினார். “நாம் இனிமேலும் இந்நாட்டில் சண்டையிட்டு பிரிவைக் காட்டக்கூடாது. இது எம்முடைய நாடு என்ற உரிமையோடு எல்லோரும் சமாதானமாக வாழவேண்டும். இயற்கை வளங்கள் பல கொண்ட எமது நாடு பல இன மக்களைக் கொண்டதாக இருக்கின்றது. இவர்கள் எல்லோரும் அன்பிலும், ஒற்றுமையிலும் வாழவேண்டும்” என்று தனது உரையில் கூறினார்.

ஞான ஒளி GNANA OLI
25 பங்குனி, 2018



# சிலுவையை நோக்கி கூறப்பட்ட ஏழு வார்த்தைகள்



XVII

உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழ்

இயேசு சிலுவையில் தொங்கியபோது பேசிய ஏழு வார்த்தைகளை நாம் அறிவோம். இயேசு சிலுவையில் தொங்கியபோது அவரை நோக்கியும் ஏழு வார்த்தைகள்வெவ்வேறு மனிதர்களால் சொல்லப்பட்டன. இந்த ஏழு வார்த்தைகளின் மனநிலையோடு நம்மையும் ஒப்பிட்டுப் பார்த்து, சிலுவை நாயகனோடு உறவாட இந்தத் தியானச் சிந்தனை உதவட்டும்!

## 1. வழிப்போக்கர்களின் பழிப்புரை




இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த போது "அவ்வழியே சென்றவர்கள் தங்கள் தலைகளை அசைத்து "கோவிலை இடித்து மூன்று நாளில் கட்டி எழுப்புகிறவனே, உன்னையே விடுவித்துக்கொள், நீ இறைமகன் என்றால் சிலுவையிலிருந்து இறங்கி வா" என்று அவரைப் பழித்துரைத்தார்கள்" (மத் 27:39-40).

சிலுவையிலே சொல்ல இயலாத துன்பத்தை இயேசு அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, அவரது துன்பத்தைக் குறைக்கும் வண்ணம் ஆறுதல் சொல்லாவிட்டால் கூட பரவாயில்லை. அவரைப் பழித்துக் பேசினார்கள் இந்த வழிப்போக்கர்கள்.

இவர்களை எண்ணும்போது நமக்குக் கோபம் வரக்கூடும். ஆனால், நமது நிலை என்ன? பிறர் துன்பத்தில், விபத்தில், நோயில், வறுமையில் சிக்கித் தவிக்கும்போது நாம் என்ன செய்கிறோம்? முடிந்தால் உதவி செய்யலாம் அல்லது ஆறுதல் கூறலாம். ஆனால் எத்தனையோ முறை நாமும் இவர்களைத் தீர்ப்பிட்டிருப்போம். பழித்துப் பேசியிருப்போம்.

புற்றுநோய், எயிட்ஸ்.... இவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் சமுதாயத்தால் இழிவுபடுத்தப்படுகின்றனர். நாம் அவர்களில் ஒருவராக இல்லாதபடி பார்த்துக்கொள்வோம்.

## 2. கெட்ட கள்வனின் பழிப்புரை



இயேசுவோடு இரு குற்றவாளிகளும் இரு சிலுவைகளில் அறையப்பட்டிருந்தனர். (இவர்கள் இருவரும் கள்வர்கள் என்கிறது மரபு) அவர்களுள் ஒருவன் "நீ மெசியாதானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று!" என்று அவரைப் பழித்துரைத்தான். (லூக் 23:39)

தான் ஒரு குற்றவாளியாக இருந்தும், தானும் அதே துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தும்கூட, இம்மனிதன் இயேசுவைப் பழித்துப் பேசத் துணிந்தது வியப்புதான். இப்படியும் சில மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். தங்களுடைய தவறுகள், வலுவின்மைகளை மறைத்துக் கொண்டு, பிறர்மீது பழிபோடுவது ஓர் உளநோய். உளவியலின் தந்தை ஃபிராய்ட் இதனை "சாட்டுதல்" (projection) என்று அழைத்தார். நம் கண்களில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல், பிறர் கண்ணில் இருக்கும் துரும்பைக் கூர்ந்து கவனிக்கும் (மத் 7:3) பழக்கத்தை இனி விட்டுவிடுவோம்.

## 3. நல்ல கள்வனின் கோரிக்கை




மற்றவன் அவனைக் கடிந்துகொண்டு "கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாகி இருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே!" என்று பதிலுரைத்தான். பின்பு அவன், இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்" (லூக் 23:40-42) என்றான்.

இந்தக் குற்றவாளியின் நியாய உணர்வு பாராட்டுக்குரியது. அத்துடன், தன் வாழ்வின் இறுதி நேரத்தில் மனமாற்றம் அடைந்து, வானக வாழ்வையும் பெற்றுக்கொண்டது சிறப்பானது. வாழ்நாள் முழுவதும் கள்வனாக இருந்தவன், இறுதியில் விண்ணகத்தையும் "திருடிக் கொண்டவன்" என்ற வேடிக்கையாகக் கூறுகிறார் பேராயர் ஃபுல்டன் ஷீன்.

சிலுவையை நோக்கிச் சொல்லப்பட்ட ஏழு வார்த்தைகளிலும் இயேசுவால் பதில் கூறப்பட்ட வார்த்தை இது ஒன்றுதான். பேறுபெற்ற குற்றவாளி! பிறரை அநீதியாகப் பழிப்போரை தட்டிக்கேட்பது நம் கடமை என்பதை நினைவூட்டுகிறது இவ்வார்த்தை. பிறரது துன்பங்கண்டு இரங்கும்போது, நாமும் இரக்கம் பெறுகிறோம் என்பதற்கும் இது சிறந்த எடுத்துக்காட்டு.

## 4. தலைவர்களின் ஏளனம்



தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்களுடன், மூப்பர்களும் சேர்ந்து இயேசுவை ஏளனம் செய்தனர். அவர்கள், "பிறரை விடுவித்தான், தன்னையே விடுவிக்க இயலவில்லை. இவன் இஸ்ரயேலுக்கு அரசனாம்! இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும். அப்பொழுது நாங்கள் இவனை நம்புவோம். கடவுளிடம் இவன் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தானாம். அவர் விரும்பினால் இப்போது இவனை விடுவிக்கட்டும். "நான் இறைமகன்" என்றானே! என்று கூறினார்கள்" (மத் 27:41-43).

இயேசுவுக்கு இருந்த மூன்று சிறப்புப் பெயர்களையும் - மீட்பர் (விடுவிப்பவர்), இஸ்ரயேலின் அரசர், கடவுளின் மகன் - ஏளனம் செய்கின்றனர் இந்தத் தலைவர்கள். இந்தப் பகுதியைத் தியானிக்கும் பேராயர் ஃபுல்டன் ஷீன் அருமையாகக் கூறுகிறார். வான்மழை பெய்வது தனக்காக அல்ல, உயிரினங்கள் வாழ. கதிரவன் தன்னையே ஒளிர்விப்பதில்லை. பிறருக்கு ஒளி தருகிறது. வீரர்கள் தங்களைக் காத்துக்கொள்வதில்லை. நாட்டைக் காக்கிறார்கள். அதுபோலவே, இயேசுவும் - தன்னைக் காத்துக் கொள்ளவில்லை. மாறாக, உலகுக்கே விடுதலை தந்தார்.

படித்தவர்கள், அறிஞர்கள், தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் சமநிலை தவறி, வீழ்ச்சி அடைவதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. அறிவும், ஆற்றலும் இருந்தால் போதாது. ஞானம் வேண்டும் - உண்மையைக் கண்டுகொள்ள!

## 5. பார்வையாளர்களின் புரியாப் பதிலுரை



"பிற்பகல் மூன்று மணிக்கு இயேசு "எலோயி, எலோயி, லெமா சபக்தானி?" என்று உரக்கக் கத்தினார். 'என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்பது அதற்குப் பொருள். சூழ நின்று கொண்டிருந்தவர்களுள் சிலர் அதைக் கேட்டு, 'இதோ எலியாவைக் கூப்பிடுகிறான்' என்றனர்" (மாற் 15:34-35). கூடியிருந்த பார்வையாளர்களில் யூதர்களும் இருந்தனர், யூதரல்லாத உரோமையரும் இருந்தனர். இயேசு அரமோய்க் மொழியில் கூவியதை இருவருமே புரிந்துகொள்ளவில்லை. யூதர்கள் அவர் எலியா இறைவாக்கினரை அழைப்பதாக எண்ணினர். உரோமையர் அவர் 'எலியோஸ்' என்னும் சூரிய தெய்வத்தை அழைப்பதாக எண்ணினர். யாருக்கும் அவர்மீது இரக்கமோ, பரிவோ ஏற்படவில்லை என்பதுதான் வியப்பு.

துன்பத்தில் உழல்வோரின் கூக்குரலைப் புரிந்துகொள்ளாத இதயமற்றவர்களாக இன்றும் நம்மில் பலர் இருப்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.


## 6. படைவீரரின் நகையாடல்



"படைவீரர் அவரிடம் வந்து புளித்த திராட்சை இரசத்தைக் கொடுத்து, 'நீ யூதர்களின் அரசனானால் உன்னைக் காப்பாற்றிக் கொள்' என்று எள்ளி நகையாடினர்" (லூக் 23:36-37). இப்படைவீரர் யூதரல்லர், உரோமையர். இயேசுவைப் பற்றி அறிந்திராதவர். 'இவன் யூதரின் அரசன்' என்று இயேசுவின் சிலுவையின் மேல் எழுதி வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்ததால் அவரை நகையாடினர். இயேசு இவர்களையும் சேர்த்தேதான் மன்னித்தார். காரணம், அவர்கள் செய்வது என்னவென்று உண்மையாகவே அவர்களுக்குத் தெரியவில்லை.

உண்மை விபரம் தெரியாமல் பிறரை ஏளனம் செய்வோர் மனம் மாறவேண்டும்.

## 7. நூற்றுவர் தலைவரின் விசுவாச அறிக்கை



இயேசு உரக்கக் கத்தி உயிர்துறந்ததைக் கண்ட அவருக்கு எதிரே நின்றுகொண்டிருந்த நூற்றுவத் தலைவர் 'இம்மனிதர் உண்மையாகவே இறைமகன்' என்றார் (மாற் 15:39).


நூற்றுவர் தலைவர் எத்தனையோ போர்க்களங்களையும், எத்தனையோ வீரர்கள் தன் கண்முன் உயிரிழப்பதையும் பார்த்திருப்பார். சாவு அவருக்குப் புதிய அனுபவமில்லை. இருப்பினும் இயேசுவின் சாவு அவரை உலுக்கிவிட்டது. எனவேதான், இயேசுவை இறைமகன் என்று அறிக்கையிட்டார். "நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும்போது, அனைவரையும் என்பால் ஈர்த்துக் கொள்வேன்" (யோவா 12:32) என்று தனது இறப்பைக் குறித்து இயேசு முன்னறிவித்து இருந்தார். அந்த வார்த்தை இந்த நூற்றுவர் தலைவரில் நிறைவேறத் தொடங்கியது. இயேசுவின் வாழ்வு மட்டுமல்ல, அவரது இறப்புக்கூட அவரது இறைத்தன்மையை வெளிப்படுத்தியது. நாமும் இயேசுவைப் போல வாழ்ந்து, இயேசுவைப் போல இறப்பது நமக்குப் பெருமை.

இயேசுவின் சிலுவையை நோக்கி ஏழு வார்த்தைகள் பேசப்பட்டன. அவற்றில் ஐந்து அவமானத்தையும், இழிவையும் அள்ளித்தந்தன. இயேசுவின் இறைத் தன்மையை ஏற்றுக்கொண்ட நல்ல குற்றவாளியும் நூற்றுவர் தலைவரும் மீட்பைப் பெற்றுக் கொண்டனர். இன்றும் இயேசு தொடர்ந்து சிலுவையில் அறையப்படுகிறார். நம் சகோதர சகோதரிகளின் இழிநிலையில், துயரங்களில் அவரைக் கண்டால் மீட்பை நாமும் பெற்றுக்கொள்ளலாம்.

# உண்மை அமைதியை உலகில் விதைத்தது இயேசுவின் உயிர்ப்பே

XVIII

உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழ்



விடிந்து கொண்டிருந்தது, எருசலேம் நகரம் இன்னும் துயிலெழவில்லை. சில பெண்களுக்கு மட்டும் தூக்கமில்லை. விடிந்தும் விடியாத நிலையில் நறுமணப் பொருட்களுடன் மங்கையர் மூவர் விரைந்து சென்றனர் ஒரு கல்லறை நோக்கி. பலவிதமான ஐயப்பாடுகளுடனும், அச்சநடுக்கத்துடனும் சென்றாலும் தங்கள் அன்புத்தெய்வத்தைத் தேடி, இனிய தூய நினைவுகளுடன் கல்லறையைப் பார்த்தனர். அளவற்ற ஏமாற்றம் அடைந்தனர். ஆனால் அங்கே ஒரு வெற்றித் தூது வானவரால் “அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்” (லூக் 24:6). கேட்டவுடன் ஆனந்தம் கொண்டனர். அனைவருக்கும் இந்நல்ல செய்தியை அறிவித்தனர்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு வானம் பூமிக்கு வாழ்த்துக் கூறிய ஒரு நன்நாள். ஒளியிடம் இருள் தோற்றுப் போனதை உலகத்திற்கு எடுத்துச் சொல்லுகிற பெருநாள். வீழ்ந்தோருக்கும், வறியோருக்கும் உதயம் உண்டு எனும் நம்பிக்கையை நிலைநாட்டுகின்ற திருநாள். இவ்வுலகில் ஒளிக்கும் இருளுக்கும், உண்மைக்கும் பொய்மைக்கும், நீதிக்கும் அநீதிக்கும், அன்புக்கும் அராஜகத்திற்கும் இடையே போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பெரும் போராட்டத்தில் ஒளியின் சக்திகளும், உண்மையின் சக்திகளும், நீதியின் சக்திகளும், அன்பின் சக்திகளும் வெற்றி பெறும் என்பதை உணர்த்தும் விழாதான் உயிர்ப்பு விழா. தீமைக்கும், பொய்மைக்கும், இருளுக்கும் வன்முறைக்கும், சாவுமணி அடிக்கும் விழாதான் உயிர்ப்பு விழா. உண்மை உறங்கும் ஆனால் ஓயாது! நீதி நசுக்கப்படும் ஆனால் நலியாது! அன்பு அமுக்கப்படும் ஆனால் அழியாது என்பதை சுட்டிக் காட்டும் விழாதான் உயிர்ப்பு விழா.

அன்று “உங்களுக்கு அமைதி உரித்தாகுக” (லூக் 24:36) என்ற இயேசுவின் வார்த்தை துயரத்தின் எல்லையை அடைந்த சீடர்களின் சோர்வுக்கும், தேய்வுக்கும் ஒரு முடிவு கண்டு உள்ளத்துக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் அளித்தது. போரின் வடுக்களும், தீமைகளும், கோடிக்கு மேற்பட்ட அகதிகளின் அவல நிலையும், இயற்கையின் சீற்றமும் அதனால் ஏற்பட்ட சேதமும், கூட்டக் கொலைகளும், கொடுமைகளும் தாண்டவமாடும் இந்நாட்களில் கிறிஸ்துவின் உயிர்ப்பு எமக்கும், அன்பு, அமைதி, நீதி, உண்மை ஆகிய நற்பண்புகளை அள்ளித்தரும் உயிருள்ள வார்த்தைகளை அளித்திட வேண்டும் என்பதே எங்களது ஆவலாக உள்ளது.

இன்று சமூக அடிமைத்தனமும், சீர்கெட்ட மனித வாழ்வால் பாவ அடிமைத்தனமும் உலகில் தலைவிரித்தாடுவது கண்கூடு. இதன் விளைவாக மனிதர்கள் இனரீதியாக, வர்க்க ரீதியாக, மொழி ரீதியாக, கலாச்சார ரீதியாக, தொழில்ரீதியாக, மதரீதியாக பல்வேறுபட்ட முரண்பாடுகளுடாக பயணிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். இதனால் வாழ்வுக்காக ஏங்கும் மக்கள் போலிகளையும், மாயைகளையும் நம்பி தங்கள் வாழ்வை அழித்துக் கொள்கிறார்கள். இயேசுவைப் பொறுத்தமட்டில் ஒளியின் முழுமை தோன்றியாகிவிட்டது. ஆனால், நம்மைப் பொறுத்தமட்டில் கதிரவன் இன்னும் நடுவானில் வரவில்லை; இருள் இன்னும் முற்றிலுமாக அகலவில்லை. இயேசு நமக்குக் கொணர்ந்த மீட்பினை நாம் முழுமையாகப் பெற்றுக்கொள்ளும்போதுதான் நமது இருள் முழுமையாக மறைந்தொழியும். இயேசுவின் உயிர்ப்பு நிகழ்ந்துவிட்டது. ஆனால், இருள் இன்னும் அகலவில்லை. இவ்வுலகில் போரும் பசிப்பட்டினியும் இன்னும் நிலவுகின்றன. ஏழைகளும் அகதிகளும் ஒடுக்கப்பட்டோரும் மனித மாண்பு இழந்துநிற்கின்றனர். உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் வேறுபாடு காட்டப்படுகிறது. ஆண்டவர் ஏற்பாடு செய்த நாள் இதுவே, ஆனால் நாம் இன்னும் மகிழ்ந்து அக்களிக்க முடியவில்லை; ஏனென்றால் உயிர்ப்பின் மாட்சியை நாம் இன்னும் முழுமையாக நமதாக்கவில்லை, இயேசு பெற்றுத்தந்த அமைதியை நாம் இந்த உலகுக்கு உரியதாக்கவில்லை.

இலட்சியவாதிகள், நல்மனம் படைத்தவர்கள், அன்புள்ளம் கொண்டவர்கள் தோல்வியை சந்திக்கலாம். ஆனால் அவை நிரந்தரமானவை அல்ல. ஒளி வரும்வரை தான் இருளின் ஆட்சி. ஒளி வந்துவிட்டால் இருளுக்கு வீழ்ச்சி. தர்மத்தின் சக்திகளும், நன்மையின் சக்திகளும் இறுதியில் வெற்றி அடைவது திண்ணம். இறைமையும், மனித நேயமும் வெற்றி வாகை சூடுவது உறுதி. இதுதான் பல எதிர்பார்ப்புக்களுடன் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை நோக்கும் எமக்கு கிறிஸ்து கூறும் பதிலாகவுள்ளது. எனவே இலட்சியவாதியை சாவு தன் சங்கிலிக்குள் வைத்திருக்க முடியாது என்பதை உணருவோம். உள்ளங்களுக்குள் ஒழிந்திருக்கிற பகைமை இருளை இயேசுவின் உயிர்ப்பு என்னும் கருணை வெளிச்சத்தால் விரட்டுவோம். கண்ணீருக்கும் கவலைகளுக்கும் இனி விடை கொடுப்போம். புதிய நம்பிக்கையோடு இயேசு பெற்றுத்தந்த உண்மையான அமைதியை எமது வாழ்வில் கண்டுமகிழ்வோம்.

அருட்தந்தை.
யா. றமேஸ் அ.ம.தி

**கல்வாரி பாதை அன்று**

கரடுமுரடான பாதை
முட்கள் நிறைந்த பாதை
கசையடி தரும்
கயவர் கூட்டம்
நிறைந்த பாதை
வசை மொழி கூறும்
மனித இதயமற்றவர்
குவிந்த பாதை
யாரும் செல்ல விரும்பாத பாதை
சிலுவை சுமக்க செய்யும் பாதை
கொடூரத்திற்கு குறைவில்லாத
வேதனை நிறைந்த பாதை
விழ வைத்த
அழ வைத்த பாதை

**இயேசு அப்பாதையில் நடந்ததால் - இன்று**

வாழ்வின் பாதை
எளிய பாதை
இனிய பாதை
மீட்பின் பாதை
அருளின் பாதை
எழுச்சியின் பாதை
கடவுளின் கரம் பற்றும் பாதை
ஒளியின் வழியின் பாதை
விண்ணகம் செல்ல உதவும் பாதை

**கல்வாரி மலை அன்று**

யாரும் விரும்பாத மலை
ஆடையிழக்க நேரிடும் மலை
தனிமையில் கொடுமை தரும்
மலை
அவமானம் தரும் மலை
சிரமோ மீளமுடியா துன்பம்

**ஆனால் இயேசு அங்கு அறையப்பட்டதால்**

துன்பக்கிண்ணம் இனிக்கும் மலை
அருளின் ஆடை வழங்கும் மலை
இறை பிரசன்னம் நிறைந்த மலை
இறைகரம் தாங்கும் மலை
சிரமோ மீட்பளிக்கும் அன்பு

**அன்று கல்வாரி மனிதரின் அன்பு**

கைவிட்ட பொய்ம்மை அன்பு
காட்டிக்கொடுத்த துரோக அன்பு
மறுதலித்த பயத்தின் அன்பு
ஓடி ஒளிந்த சுயநல அன்பு
மனித மாண்பை புதைத்த அன்பு

**ஆனால் கல்வாரியில் தியாகப் பலியான கடவுளின் அன்பு இன்று**

கைவிடாத பேரன்பு
காட்டிக்கொடுக்காத பாச அன்பு
மறுதலிக்காத தூய அன்பு
ஓடி ஒளியாத பரிவன்பு
உயிரையே கொடுக்கும்
உன்னத அன்பு
நீ தான் என் உயிர் என
ஆரத்தழுவும் அன்பு

**அன்றைய கல்வாரி பாடம்**

கள்வர்க்கான தண்டனை
கயவருக்கான நிந்தனை
பொய்யான தீர்ப்புக்கான
அரங்கேற்றம்
கொடூர சித்திரவதை தரும்
கூட்டம்
பதவிமோகம் மனித மாண்பை
விற்ற விநோதம்
சுயநலம் மனிதத்தை புதைத்த
அநீதம்

**ஆனால் இயேசு உயிர் ஈந்து இன்று சொல்லும் கல்வாரிப் பாடம்**

உன் மீட்புக்கு என்ன விலை என
கற்பிக்கும் பாடம்
உன் வாழ்வுக்காய் நான் ஏன்
உடைந்தேன் என்று
கற்பிக்கும் பாடம்
மனிதம் காக்க மனித உரு இழந்த
அன்புக்கதையை கற்பிக்கும்
பாடம்
சுயநலம் பதவிமோகம்
சுயபுகழ்ச்சி
அகந்தை பாரபட்சம் தூய
அன்புக்கில்லை என
கற்பிக்கும் பாடம்
உன்னை ஒருபோதும் நான்
மட்டும் கைவிடேன் என கற்பிக்கும்
பாடம்
என் உடனிருப்பு உனக்காய்
என்றும் என கற்பிக்கும் பாடம்
நீ உடைந்து போக ஒரு போதும்
அனுமதியேன் என
கற்பிக்கும் பாடம்
உன் வாழ்வை கட்டியெழுப்ப நான்
நொருங்கினேன் என
கற்பிக்கும் பாடம்
நீ விண்ணகம் செல்ல நான்
நரகவேதனை அனுபவித்தேன்
என கற்பிக்கும் பாடம்
உன் காயம் குணமாக நான்
நோயுற்றேன் என கற்பிக்கும்
பாடம்
தியாகத்தின் எல்லை, வடிவம்
இவற்றை கற்பிக்கும் பாடம்
நீயும் இறை, பிறர் அன்பில்
வாழ்ந்து எவ்வாறு பலியாக
வேண்டும் என எண்பிக்கும்
தெய்வீக பாடம்.



# உயிர்ப்புத் தரும் புது வாழ்வு

XIX

உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழ்

சிலுவையிலே அறையுண்ட அதே கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர்பெற்றுவிட்டார். அவருடைய உயிர்ப்பினால் உலகம் முழுவதும் புத்துயிர் பெறுகின்றது. தனக்குள் இருந்த உயிரை உலகம் புதுப்பித்துக் கொள்கிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பால், கிறிஸ்துவின் உயிர்ப்பில் அது நிகழ்கின்றது. கடவுளோடு ஒப்புரவான வாழ்வுதான் உயிர்ப்புத்தரும் புதுவாழ்வு! கடவுளோடு நாம் ஒப்புரவாகிவிட்டோம். முறிந்த உறவு இணைக்கப்பட்டுவிட்டது என்பதைக் காட்டும் வாழ்வுதான், கிறிஸ்துவில் நாம் வாழும் வாழ்வு நம்மில் கிறிஸ்து வாழும் வாழ்வு, இதுதான் உயிர்ப்புத் தரும் புதுவாழ்வு.

## அப்போஸ்தலர்களும் புதுவாழ்வும்

“கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு முதன்முதலாக சான்றுபகர்ந்தவர்கள் அப்போஸ்தலர்கள். இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் அப்போஸ்தலர்கள் மனம் மாறுகின்றனர். கிறிஸ்துவுடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்பு, கிறிஸ்துவை அவர்கள் அறிந்திருந்த தன்மை உணர்ந்து கிறிஸ்துவில் வாழ, கிறிஸ்துவுக்காக வாழ தொடங்குகின்றனர். கடவுளின் திட்டப்படி புனித சின்னப்பர் தோன்றுகின்றார். கிறிஸ்துவை சந்தித்த இவர் கிறிஸ்தவ சபைகளை உருவாக்குகின்றார். “கிறிஸ்துவின் வாழ்வது” பற்றி கற்றுத்தருகிறார்.

## கிறிஸ்துவில் வாழ்வு

“கிறிஸ்துவில்” என்ற சொற்றொடரை புனித சின்னப்பர் தெசலோனிக்கருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தைத் தவிர மற்ற எல்லாத் திருமுகங்களிலும் பயன்படுத்துகின்றார். கிறிஸ்துவின் உயிர்ப்பிலே நாம் கடவுளோடு ஒப்புரவாகின்றோம். கடவுளில் நாம் ஒப்புரவாகுவதோ கிறிஸ்துவில் இணைவதால்தான் கிறிஸ்துவில் நாம் இணையும் போது அவருடைய உயிர்ப்பில் பங்குபெறுகிறோம். அப்போது, கிறிஸ்து நம்மில் குடிகொள்கிறார். கிறிஸ்துவின் ஆவி நம்மிலே உறைய வருகின்றார். நாம் அதனால், கிறிஸ்துவில், கிறிஸ்துவின் அன்பில், சமாதானத்தில் வாழத்தொடங்குகின்றோம். விடுகிறோம். நம்முடைய உணர்வுகளெல்லாம் அவரில் ஒன்றிக்கின்றன. நாம் அனைவரும் கிறிஸ்துவில் இணையும் போது, புதிய இனமாகின்றோம். புதிய குலம் ஆகின்றோம். புதிய குலமாக உருப்பெறுவதால் நம்மிடையே முன்பிருந்த வேறுபாடுகள் மறைந்தே ஆகவேண்டும். கிறிஸ்துவிலே புது வாழ்வு வாழத் தொடங்குவதால் புதிய படைப்பாகின்றோம்.

## இறைவனின் மக்கள்

கிறிஸ்துவில் இணைந்த நாம் அனைவரும் கடவுளின் மக்கள் ஆகின்றோம். “அப்பா” என்று அழைக்கும் உரிமையைப் பெற்றவர்களாகின்றோம். இந்த உரிமைக்குக் காரணம் தூய ஆவியே. (உரோ 8:15)

## சாவிலிருந்தும் சட்டத்திலிருந்தும் விடுதலை




அருட்பணி. மா. றெஜிஸ் இராசநாயகம்

மாறுகின்றது. இவ்வுலகில் அவருடன் வாழும்போது ஒரு அளவிலேதான் அப்போஸ்தலர்கள் இயேசுவைப் புரிந்து வைத்திருந்தனர். கிறிஸ்துவைப் பற்றிய அவர்களது அறிவு அதற்குமேல் போகவில்லை. ஆனால், கிறிஸ்து உயிர்த்த பின் அவரைப் பற்றிய புது அறிவு அனைவருக்கும் கொடுக்கப்படவில்லை. அவரை விசுவாசித்தவர்கள் மட்டுமே, கிறிஸ்துவின் புதுத்தன்மையை, உயிர்ப்பைப் புரிந்து கொள்ள முடிந்தது. தான் முதலில் சொல்லியவைகளின் பொருளை அவர்களுக்குத் தெளிவாக்குகின்றார். (லூக் 24:8) அவர்களது அகக் கண்களைத் திறக்கின்றார் (லூக் 24:31-35). அப்புது அறிவை முழுமைப்படுத்தும் பணியை தூய ஆவிக்கு விட்டு விடுகிறார். இதனால், மகிழ்ச்சி அவர்களது தனிச்சொத்து ஆகிவிடுகின்றது. அவர்களின் தன்னலம் மறைந்து புது சகோதரத்துவம் மலர்ந்து புதுச் சமூகம் உருவாகின்றது. (தி.ப 2:42-46)

## திருச்சபையின் புதுவாழ்வு

கிறிஸ்துவின் இடத்தை தூய ஆவியார் நிரப்புவதனால் கிறிஸ்துவின் பிரிவை அப்போஸ்தலர்கள் உணர்வதில்லை. கிறிஸ்து அவர்களோடு இருப்பதாக

கிறிஸ்துவில் நாம் வாழத்தொடங்கும் போது அது புது அனுபவமாகிறது, படைப்பாகிறது. நம்மில் கிறிஸ்து வாழ்கிறார். இவ்வாழ்வைத்தான் புனித சின்னப்பர் “புது படைப்பு”, “புது வாழ்வு” என்று கூறுகின்றார். “ஒருவன் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால், புதியதொரு படைப்பாகிவிட்டான். பழையன கழிந்தன இதோ புதியன தோன்றியுள்ளன. (2கொரி 5:17)

## கிறிஸ்துவில் வாழ்வதால் வரும் விளைவுகள்

புதிய வாழ்வு என்பது நாம் கிறிஸ்துவில் கிறிஸ்துவோடு வாழும் வாழ்க்கையாகும். இப்புதுவாழ்வு நம்மைப் புது மனிதர்களாக்கி, நம்மிலே பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. நம்முடைய இயல்பிலே, இயற்கையிலே, வாழ்விலே, வாழும் வழிகளிலே இப்புதுவாழ்வு ஊடுருவுகிறது.

## புதிய இனம்

கிறிஸ்துவோடு நாம் புதிய வாழ்வு வாழத் தொடங்கும் போது அவரிலே முற்றிலும் உறைந்து

கிறிஸ்து தனது உயிர்ப்பால், சாவினை வென்று அதன் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றார். அதுமட்டுமன்றி, மோயீசன் சட்டத்தின் துணைகொண்டு பரிசேயர் ஏற்படுத்திய வெளிவேடங்களிலிருந்தும், ஆசாரங்களிலிருந்தும் நாம் விடுதலை பெற்றுள்ளோம். அன்பு ஒன்றுதான் அவர் கொடுத்த கட்டளை! சட்டம்.

## மனமாற்றம்

எவ்வாறு கிறிஸ்துவின் மனிதவதாரம் நம்மிலே மாற்றத்தை, திருப்பத்தை ஆசிக்கிறதோ, அவ்வாறே, உயிர்ப்பும் எதிர்நோக்குகிறது. இந்த மனமாற்றம் அவனது ஆன்ம, பொருளாதார, சமூக வாழ்விலே மாற்றத்தைக் காண்பிக்க வேண்டும்.

## தூய்மை

மனமாற்றம் ஒரு பொழுதும் மனிதனால் நிகழ்வதில்லை. அதற்கு ஆண்டவரின் அருள் தேவை. அந்த அருளின் உதவியால் தான் புதுவாழ்வு நிலை நிற்க முடியும். விசுவசிப்போர் அனைவரும் ஒரு வகையில் தூயவர்கள்! புனிதர்கள்! (உரோ 2:7) “அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னை அர்ப்பணமாக்குகிறேன்” (யோவா 17:19) என்று வேண்டினார் இயேசு.

## மகிழ்ச்சி

உயிர்ப்பின் மற்றொரு முக்கிய கொடை மகிழ்ச்சியாகும். கிறிஸ்தவன் வாழவேண்டிய புதுவாழ்வின் ஒரு அவசியமான தன்மையும் மகிழ்ச்சிதான். கிறிஸ்தவனுடைய மகிழ்ச்சி அவனைப் புது மனிதனாகக் காட்டுகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் மகிழ்ச்சியுள்ளவனாகவே வாழ்ந்தாக வேண்டும். கிறிஸ்தவர்கள் இருக்குமிடத்து மகிழ்ச்சி தெரியவேண்டும். “மகிழ்ச்சியாய் இருங்கள்! இடைவிடாது செபியுங்கள்! நன்றி கூறுங்கள்” (1தெச 5:14). “ஆண்டவரில் அகமகிழுங்கள்! மீண்டும் கூறுகின்றேன். அகமகிழுங்கள். காரணம் ஆண்டவர் அண்மையிலுள்ளார்” (பிலி 4:4) எனவே, மகிழ்ச்சியுடன் நாம் புதுவாழ்வை ஆரம்பிப்போம். புதுவாழ்வில் திளைத்திடுவோம்.

## எதிரிகள் ஆண்டவருடைய உயிர்ப்பை எதிர்பார்க்கின்றனர். ஆனால் ‘நண்பர்கள்’?

கல்லறைக்கு முத்திரையிடப்பட்டது: அதோடு கூடவே, வலிமையான காவலும் போடப்பட்டது: மூன்றாம் நாள் மிகுதியாக எதிர்பார்க்கப்பட்டது. இங்கே கவனிக்கத்தக்கது எதிரிகள் ஆண்டவருடைய உயிர்ப்பை எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் “நண்பர்கள்” என்று ஆண்டவரால் அழைக்கப்பட்டவர்கள் உயிர்ப்பை எதிர்பாராமல் முடங்கிக் கிடக்கின்றனர். விசுவாசிகள் இங்கே சந்தேகப்பேர்வழிகளாகின்றனர். சந்தேகப்பேர்வழிகள் விசுவாசிகளாகின்றனர். ஆண்டவர் பாடுகளைப்பற்றிப் பேசிய நேரங்களிலெல்லாம் இவர்கள் மரணத்தைப் பற்றித்தான் நினைத்தார்களே தவிர உயிர்ப்பை ஒருபோதும் நினைக்கவில்லை. ஆண்டருடைய கல்லறையில் வாயிற்கல் அடைக்கபட்டபொழுதே இவர்களுடைய நம்பிக்கையெல்லாம் புதைபட்டுபோயின.



ஞான ஒளி
GNANA OLI

25 பங்குனி, 2018

உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழ்

# உயிர்த்த இயேசுவின் உருவத்தைக் காண்பது ஓர் ஆன்மீக அனுபவம்.

XX

## உயிர்த்த இயேசுவின் உருவம்

உயிர்த்த இயேசுவின் மகிமையடைந்த உடலை ஊனக் கண்களால் எவரும் காணமுடியாது. நம்பிக்கையாளர்களால் மட்டுமே அதைக் காணலாம். அவரின் அவ்வுடலைக் கண்டவர்கள் பலர். அவர்களில் முதலிடம் பெறுபவர் அவரின் அன்னை மரியா. நற்செய்தி ஏடுகள் குறிப்பிடாதபோதிலும் இயேசு உயிர்த்தபின் தன் உயிர்ப்பின் உருவத்தை தன் தாய் மரியாவுக்கே முதன் முதலில் காண்பித்திருப்பார் என்பது மறுக்கமுடியாத உண்மை.

பாலுறவுக் பாவங்களால் பல அசுத்த ஆவிகளின் இருப்பிடமாக மகதல மரியா இருந்தார். அவரை இயேசு அப்பேய்களின் பிடிகளில் இருந்து விடுவித்தார். இதன்பின் மகதல மரியா இறையாட்சிக்கான இயேசுவின் தீவிர சீடராக மாறினார். தன் தாய் மரியாவுக்குப் பின் இவருக்கே இயேசு தன் உயிர்ப்பின் உருவத்தைக் காண்பித்தார்.

வாரத்தின் முதல் நாள் காலையில் இயேசு உயிர்தெழுந்த பின்பு அவர் முதலில் மகதல மரியாவுக்குத் தோன்றினார். அவரிடம் இருந்துதான் அவர் ஏழு பேய்களை ஓட்டியிருந்தார். மரியா புறப்பட்டுச் சென்று இயேசுவோடு இருந்தவர்களிடம் இதை அறிவித்தார் (மாற் 16:9-10).

அத்தோடு விடியற்காலையில் கல்லறைக்குச் சென்ற வேறு பெண்களும் திரும்பிவந்து இயேசு உயிர்த்துவிட்டதை வானதூதர்கள் தங்களுக்குக் கூறியதாக சீடர்களுக்குத் தெரிவித்தார்கள்.

இதோ மின்னொளி வீசும் ஆடை அணிந்த இருவர் அவர்களுக்குத் தோன்றினார். பெண்களோ அச்சம்கொண்டு முகம் கவிழ்ந்து நின்றனர். வானதூதர்கள் அவர்களைப் பார்த்து உயிருள்ளவரை இறந்தோரிடையே தேடுவானேன் அவர் இங்கே இல்லை உயிர்த்துவிட்டார். மனுமகன் பாவிகளிடம் கையளிக்கப்பட்டு சிலுவையில் அறையுண்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும் என்று அவர் சொன்னதை நினைவுகூருங்கள் என்றார்கள் (லூக் 24:4-6).

பெண்களின் பேச்சு பிதற்றலாக இருக்கலாம் என்று சோதித்து அறிந்துகொள்ள பேதுருவும், யோவானும் இயேசுவின் கல்லறைக்கு விரைந்து சென்றார்கள். இயேசுவின் உடல் கல்லறையில் இல்லாததைக் கண்ட அவர்கள், பெண்களின் கூற்று உண்மைதான் என்பதை ஒப்புக்கொண்டார்கள்.

மகதல மரியா சீமோன் பேதுருவிடமும், யோவானிடமும் ஆண்டவரைக் கல்லறையில் இருந்து யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டனர் அவரை எங்கே வைத்தனரோ தெரியவில்லை என்றார். இதைக் கேட்ட இவர்கள் கல்லறைக்குப் புறப்பட்டனர். கல்லறைக்குள் நுழைந்ததும் அங்கு துணிகளையும் இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டு நம்பினார்கள். தான் இறந்து உயிர்த்தெழவேண்டும் என்று இயேசு கூறியிருந்ததை இவர்கள் அதுவரை புரிந்துகொள்ளவில்லை (யோவா 20:1-10).

அச்சத்தால் கதவுகளை மூடிக்கொண்டு வீட்டினுள்ளே ஒடுங்கிப்போயிருந்த சீடர்களுக்கு அவர் தன் உயிர்ப்பின் மகிமையான உருவத்தைக் காண்பித்தார். அப்போது அவர்கள் அவரைக் கண்டு ஆனந்தம் கொண்டார்கள்.

வாரத்தின் முதல் நாள் மாலைவேளை சீடர்கள் யூதர்களுக்கு அஞ்சி தாங்கள் இருந்த வீட்டின் கதவுகளை தாழிட்டு மூடி வைத்திருந்தார்கள். இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று உங்களுக்கு சமாதானம் என்றார். அப்போது அவர் ஆணிகள் துளைத்த தம் கைகளையும் ஈட்டியால் குத்தப்பட்ட தம் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்து, தன் உயிர்ப்பின் உருவம் எவ்வாறு உள்ளது என்பதை அவர்கள் பார்க்கும் படியாகச் செய்தார். ஆண்டவரைக் கண்டதால் அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள் (யோவான். 20:19-20).

இயேசு சீடர்களுக்கு தன் மகிமையான உயிர்த்த உருவத்தைக் காண்பித்தபோது அவரின் திருத்தூதுர்களில் ஒருவரான தோமா ஏதோவொரு காரணத்துக்காக வெளியே போயிருந்தார். அவர் வீடு திரும்பியதும் மற்றய சீடர்கள் ஆண்டவரைக் கண்டோம் என்றார்கள். தான் இயேசுவின் ஆணிகள் துளைத்த கைகளைப் பார்த்து ஈட்டியால் குத்தப்பட்ட விலாவைத் தொட்டுத் தெரிந்துகொண்டால் மட்டுமே நம்புவேன் என்றார்.

எட்டு நாட்களுக்குப் பின் சீடர்கள் ஒன்றாயி-ருந்தபோது தோமாவும் அவர்களோடு இருந்தார். கதவுகள் மூடப்பட்டிருந்தும் இயேசு வந்து அவர்கள் நடுவே நின்று உங்களுக்குச் சமாதானம் என்று சொன்னார். பின்னர் தோமாவிடம் என் கைகளைப் பார். உன் கையால் என் விலாவைத் தொடு, இவ்வாறு ஐயம் தவிர்த்து நம்பு என்றார். உயிர்த்த ஆண்டவரின் உருவத்தைக் கண்டதும், தோமா நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள் என்று அவரிடம் சரணடைந்தார் (யோவான். 20:26-29).

கலிலேயாவில் இருந்து எருசலேமுக்கு வந்த பாதையில் பல சீடர்களை இயேசு தன்னோடு அழைத்துக்கொண்டு வந்தார். எம்மாவு சீடர்களான இருவர் இவரோடு இணைந்தவர்களில் இறுதியானவர்களாக இருந்திருக்கலாம். இறையாட்சியை எழுப்பப்போவதாக இயேசு இவர்களுக்குக் கூறியிருந்தார். உலக அரசாட்சியைப் போன்று இதுவும் இருக்கும் என்று இவர்கள் எண்ணியிருந்தார்கள். ஆனால் இயேசு கொலைசெய்யப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது இவர்களுக்குப் பெரிய ஏமாற்றத்தைத் தந்தது. தங்கள் கனவுகள் எல்லாம் தவிடு பொடியானதால், இவர்கள் மீண்டும் தங்கள் ஊருக்குச் சென்று தங்கள் தொழில்களை முன்னெடுக்க திரும்பிக்கொண்டிருந்தார்கள். தங்கள் பயணத்தின்போது இவர்கள் உயிர்த்த இயேசுவைச் சந்தித்தார்கள். ஆனால் அவர் இவர்களின் ஊனக் கண்களுக்குத் தெரியாதிருந்தார். வீட்டில் அப்பம் பிடும்போது அவர்கள் அவரின் உயிர்த்த உருவத்தைக் கண்டார்கள்.

அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திரு-ந்தபோது, அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். உடனே அவர் அவர்களிடமிருந்து மறைந்துபோனார். அப்போது அவர்கள் ஒருவர் ஒருவரை நோக்கி “வழியில் அவர் நம்மோடு பேசி மறைநூல் விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா” என்று பேசிக்கொண்டார்கள் (லூக்கா 24:30-32).

புனித பவுல் கிறிஸ்தவர்களைக் கொடுமைப்-படுத்திக் கொல்லுவதற்காக எருசலேமில் இருந்து தமஸ்கு நகருக்குக் சென்றார். அவர் போகும் வழியில் உயிர்த்த இயேசுவின் உருவத்தைக் கண்டார். ஒளி மயமான அந்த உருவம் முதலில் அவரைக் குருடராக்கி பின்னர் பார்வையைக் கொடுத்தது.

திடிரென வானத்தில் தோன்றிய ஒரு ஒளி அவரைச் சூழ்ந்து வீச அவர் தரையிலே விழுந்தார். ஆண்டவரே நீர் யார் என்று பவுலின் வினாவுக்கு நீர் துன்புறுத்தும் இயேசு நான்தான் என்று அந்த ஒளி பேசியது. கண்கள் குருடான நிலையில் பவுல் அனனியா என்பவரின் வீட்டுக்குச் சென்றார். அவரோ பவுல்மீது தன் கரங்களை வைக்க அவர் மீண்டும் பார்வை பெற்றார் (தி.ப. 9:1-19).

உயிர்த்த இயேசுவின் உருவத்தைக் காண்பது ஓர் ஆன்மீக அனுபவம். இக்காலத்தில் இவரை நாம் எங்கே காணலாம் என்ற வினா நமக்கு எழுவது இயல்பே. உயிர்த்த இயேசு விண்ணகம் சென்று வானகத் தந்தையின் வலப்பக்கத்தில் இருந்தாலும், நான் எந்நாளும் உங்களோடு இருக்கிறேன் என்ற



வாக்குறுதியால் அவர் மகிமையடைந்த உடலோடு இன்றும் நம்மத்தியில் உலாவி வருகிறார். நம்பிக்கையோடு அணுகினால் இவரின் உருவத்தை பின்வரும் நிகழ்வுகளில் காணலாம்.

**இறைவார்த்தையை ஆழ்ந்த தியானத்தோடு வாசிக்கும்போது தூய ஆவியாரின் துணையோடு உயிர்த்த இயேசுவின் உருவத்தை வார்த்தை வடிவிலே காணலாம்.**

✿✿✿

**திருப்பலியின்போது தூய ஆவியாரின் ஆற்றலால் அப்பமும் இரசமும் உயிர்த்த ஆண்டவரின் உடலாகவும் இரத்தமாகவும் மாறும்போது உயிர்த்த இயேசுவின் உருவத்தை உணவின் வடிவிலும் மருந்து வடிவிலும் காணலாம்.**

✿✿✿

**தூய ஆவியாரின் துணையோடு உண்மையான மனச்சான்றில் நல்லதையும் சரியானதையும் தெரிந்தெடுக்கும்போது உயிர்த்த இயேசுவின் உருவத்தை மனச்சான்றின் ஒலியில் காணலாம்.**

✿✿✿

**இறையாட்சியின் மதிப்பீடுகளான உண்மை, அன்பு, நீதி, இரக்கம், மன்னிப்பு, அமைதி, மகிழ்ச்சி, ஒற்றுமை போன்ற அனைத்தும் தூய ஆவியாரின் ஆற்றலால் ஒருவரின் வாழ்வில் உயிராற்றலுள்ள செயலாக வெளிப்படும்போது, உயிர்த்த இயேசுவின் உருவத்தை இவர் இறையாட்சியாக கண்டுகொள்கிறார்.**

✿✿✿

**ஆக்கம் :-**

**அருட்தந்தை. பிலிப் அடிகளார்** ivDei

**“கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லையென்றால், நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கையும் பொருளற்றதாய் இருக்கும்” (1 கொரி 15:14)**




அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்